# சுவிசேஷங்களுக்கு முன்னுரையும் மத்தேயு சுவிசேஷத்தைப் பற்றிய ஆய்வும்

புத்தகம் - 10

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்,
சென்னை-600 010.

Introduction to the Gospels &
A Survey of Matthew
Booklet - 10
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

*For additional booklets write to:*
**India Bible Literature,**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.
Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

Introduction to the Gospels &
A Survey of Matthew
Booklet - 10
Tamil

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

*(For private circulation only)*

ICM / Tam - 10 / 2004

வேத பாடசாலை **10**

# சுவிசேஷங்களுக்கு முன்னுரையும் மத்தேயு சுவிசேஷத்தைப் பற்றிய ஆய்வும்

**இயேசுவின்
உவமைகள்**

அதிகாரம் 1

# வேதாகமத்திலுள்ள சிறந்த புத்தகங்கள்

புதிய ஏற்பாட்டிலுள்ள முதல் நான்கு புத்தகங்களும் ‘இயேசுவின் வாழ்க்கை சரிதை’யை சொல்லும் புத்தகங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனென்றால், இதுவரை கொடுக்கப்படாத அதிக முக்கியமான வாழ்க்கை வரலாற்று பற்றிய விவரங்களை அதிலிருந்துதான் நாம் பெற்றுக் கொள்கிறோம். எனினும், இந்த நான்கு புத்தகங்களும் இன்றுள்ள வாழ்க்கை வரலாற்றைப் போன்றதல்ல. ஏனென்றால் இரண்டு புத்தகங்களில் அவரது பிறப்பு மற்றும் அவர் வாழ்க்கையின் முதல் முப்பது வருடங்களைக் குறித்து எந்தத் தகவலும் தரப்படவில்லை.

மாற்கு சுவிசேஷத்தில் ‘இயேசு வந்தார்’ என்று பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. பின்பு முப்பது வயதான இயேசுவை நாம் சந்திக்கிறோம். பின்பு அவரது வாழ்க்கையின் கடைசி மூன்று வருடங்களில் அவரைப் பின்பற்றுகிறோம். யோவான் சுவிசேஷத்தை நாம் படிக்கும்போது, இது உண்மையாக இருப்பதைக் கண்டு கொள்கிறோம். மத்தேயு சுவிசேஷத்தில், இயேசுவின் பிறப்பு சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் முதல் முப்பது வருட வாழ்க்கையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. லூக்கா மட்டுமே, இயேசுவின் பிறப்பைப் பற்றி சில விவரங்களைத் தருகிறார். லூக்கா அந்த மௌனத்தைக் கலைந்து, இயேசுவின் முதல் முப்பது வருட வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சிறிய நிகழ்ச்சியைக் குறித்து நமக்கு சொல்கிறார். இந்த ஆசிரியர்களின் முக்கிய நோக்கம். இயேசு வந்ததைப் பற்றியும், அவர் ஏன் இந்த உலகிற்கு வந்தார் என்பதையும் நமக்குச் சொல்வதேயாகும்.

### சுருக்கமான சுவிசேஷங்கள்

இந்த நான்கு சுவிசேஷங்களையும் நீங்கள் படிக்கும்போது, முதலாவது நீங்கள் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியவற்றில் சொல்லப்பட்ட விவரங்கள்



பொதுவானதாக இருக்கிறது. யோவான் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் தொண்ணூறு சதவீத விவரங்கள் யோவான் எழுதிய சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. முதல் மூன்று சுவிசேஷங்களும் ‘‘சுருக்கமான சுவிசேஷங்கள்’’ என அழைக்கப் படுகின்றன.

மாற்கு, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறார். தெளிவானதும் சுருக்கமானதுமான ரிப்போர்ட்டுகளைத் தயாரிக்கும் பத்திரிகை நிருபர்களும் எழுத்தாளர்களும், அதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலாவது மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களைப் படித்து விட்டு மாற்கு சுவிசேஷத்தைப் படிக்க வேண்டும். வேத பண்டிதர்களின் கருத்தின்படி பேதுருவிடமிருந்து தகவல் பெற்று, மாற்கு தான் முதலில் சுவிசேஷத்தை எழுதினான். மத்தேயுவும் லூக்காவும் தங்களது சுவிசேஷத்தை எழுதுவதற்கான அஸ்திபாரமாக, மாற்குவின் சுவிசேஷத்தைப் பயன்படுத்தினர் என்பது இந்த அறிஞர்களின் கருத்தாக இருந்தது. முதல் மற்றும் மூன்றாவது சுவிசேஷங்களின் ஆசிரியர்கள், மாற்கு எழுதாத ஒரு காரியம் இயேசுவின் வாழ்க்கையில் இருந்ததாகத் தெளிவாக நம்பினர். அந்தக் காரியத்தை நம்மிடம் பகிர்ந்து கொள்ள முற்பட்டபோது அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டனர்.

யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் தொண்ணூறு சதவீத விவரங்கள் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இல்லாததால், அந்த முதல் மூன்று சுவிசேஷங்களில் காணப்படாத இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தைப் பற்றிய காரியங்களைக் கொடுக்க அப்போஸ்தலனாகிய யோவான் விரும்பினான். யோவான் சுவிசேஷம் அநேக காரணங்களில் விந்தையானதாக இருப்பதால், இந்த சுருக்கமான சுவிசேஷங்களையும், யோவான் சுவிசேஷத்தையும் தனித்தனியாக நாம் ஆய்வு செய்வோம்.

உலக சரித்திரத்தை அதிகமாக, இயேசு வாழ்ந்த வருடங்களுக்கு முன்பாகவும், அவர் வாழ்ந்த வருடங்களுக்குப் பின்னாகவும் பிரிக்கின்றனர். உலகத்திலுள்ள எந்த முக்கியமான பத்திரிகை அல்லது செய்தித்தாளை எடுத்துக் கொண்டாலும், அதில் இன்றையத் தேதி இருக்கும். அதிலுள்ள தேதி, இயேசுவின் வாழ்க்கைக்குப் பின்பு, எத்தனை வருடங்களாக இருக்கிறது என்பதை புரிய வைக்கும். இந்த நான்கு சுவிசேஷங்களையும் நாம் ஆய்வு செய்து தொகுக்கும்போது, 33 வருடங்கள் மட்டுமே வாழ்ந்து, உலக சரித்திரத்தில் மிகப் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணிய ஒரு மனிதரின் வாழ்க்கையைப் பற்றிய விரிவான விவரங்களை நாம் படித்திருப்போம்.

இயேசு சிலுவையிலறையப்பட்டு, மரணத்திலிருந்து உயிரோடெழுந்த பின்பு அவர் அப்போஸ்தலர்களுடன் உரையாடினார். தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளும்படியாக வேதவசனங்களைப் பற்றி ஏதோ அவர்களிடம் பேசியதாக நாம் வாசிக்கிறோம். அது அவர்களுக்கு வேதவசனத்தைப் புரியவைத்தது. அப்போஸ்தலர்கள் மூன்று வருடங்கள் இயேசுவுடன் இருந்த போதும், அவர்கள் வேதவசனங்களை தெளிவாக புரிந்து கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளும்படியாக அவர்களிடம் இயேசு வேதவசனங்களைப் பற்றி கூறியது என்ன? நாம் இப்படியாக வாசிக்கிறோம். "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (லூக்கா 24:25-27, 44, 45). வேதவசனங்கள் எல்லாம் கிறிஸ்துவைப் பற்றியது என்பதை அவர்கள் கேட்டபோது, அவர்களுடைய வாழ்க்கையில் முதல்முறையாக வேதவசனங்களை அப்போஸ்தலர்கள் புரிந்து கொண்டனர். (வேத வசனங்கள் எல்லாம் அவரைப்பற்றியது என்பதை அப்போஸ்தலர்களிடம் அவர் சொன்ன போது, அவர் பழைய ஏற்பாட்டை வெளிப்படையாக குறிப்பிட்டுப் பேசினார்).

இயேசு வேதபாரகர் மற்றும் பரிசேயரைப் பார்த்து, "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவான் 5:39, 40) என்றார்.

ஆஸ்வால்டு சேம்பர்ஸ் என்ற ஆங்கிலேய எழுத்தாளர், இந்த இரண்டு வசனங்களும், வேதாகமம் முழுமைக்கும் திறவுகோலாக இருக்கிறது என நம்பினார். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளிலுள்ள எல்லாமே இயேசுகிறிஸ்துவைப் பற்றியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளும் வரை நம்மால் ஒருபோதும் வேதாகமத்தை உண்மையாக புரிந்து கொள்ள முடியாது. வேதாகமம் நாகரீகத்தைப் பற்றிய வரலாறு அல்ல. வேதாகமம் விஞ்ஞான பாடபுத்தகமாக கொடுக்கப்படவில்லை. வேதாகமம் இரட்சிப்பு மற்றும் மீட்பைப் பற்றிய ஒரு பாடபுத்தகம். இயேசு கிறிஸ்துவை நமது இரட்சகராகவும் மீட்பராகவும் வெளிப்படுத்தவும் நமது இரட்சகரும் மீட்பரும் இந்த உலகிற்கு வந்த வரலாற்று சம்பவத்தை நமக்குத் தருவதும் தான் வேதாகமத்தின் நோக்கமாகும்.



மதத்தலைவர்கள் இயேசுவிற்கு செவிக்கொடுக்கும்படியாக ஆவிக்குரிய காதுகளைப் பெற்றிருந்தால், பழைய ஏற்பாட்டு வசனங்களை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்யும் திறவு கோலை இயேசுவிடமிருந்து அவர்கள் பெற்றிருப்பார்கள். அவர்களுக்கு முன்பாக அவர்களின் மேசியா நின்று கொண்டிருந்த அற்புதத்தைக் காணும்படியாக அவர்கள் கண்கள் திறந்திருக்கும்.

வேதாகமம் முழுவதும், இயேசு கிறிஸ்துவைப் பற்றியது என்ற எளிய சத்தியம், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை இன்று நாம் புரிந்து கொள்ளச் செய்யும். இந்த நான்கு சுவிசேஷங்கள் வேதாகமத்தில் அதிக முக்கியமான புத்தகங்களாகும். ஏனென்றால், வேதாகமம் இயேசு கிறிஸ்துவைப் பற்றியதாகும். மட்டுமல்ல, இந்த நான்கு சுவிசேஷங்களில் ஆர்வமூட்டும் அவரது சரித்திரமும் அடங்கியுள்ளது.

## சுவிசேஷங்கள் எல்லாம் எதைப் பற்றியது

நாம் விசுவாசிக்கும் அனைத்தும் இந்த உலகத்திற்கு தேவன் கொடுத்த சத்தியத்தைப் பற்றிய பெரிய வெளிப்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்த சத்தியம், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும் போதனையுமாகும். இந்த சுவிசேஷங்களில் ஒன்று, ''தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்'' (யோவான்: 1:18) என்று நமக்கு சொல்லுகிறது. 'அவரை வெளிப்படுத்தினார்' என்று மொழிப்பெயர்க்கப்பட்ட வார்த்தைக்கான கிரேக்கப் பதமான எக்ஸிஜூடெட் (exegeted) என்பதற்கு 'சத்தியத்தை வெளிக் கொண்டு வருதல் என்று அர்த்தமாகும்.'

தேவனோடு, இயேசுவுக்கிருந்த ஒருமனப்பட்ட ஆவியினால், தேவனைக் குறித்து நாம் புரிந்து கொள்ள முடிந்த சத்தியம் எல்லாவற்றையும் அவர் வெளிப்படுத்தினார். இதன் அர்த்தம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவே உலகுக்கு தேவன் அளித்த சத்தியத்தின் சிறந்த வெளிப்பாடாகும். அவர் செய்தது, அவர் சொல்லியது அவர் இருந்தது எல்லாமே தேவனை 'வெளிப்படுத்தின'. வேதாகமத்தில், சுவிசேஷங்கள் அதிமுக்கியமான புத்தகங்களாகும். ஏனென்றால், தேவனை முழுவதும் வெளிப்படுத்திய இயேசுவைக் குறித்த எல்லாவற்றையும் அவைகள் நமக்குச் சொல்லுகின்றன.

இந்த நான்கு சுவிசேஷங்களும் எதைக் குறித்துச் சொல்லுகின்றன என்பதைக் குறிக்கும் இன்னொரு வசனம் யோவான் சுவிசேஷத்தில் உண்டு. யோவான் இப்படியாக எழுதுகிறார்: "ஆதியிலே வார்த்தை (இயேசு) இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது'' (1:1). பின்பு இதே அதிகாரத்தில், "அந்த

வார்த்தை மாம்சமாகி,... நமக்குள்ளே வாசம் பண்ணினார்'' (14) என நாம் வாசிக்கிறோம்.

இந்த முக்கியமான வசனத்தை விளக்குவதற்கு உங்கள் கற்பனையை பயன்படுத்தும்படி அழைக்கிறேன். எறும்புகளினால் உங்களுக்குப் பிரச்சினை இருப்பதாக கற்பனைச் செய்து கொள்ளுங்கள். மேஜையில் இனிப்பு எதையாவது வைத்துவிட்டுச் சென்று விட்டால், இரவில் நீங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது உங்கள் மேஜை முழுவதும் எறும்புகள் சூழ்ந்திருக்கும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒருவேளை நீங்கள் தீர்மானித்திருப்பீர்கள். அதனால் எறும்புகள் உங்கள் வீட்டிற்குப் பின்புறம் ஒரு பெரிய புற்றிலிருந்து வருவதை நீங்கள் கண்டுபிடித்து, அவைகளை அழிக்கும்படி, அந்த புற்றின் மீது மண்ணெண்னை ஊற்றி தீ வைப்பீர்கள். தீ பற்றி எரியும்போது, எறும்புகள் மறைந்து போகும். தீ அணைந்து போனதும், திரும்பவும் வெளியே வந்து வீட்டிற்குள் வருவதும் போவதுமாக இருக்கும்.

இந்த எறும்புப் பிரச்சினையை எவ்வாறு நீங்கள் தீர்ப்பீர்கள்? உங்களுக்கு எறும்புகள் மீது எந்த வெறுப்புமில்லை. உங்கள் பிரச்சினை நீங்கள் சாப்பிடும் மேஜையில் முழுவதும் எறும்புகள் நிறைந்திருப்பதுதான். ஒருவேளை உங்களால் எறும்புகளுடன் பேச முடிந்தால், அவைகளிடம், "நான் உங்களை வெறுக்கவில்லை. நீங்கள் என் மேஜையில் இருப்பதைத் தான் நான் விரும்பவில்லை. நீங்கள் என் வீட்டை விட்டு வெளியே இருந்தால், உங்கள் புற்றினருகிலேயே நிறைய உணவை உங்களுக்கென்று வைக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்,'' என்று சொல்லலாம். இப்போது நீங்கள் எறும்புகளுடன் தொடர்பு வைக்க முடியாதது தான் உங்களது மிகப் பெரிய பிரச்சனையாகும்.

இன்னும் அதிகமாக கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எறும்புகளை நேசிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அவைகளுக்காக எதையும் செய்யும்படியான ஒரு வல்லமை உங்களுக்கிருந்தால், நீங்கள் ஒரு எறும்பாக மாறி அதனுடைய புற்றுக்குள் சென்று, "எறும்புகளே, நான் ஒரு எறும்பைப் போலிருக்கலாம் ஆனால் நான் எறும்பல்ல. நான் அந்தப் பெரிய வீட்டில் வசிப்பவன். எனக்கு உங்களைக் குறித்த ஒரு பிரச்சினை இருக்கிறது. உங்களோடு ஒரு ஒப்பந்தம் செய்ய முடிந்தால், உங்களுக்காக ஒரு தியாகம் செய்ய நான் ஆயத்தமாக இருக்கிறேன். என் வீட்டை விட்டு நீங்கள் வெளியே இருக்க ஒப்புக் கொண்டால், உங்கள் புற்றின் அருகில் அதிகமான உணவை நான் வைப்பேன்!'' என்று சொல்லக்கூடும்.

இது ஒரு அபத்தமான உதாரணம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் என்ன சொல்ல முயற்சிக்கிறேன் என்பதை உங்களால் அறிய முடிகிறதா? வார்த்தையானது, எண்ணங்களின் வாகனம். தேவனிடம் இருக்கும் சத்தியத்தை அவர் நம்மிடம் கொடுக்க விரும்புகிறார். மட்டுமல்ல, இரட்சிப்பின் உடன்படிக்கையை நம்மில் நிலை நிறுத்த விரும்புகிறார். நமது அன்பான பரலோக தந்தை நம்மை அதிகமாக நேசித்ததினால் ஒரு பெரிய தியாகத்தை செய்யும் பொருட்டு, சத்தியத்தை நமக்குக் கொடுக்க, பரலோகத்தை விட்டு வந்தார். ஆனால், அவர் தேவன், நாம் மக்கள். ஒரு பெரிய கருத்தை சொல்வதற்கு சிறந்த வழி, ஒரு நபரின் மூலம் அந்த கருத்தை சொல்வதாகும். அதனால்தான், தேவன் அவரது குமாரனை (வார்த்தையை) அழைத்தார். பின்பு அந்த வார்த்தை மாமிசமாகி, நம்மிடையே 33 வருடங்கள் வாழ்ந்தார் என நம்மிடம் சொல்கிறார்.

எறும்புகளுடன் தொடர்பு கொண்டு, அவைகளின் நன்மைக்காக எறும்பாக மாறுவது நிச்சயமாக ஒரு மனிதனுக்கு தன்னையே தாழ்த்திக்கொள்வது போன்றிருக்கும். எனினும் நம்மிடம் தொடர்புகொண்டு, நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி, தேவன் மனித ரூபமானார் என்று வேதாகமம் போதிக்கும்போது, அதுதான் இந்த உலகம் இதுவரை பார்த்திராத சிறந்த தாழ்மையாகும்.

## இயேசு வருகிறார்! இயேசு வந்து விட்டார்!

வேதாகமத்தில் சொல்லப்பட்ட அடிப்படை பிரச்சினை என்னவென்றால், மனிதன் தேவனை விட்டு விலகிச் சென்று விட்டான். தேவனோடு அவன் மறுபடியும், ஒப்புரவாக்கப்பட வேண்டும் என்பதாகும். பழைய ஏற்பாட்டு செய்தி இந்த பிரச்சனைக்கான தீர்வை "இயேசு வருகிறார்'' என்ற வார்த்தைகளில் கொடுத்துள்ளது. புதிய ஏற்பாட்டு செய்தி, இந்த பிரச்சினைக்கு "இயேசு வந்து விட்டார்' என்ற வார்த்தைகளில் தீர்வைக் கொடுக்கிறது.

பழைய ஏற்பாடு முழுவதும், தீர்க்கதரிசிகளும், மற்றவர்களும் "நான் வேதம் கூறுவதை அது நடக்கப்போகிறதை அறிவேன். உலகத்திற்கு மேசியாவை அவர் அனுப்பப்போகிறார்'' என்று நான் நம்புகிறேன்'', என்கின்றனர். யோபு "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்'' என்று தீர்க்கதரிசனமாகச் சொல்வதை நாம் கேட்கிறோம். இருப்பினும், யோபு "நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால்...'' எனக் கதறுவதையும் நாம் கேட்கிறோம் (யோபு 19:25, 23:3).

இந்த சுவிசேஷங்களில், சீமோன் பேதுருவின் சகோதரன் அந்திரேயா, போன்றவர்கள், ''மேசியாவைக் கண்டோம்'' என்று சொல்வதை நாம் கேட்கிறோம் (யோவான் 1:41). மேசியா ஒரு நாளில் வருவார் என சமாரிய ஸ்திரீ கூறும்போது, ''நானே அவர்'',

எனத்தெளிவாக இயேசு பதிலளிப்பதை நாம் கேட்கிறோம். பழைய ஏற்பாட்டில், தீர்க்கதரிசிகளினால் வாக்களிக்கப்பட்ட மேசியா தாம்தான் என இயேசு உரிமை கொண்டாடுகிறார் (யோவான் 4:25, 26).

முதல் நான்கு புத்தகங்களும் 'சுவிசேஷங்கள்' என அழைக்கப்படுகின்றன. ஏனென்றால், ' சுவிசேஷம்' என்ற வார்த்தைக்கு 'நற்செய்தி' என்று அர்த்தம். அப்போஸ்தலர்கள், இந்த சுவிசேஷங்களின் நற்செய்தியை தொகுத்து வழங்கும்போது, இயேசு வந்ததினால், தேவன் நம்மோடு ஒப்புரவானார் என்பதையும் அவர்கள் நமக்குச் சொல்லுகின்றனர். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஆர்வமூட்டும் இந்த நான்கு வரலாற்று சரிதையில் கொடுக்கப்பட்ட சவாலை இப்படியாகத் தொகுத்து வழங்குகின்றனர்: ''...தேவனோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்'' (2 கொரிந்தியர் 5:20).

புதிய ஏற்பாட்டை ஒன்று சேர்ந்து நாம் ஆய்வு செய்யும்போது என் விண்ணப்பம் என்னவென்றால், நீங்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தால், இயேசு கிறிஸ்துவின் மூலம் அவரோடு ஒப்புரவாகும் அனுபவத்தை நீங்கள் பெற வேண்டும் என்பதாகும். நீங்கள் ஒப்புரவாகி, கிறிஸ்துவின் மூலம் தேவனோடு உறவுகொள்ளும்படி, திரும்பவும் வரும்போது நீங்கள் உங்களோடும், மற்றவர்களோடும் ஒப்புரவாகக் கூடும். புதிய ஏற்பாட்டு செய்தியின் சாராம்சமே இது தான்.

புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது, பின்வரும் செய்தியை எதிர்பாருங்கள். அந்தச் செய்தி: தேவனோடு சமாதானம், உங்களோடு சமாதானம், மற்றும் மற்றவர்களோடு சமாதானம்; ஏனென்றால், வாக்களிக்கப்பட்ட மேசியாவாகிய, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து விட்டார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.



அதிகாரம் 2

# ஊழியத்தைப் பற்றிய இயேசுவின் அறிக்கைகள்

சுவிசேஷங்களை நான் கவனமாகப் படிக்கும்போது, இயேசு, ஒரு ஊழியத்துக்காக வந்த மனிதர் என்பதையும், தமது ஊழியம் என்ன என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதையும் நாம் கண்டு கொள்கிறோம். என்னோடு சேர்ந்து சுவிசேஷங்களை நீங்கள் வாசிக்கும்போது, இயேசு, தான் ஏன் வந்தார் என்று சொல்வதைக் கேளுங்கள். அவரது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் நோக்கத்தைக் குறித்து அவர் தெளிவாகக் கூறும்போது, அவர் யார் என்பதையும், இந்த உலகத்திற்கு ஏன் வந்தார் என்பதைக் குறித்தும் எந்தவித சந்தேகமுமில்லை. உதாரணமாக, யோவான் சுவிசேஷத்தில், இயேசு தமது ஊழியம், அதன் நோக்கம் ஆகியவற்றைப்பற்றி இப்படியாக விவரிப்பதை நாம் கேட்கிறோம். ''பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது'' (9:4). அவர் அப்போஸ்தலர்களிடம்,''... நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு... நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' என சொல்வதையும் நாம் கேட்கிறோம் (4:32, 34).

இயேசு தம் மூன்று வருட ஊழியத்தின் முடிவிற்கு வந்தபோது கெத்சமனே தோட்டத்திற்கு சென்று இப்படியாக ஜெபித்தார்: ''பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' (17:4). சிலுவையில் அவர் பேசிய ''முடிந்தது'' (14:30) என்ற கடைசி வார்த்தை வெற்றியின் மிகப்பெரிய கதறலாயிருந்தது.

## வாழ்க்கையின் நோக்கம்

இயேசு ஒரு முன்மாதிரியான வாழ்க்கை நடத்தினார். அது மனித வாழ்வின் நோக்கத்தை நமக்குக்காட்டியது. பக்தி நிறைந்த பெற்றோரின் பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட்ட மதக் கோட்பாடு இப்படியாகச் சொல்லுகிறது: ''மனிதனின் பிரதானமான நோக்கம், தேவனை மகிமைப்படுத்துவதும், நித்திய காலமாக அவரை நம்மில் அனுபவிப்பதுமாகும்.'' மனித வாழ்க்கையின் நோக்கமே தேவனை மகிமைப் படுத்துவதாகும். ஆனால், அதன் அர்த்தம் என்ன? தேவனை எவ்வாறு மகிமைப்படுத்தலாம்?

இயேசு ஜெபித்தபோது அந்தக் கேள்விக்குப் பதிலளித்தார்: "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும். மட்டுமல்ல, அதற்கான விலையை எனக்குக் கூறும். அதன் விலையைக் கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்'' (யோவான் 12:23-28). அவர் வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் தேவனை மகிமைப்படுத்தும் விலையை அவர் செலுத்தினார். அவரது வாழ்க்கையின் முடிவில், ''பூமியிலே நான் உம்மைப் மகிமைப் படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்... முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார்'' (17:4, 19:30).

1950களில், ஜிம் எலியட் என்ற ஒரு இளம் வாலிபனும், ஈக்கடார் என்ற இடத்தில் அவனுடன் இருந்த மற்ற நான்கு மிஷனரிகளும், அயுகா (Auca) இந்தியர்களினால் கொலை செய்யப்பட்டு, ஒரு நதியில் தூக்கியெறியப்பட்டனர். இராணுவத்தினர் உடல்களை மீட்கச் சென்றபோது, ஜிம் எலியட்டின் உடலையும், அவனது நாட்குறிப்பேட்டையும் கண்டு பிடித்தனர். அந்தக் குறிப்பேட்டில், தண்ணீரினால் கறைப்பட்டுப் போன பின்வரும் வார்த்தைகளை அவர்கள் வாசித்தனர்: "நீங்கள் மரிக்க வேண்டும் என்ற உங்களுக்கான தேவனின் திட்டமும் நோக்கமும் நிறைவேறும் காலம் வரும்போது, நீங்கள் செய்ய வேண்டியது, மரிப்பது தான்''

புதிய ஏற்பாட்டை ஒன்று சேர்த்து நாம் ஆய்வு செய்யும்போது, பின்வரும் கேள்விகளைப் போன்று உங்களிடம் தனிப்பட்ட முறையில் நான் கேள்விகளைக் கேட்கும்போது என் நோக்கம் வெளிப்படையாகத் தோன்றக் கூடும். "அது என்ன சொல்கிறது? அதன் அர்த்தம் என்ன? உங்களுக்கு அது என்ன அர்த்தத்தைக் கொடுத்தது? உங்களோடு உறவு கொண்டவர்களுக்கு அது என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது? நீங்கள் போதிக்கும் மக்களுக்கு அது என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது? மற்றும் தேவனுக்கு அது என்ன அர்த்தமாகிறது?''

அவரது வாழ்க்கை முழுவதும், பிதா தான் செய்து முடிக்க வேண்டும் என விரும்பிய கிரியைகளைப் பற்றியே எண்ணம் கொண்டிருந்தார். நாளுக்கு நாள், அவர், ''பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஏனென்றால், நான் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது'' என்று சொன்னார். இயேசுவின் வாழ்க்கை முடிவுக்கு வந்தபோது, அவர் முடிக்காத காரியங்கள் எதுவுமில்லை. அவர் செய்ய வேண்டியதெல்லாம் மரிக்க வேண்டியது மட்டுமே.



இந்த முன்னுரையைத் தனிப்பட்ட முறையில் நீங்கள் பயன்படுத்தும்போது, உங்களை சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

இயேசு வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் என்ன செய்து முடித்தாரோ, அதன் விளைவாக உங்கள் வாழ்க்கையில் என்ன ஆரம்பித்தது? உங்களை தேவன் சிருஷ்டித்து, இரட்சித்து, அவரது மகிமைக்காக நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலையை நீங்கள் கண்டு கொண்டீர்களா? அந்த வேலையை நாளுக்கு நாள் நீங்கள் நிறைவேற்றி முடிக்கிறீர்களா? நீங்கள் மரிக்கும்படியான தேவனின் திட்டத்தின் அந்த நேரம் வரும்போது, "பிதாவே, பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைச் செய்து முடித்தேன்,'' என உங்களால் சொல்ல முடியுமா? "நான் செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடிந்தாயிற்று. பிதாவே, உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' எனச் சொல்லக் கூடுமா? அல்லது, இந்த வாழ்க்கையில் உங்கள் இரட்சிப்புக்கான தேவனுடைய நோக்கத்தை எண்ணிப் பார்க்கும்போது, முடிக்கப்படாத வேலையைப் பற்றிய ஒரு உணர்வு உங்களுக்கிருக்கிறதா?

## கிறிஸ்துவின் வாழ்க்கை

சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கிற, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வழி பின்வரும் கேள்வியைக் கேட்பதாகும். அது, "இயேசுவுக்கு அதிக முக்கியமானதும் அவர் செய்து முடிக்க வேண்டுமென பிதா விரும்பியதுமான கிரியைகள் என்ன? அவரது பாடுகளின் முடிவில், சிலுவையிலிருந்து... அவர் வெற்றிச் சிறந்தவராக 'முடிந்தது' என சத்தமிட்டபோது, அவர் தமது பணியை வெளிப்படையாகவே நிறைவேற்றினார். ஆனால், அவர் தெளிவாக எதை செய்து முடித்தார்?''

இந்த நான்கு சுவிசேஷங்களிலும் 80 அதிகாரங்கள் உள்ளன. நான்கு அதிகாரங்கள் அவரது பிறப்பைப் பற்றியும் அவரது வாழ்க்கையின் முதல் 30 வருடங்களைப் பற்றியும் கூறுகிறது. 85 அதிகாரங்களில் அவரது வாழ்க்கையின் கடைசி மூன்று வருடங்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. 27 அதிகாரங்கள் அவரது வாழ்க்கையின் கடைசி

வாரத்தில் நடந்ததைப் பற்றி விவரிக்கிறது. 58 அதிகாரங்களில் அவரது ஊழியம், போதனை, குணப்படுத்துதல் மற்றும் அவரது சீடர்களை ஆயத்தப்படுத்துவது ஆகியவை அடங்கியுள்ளன. யோவான் சுவிசேஷத்தில் ஏறக்குறைய பாதி அதிகாரங்கள் அவரது வாழ்க்கையின் முதல் 33 வருடத்தில் நடந்ததையும், இன்னொரு பாதி அவரது வாழ்க்கையின் கடைசி வாரத்தில் நிகழ்ந்ததையும் சொல்லுகிறது.

இந்த சுவிசேஷங்களின் ஆசிரியர்களைப் பொருத்தவரை, அவரது கடைசி 3 வருட வாழ்க்கை, அவரது பிறப்பு மற்றும் அவரது வாழ்க்கையின் முதல் 30 வருடங்களைக் காட்டிலும் அதிக முக்கியமானதாகும். அவரது வாழ்க்கையின் கடைசி வாரம், அவரது பிறப்பு மற்றும் முதல் 30 வருட வாழ்க்கையை விட ஏழு மடங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவரது போதனை, நோயாளிகளை குணமாக்கியது மற்றும் சீடர்களை தெரிந்தெடுத்தது ஆகியவற்றைச் சொல்லும் 58 அதிகாரங்கள், அவரது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் பரிமாணங்களின் மீது இந்த ஆசிரியர்கள் கொண்டுள்ள மதிப்பைக் காட்டுகிறது.

புதிய ஏற்பாட்டின் இந்த ஆய்வு, சுவிசேஷங்களைப் பற்றிய ஒரு ஆழமான ஆய்வாக இல்லாது, ஒரு முன்னுரையாகவும், இந்த சுவிசேஷங்களை எவ்வாறு அணுகுவது என்பதை உங்களுக்குக் காட்டும் ஒரு முயற்சியாகவும் இருக்கிறது. சுவிசேஷங்களின் ஆசிரியர்கள் எதை வலியுறுத்தினார்களோ, அதையே நமது ஆய்விலும் வலியுறுத்தி இந்த புனிதமான வாழ்க்கை சரிதையின் அந்தப் பகுதிகளில் நமது கவனத்தைத் திருப்ப முயற்சிக்கிறேன்.

## இயேசு முன்னுரிமை அளித்த ஊழியம்

இந்த புத்தகங்களைக் குறித்த நமது ஆய்வு, அவைகள் ‘சுவிசேஷங்கள்’ என்று ஏன் அழைக்கப்படுகின்றன என்று நமக்குக் காட்டும். அதாவது, அவை இயேசு வந்தார் என்றும், அவர் உலகத்தின் பாவத்தைப் போக்க வந்த தேவ ஆட்டுக்குட்டி என்றும், ‘நற்செய்தி’யை அறிவித்ததால் (யோவான் 1:29) ‘சுவிசேஷங்கள்’ எனப்பட்டன. பாவிகள் என்ற உண்மையை உணர்ந்திருந்தால், இந்த ஆசிரியர்கள் ஏன் ‘நற்செய்தி’ என்று கூறினர் என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

இந்தப் புத்தகங்களிலுள்ள அநேக அதிகாரங்கள், இயேசுவின் வாழ்க்கையின் கடைசி வாரத்தை வலியுறுத்தி சொல்லுகின்றன. ஏனென்றால், இந்த வாரத்தில் தேவ ஆட்டுக் குட்டியாக நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக அவர் செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்தார். எருசலேமில் நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததும், மரணத்திலிருந்து



உயிரோடெழுந்ததும் அவர் முன்னுரிமை அளித்த ஊழியம் என இந்த சுவிசேஷங்களில் நன்கு வலியுறுத்திக் காட்டப்படுகிறது.

சுவிசேஷங்களில் மூன்றில் ஒரு பாகத்தில், இயேசு தமது பிதாவினால் கொடுக்கப்பட்ட முதன்மையான ஊழியத்தை எவ்வாறு நிறைவேற்றினார் என்பது குறித்து பதிவாகியுள்ளது. தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்ததினால், நமது இரட்சிப்புக்காக சிலுவையில் மரிக்கும்படியாக அவரது குமாரனை அனுப்பினார் (யோவான் 3:15–19). இயேசுவின் இந்த மீட்பின் பணியின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர்கள் அழுத்தமாகக் கூறினார்கள் (1 பேதுரு 1:18, 19; 2:24; 2 கொரிந்தியர் 5:19, 21–6:1, 2).

## இயேசுவின், இன்னும் இரண்டு ஊழிய நோக்கங்கள்

இயேசு தமது ஊழிய அறிக்கைகளை எவ்வாறு ஊழிய நோக்கங்களாக மாற்றினார் என்பதை நாம் படிக்கையில், அவரது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் இன்னும் இரண்டு பரிமாணங்கள் நான்கு சுவிசேஷங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன என கண்டு கொள்வோம். அவரது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிமாணத்தைக் குறித்து நாம் தொடர்ச்சியாக வாசிக்கும் போது, இந்த இரண்டு ஊழிய நோக்கங்களில் முதலாவதை நாம் கண்டு கொள்கிறோம். இயேசு அநேக அற்புதங்களை நிகழ்த்துகிறார். அதில் அதிகமானவை குணமாக்கும் அற்புதங்களாகும்.

நான்கு சுவிசேஷங்களில் அடங்கிய விவரங்களில் மூன்றில் ஒரு பாகம் இயேசு நிகழ்த்திய அற்புதங்களைக் குறித்து விவரிக்கிறது. அப்போஸ்தலர்களின் ஊழியத்தின்போதும் இது தொடர்கிறது.

இயேசு செய்த அற்புதங்கள் மற்றும் குணமாக்குதல் ஆகியவற்றைக் குறித்து கதை கதையாக நீங்கள் வாசிக்கும்போது திருச்சபையின் முதல் சந்ததியில் அப்போஸ்தலர்கள் அற்புதங்களை செய்வதையும், நோயுற்றவர்களைக் குணமாக்குவதையும் நீங்கள் பார்க்கும்போது, ‘‘உயிர்த்தெழுந்த, ஜீவிக்கின்ற கிறிஸ்துவின் ஊழியத்தின் இந்த பரிமாணத்தின் இன்றுள்ள முக்கியத்துவம் என்ன?’’ என உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இங்கு வாழ்ந்த அதே கிறிஸ்து, உங்களிலும் என்னிலும் இப்பொழுது வாழ்ந்தால், அவரால் இன்னும் அற்புதங்களை செய்ய முடியும் என்றும், உங்களையும் என்னையும் குணமாக்க முடியும் என்றும் நீங்கள் நம்புகிறீர்களா?

பூமியில் சரீரப்பிரகாரமாக இங்கு அவர் வாழ்ந்தபோது செய்ததைப் போலவே, இன்றும், இயேசு அற்புதங்களை செய்கிறாரா, நோயுற்றவர்களை குணமாக்குகிறாரா, மரித்தவர்களை உயிருடன் எழுப்புகிறாரா? குணமாக்குவது எப்பொழுதும் அவரது சித்தமா? இயேசு எல்லாரையும் குணப்படுத்துகிறாரா? இயேசுவின் ஆர்வம் மக்களின்

சரீரப்பிரகாரமான ஆரோக்கியத்திலா, அல்லது ஆவிக்குரிய ஆரோக்கியத்திலா? இப்போதும் அவர் அதில் ஆர்வம் காட்டுகிறாரா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சரீரப் பிரகாரமான குணமாக்குதல் சம்பந்தமான அந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் கொடுக்கும்போது, இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிப்பின் மூலம் நடைபெறும் ஆவிக்குரிய குணமாகுதலையும் கவனியுங்கள்.

## இயேசுவின் செய்தி

இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் அவரது பல அற்புதங்களுடன் கூட, அவரின் இன்னொரு ஊழிய நோக்கமும் நான்கு சுவிசேஷங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதாவது, புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களில் அடங்கியுள்ள விவரங்களில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி, இயேசு வாய்மொழியாகச் சொன்ன வார்த்தைகளைப் பதிவு செய்திருக்கிறது.

அவரே வழி, சத்தியம் மற்றும் ஜீவன் என்பதையும் வேறு எந்த வழியிலும் பிதாவாகிய தேவனிடம் நாம் வரமுடியாது எனவும் இயேசு கூறுகிறார் (யோவான் 14:6). தேவனிடம் செல்லக்கூடிய வழி அவர்தான் என இயேசு சொல்லும்போது, தேவனிடமிருந்து விலக்கப்பட்டவர்களாய் இருந்த நம்மை அவருடன் ஒப்புரவாக்கி, நமது பரலோக பிதாவிடம் உறவைப் புதுப்பித்துக் கொள்ளக்கூடிய ஒரே வழியை நமக்கு அளிக்கும்படி சிலுவையில் அவர் செய்த கிரியையைக் குறிப்பிடுகிறார்.

அவரே ஜீவன் என சொல்லும்போது அவர் செய்யும் அற்புதங்களைக் குறிப்பிடுகிறார். அதில், அவர் நமக்குத் தரும் நித்திய ஜீவனும் அவரை விசுவாசிக்கும் அனைவரின் வாழ்க்கையும் முழுமையாக மாற்றமடைவதும் அடங்கியுள்ளது.

அவரே சத்தியம் என உரிமை பாராட்டும்போது, சந்தேகத்திற்கிட மின்றி அவரது போதிக்கும் மற்றும் பிரசங்கிக்கும் ஊழியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தேவகுமாரனாக, இயேசு கிறிஸ்து வெள்ளிக்கிழமை பிற்பகல் பரலோகத்தை விட்டு வந்து, சில நாட்களில் உலகில் தங்கி, பின்பு இரட்சிப்பை நிறைவேற்றியிருக்கக்கூடும். இந்த உலகில் 33 வருடங்களை அவர் ஏன் செலவழித்தார்? அவரது சிலுவை மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதலின் மூலம் நிறைவேற்றப்பட்டவைத் தவிர பிதாவுக்காக அவர் நிறைவேற்ற வேண்டிய மற்ற வேலைகளும் கூடுதலாக அவருக்கிருந்திருக்கும்.

தாமே சத்தியம் என இயேசு நம்மிடம் சொல்லும்போதும், “வார்த்தை மாமிசமாகி” என யோவான் அவரை விவரிக்கும்போதும், (யோவான் 1:14) ஒரு பிற்பகலில் நிறைவேற்ற முடியாத இயேசுவின் ஒரு ஊழியத்தை



நாம் காண்கிறோம். எழுதப்பட்ட ஒரு வார்த்தையை ஏற்கெனவே தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால், தேவ ராஜ்ஜியத்திலும், தேவனுடைய திட்டத்திலும் எழுதப்பட்ட வார்த்தைகளுக்கும், அதிகமாக இயேசு நமக்குத் தந்திருக்கிறார். இயேசு நமக்கு என்ன தந்திருக்கிறார் என்பதை யோவான் பின்வருமாறு விவரிக்கிறார்: ‘‘எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின’’ (யோவான் 1:17). மோசே மற்றும் பழைய ஏற்பாட்டின் மூலம், தேவன் ஏற்கெனவே சத்தியத்தை நமக்குத் தந்திருக்கிறார். மேலும், அந்த சத்தியத்தில் வாழும்படியான கிருபையையும் கொடுத்திருக்கிறார். இயேசு சத்தியத்தை மட்டும் நமக்குத் தரவில்லை அவர் நமக்குத் தந்த சத்தியமே அவர் தான். வாழ்க்கையை எப்படி ஜீவிப்பது என்பதை மட்டும் அவர் நமக்கு சொல்லவில்லை. அவரே அப்படி ஜீவித்தார். அந்த ஜீவன் அவரே! இயேசுவின் எல்லாம், அவர் செய்த எல்லாம், அவர் சொன்ன எல்லாமுமே, தமது குமாரன் மூலம் நமக்கு கொடுக்க தேவன் விரும்பிய சத்தியமாகும். அதனால் தான் இயேசு ‘ஜீவனுள்ள வார்த்தை’ என யோவான் சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டுள்ளார் (யோவான் 1:1, 14).

இந்த உலகிற்கு தேவன் இதுவரை சொல்லியிராத உன்னதமான செய்தி இயேசு கிறிஸ்து என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். அவர் போதித்த செய்தியில் ஒரு பாகம் நான்கு சுவிசேஷங்களில் அடங்கிய விவரங்களின் மூன்றில் ஒரு பாகமாகும். இயேசுவின், இந்த செய்திகள் பல விதங்களில் வருகின்றன. அதில் மலையின் மீது கொடுத்த பிரசங்கம், மேல் அறையில் கொடுத்த செய்தி மற்றும் ஒலிவ மலையில் பேசியது போன்ற முக்கியமான செய்திகளும் உண்டு (மத்தேயு 5, 6, 7; யோவான் 13-16; மத்தேயு 24:25).

இன்னும் அநேக பிரசங்கங்கள், முக்கியமாக மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. சிறிய தீர்க்கதரிசிகளைப் போன்று, அவைகள் சுருக்கமாக இருப்பதினால், அவரது முக்கியமான பிரசங்கங்களை விட அவைகுறைந்த முக்கியத்துவம் பெற்றதல்ல.. இந்தப் பிரசங்கங்களில் பல உவமைகளாகவும் உவமானங்களாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இயேசுவின் செய்திகளில் அதிகமானவை உரையாடல் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள், அவரது காலத்தில் இருந்த மதத்தலைவர்களுடன் அவரது விவாதமாக இருந்தன. அநேகமாக அவரே கேள்விகளைக் கேட்டார். மத்தேயு சுவிசேஷத்தில் மட்டும் 83 கேள்விகளை இயேசு கேட்கிறார்.

இயேசு கேள்விகள் கேட்கும்படி அப்போஸ்தலர்களை பிரத்தியட்சமாக பயிற்றுவித்தது போல் தோன்றுகிறது. ஒலிவ மலையில் அவர் பிரசங்கித்ததும் (மத்தேயு 24, 25), மேலறையில் அவர் கொடுத்த

நீண்ட பிரசங்கமும் (யோவான் 13-16), அப்போஸ்தலர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதிலாக இருந்தது. அதிகமான உரையாடல்கள் மதத்தலைவர்களுடனான அவரது விவாதமாகும். அவற்றை அவர்கள் விரும்பவில்லை. அதிக ஆழமான அவரது நல்ல திட்டமான அறிக்கைகளில் சில, மக்களுடன் அவருக்கு ஏற்பட்ட நேரிடையான சந்திப்பின்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதிலாக இருந்தது.

சுவிசேஷங்களை நீங்கள் படிக்கும்போது இயேசு எந்த நேரத்தில் எதைக் கூறினாலும் அது முக்கியமான பிரசங்கமோ, உவமையோ, அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலோ, விவாதமோ எதுவாக இருந்தாலும் - தேவனுடைய நித்திய வார்த்தையான அவர் மாமிசமாகி நம்மிடையே ஜீவிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் பேசும்போது, தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறார். இந்த உலகம் இதுவரை பெற்றிராத தேவனுடைய முழுமையான வெளிப்பாட்டை நமக்கு அவர் கொடுக்கிறார் (யோவான் 1:18).

இயேசுவினால் கற்றுத்தரப்பட்ட சத்தியம் அனைத்தையும் கண்டு கொள்வதற்கு ஒரு நல்ல வழி, இந்தக் கேள்வியைக் கேட்டவர்களாய் இயேசு கற்பித்த அனைத்தையும் அணுகுவதாகும். "இயேசு கிறிஸ்துவின் மதிப்பீட்டு முறை என்ன? அவரது போதனைகளின் அடிப்படையில் அவைகள் அறிவிக்கப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட விதம் எதுவாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் மதிப்புகள் என்ன?"

சுவிசேஷத்தை நீங்கள் வாசிக்கும்போது, தேவனோடு மனிதகுலம் ஒப்புரவாகும்படியான வழியாக நாம் இயேசுவை சந்திக்கும்போது, சிலுவையில் நிறைவேற்றப்பட்ட இயேசு கிறிஸ்துவின் ஆரம்பப் பணியை கவனியுங்கள். அதுமட்டுமல்ல, இயேசுவின் அற்புதங்களையும், விசேஷமாக இயேசுவை ஜீவனாகக் காட்டும் குணமாக்கும் மற்றும் புது சிருஷ்டியாக மாற்றும் அற்புதங்களையும் கவனியுங்கள். தேவனுடைய வார்த்தை மாமிசமாகி, கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் நம்மிடையே ஜீவித்தபோது இயேசுவின் போதிக்கும் ஊழியத்தைக் கவனித்துப் பாருங்கள். இயேசுவை நமது வழியாக, சத்தியமாக, மற்றும் ஜீவனாக பார்க்கும்படியாக சுவிசேஷங்களைப் படியுங்கள்.



## அதிகாரம் மூன்று

## மத்தேயு சுவிசேஷத்தைப் பற்றி ஒரு ஆய்வு

# " இயேசுவின் திட்டம் "

நான்கு சுவிசேஷங்களிலும், இயேசு ஒரு ஊழியத்தைக் கொண்ட ஒரு மனிதனாக மட்டும் சித்தரிக்கப்படவில்லை. அந்த ஊழியத்தை செய்து முடிப்பதற்கான ஒரு திட்டத்துடன் கூடிய ஒரு மனிதனாகவும் அவர் சித்தரிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக, இது மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படுகிறது.

உங்களுக்கு வாழ்க்கை மூன்று வருடங்கள்தான் உள்ளது என்பதை நீங்கள் அறிந்திருந்து, உங்களது செய்தியினால் உலகம் முழுவதையும் சென்றடைய விரும்பினால், நீங்கள் என்ன செய்வீர்கள்? இயேசு தமக்கு வாழ்க்கை மூன்று வருடங்கள் தான் உள்ளன என அறிந்திருந்தார். உலகம் முழுவதையும் தமது சுவிசேஷத்தினால் சென்றடைய வேண்டும் என விரும்பினார். அதை அறிந்த அவர் என்ன செய்தார்? மத்தேயு சுவிசேஷத்தை நாம் படிக்கும்போதே அந்த கேள்வியைக் கேட்பதும், அதற்குப் பதில் கொடுப்பதும், அவரது ஊழிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான இயேசுவின் திட்டத்தை அடையாளம் காட்டும்.

ஒருவர், திறமையுடன் செயலாற்றுபவராக எவ்வாறு இருக்கலாம் என்பதைப் பற்றிய கருத்தரங்கில் நீங்கள் பங்கு கொண்டால், அதற்கு நீங்கள் பகுத்தறிந்து, ஒழுங்குபடுத்தி பிறரைப் பணியமர்த்தி, கண்காணித்து மற்றும் துன்பத்தை அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டுமென உங்களுக்குச் சொல்லப்படும்.

மத்தேயு சுவிசேஷத்தில், இயேசு திரள் கூட்டத்தைப் பார்த்து, மனதுருக்கத்தினால் அசைக்கப்பட்டார் என ஒவ்வொருமுறை நாம் படிக்கும்போதும், உலகம் முழுவதைக் குறித்ததான அவரது மனதுருக்கத்தைப் பற்றியும் மற்றும் இரட்சிப்பைக் குறித்த... செய்தியுடன்

உலகத்தைச் சென்றடைய வேண்டும் என்ற அவரது திட்டத்தைப் பற்றியும் ஒரு காட்சி நமக்குக் கிடைக்கிறது. இயேசு அந்தத் திரள் கூட்டமக்களை மனதுருக்கத்துடன் பார்க்கும்போது, அவர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கிரியை செய்தார். கலிலேயா கடலோரத்தில் எல்லாவகையான வியாதிகளையும் அவர் சுகமாக்கினார் என்பது மத்தேயு சுவிசேஷத்தில் முதல் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திரள் கூட்டத்தினரின் தேவைகளை அவர் பகுத்தாய்ந்து, பின்பு 'முதல் கிறிஸ்தவக் கூட்டம்' என நான் அழைக்கும் ஒன்றை ஒழுங்கு செய்தார். அங்குதான் அவர் மலைப் பிரசங்கத்தை அவர்களுக்குக் கொடுத்தார் (மத்தேயு 4:23-5:2).

அடுத்த முறை, அவர் திரள் கூட்ட மக்களை மனதுருக்கத்துடன் நோக்கியபோது, மலை உச்சியில் அவரது போதனையைக் கேட்டவர்களில் சிலரை, 'அப்போஸ்தலர்' களாகவும், அல்லது 'அனுப்பப்பட்டவர்களாக'வும் இருக்கும்படித் தெரிந்தெடுத்து அனுப்பினார். சீடனுக்கும் அப்போஸ்தலனுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் உண்டு. இயேசுவுக்கு, அவரைப் பின்பற்றிய அநேக சீடர்கள் இருந்தனர். ஆனால் அவருக்கு அப்போஸ்தலர்கள் பன்னிரெண்டு பேர்கள் மட்டுமே இருந்தனர்.

உலகத்தை சென்றடையும்படியான அவரது திட்டத்தை நிறைவேற்றுபவர்களை அவர் இப்பொழுது பகுத்தாய்ந்து ஒழுங்குப்படுத்தி அனுப்புகிறார் என நாம் சொல்லக்கூடும். மத்தேயு சுவிசேஷத்தின் மூலம், அவரது திட்டத்தை நாம் பின்பற்றும்போது, ஒரே மாதிரியான இரண்டு சம்பவங்களைக் குறித்து நாம் படிக்கிறோம். அவர் மறுபடியும் திரள் கூட்ட மக்களை மனதுருக்கத்துடன் பார்க்கிறார். இந்த முறை அவர்கள் தங்களுக்குள்ள மற்றெல்லா பிரச்சினைகளோடுங்கூட பசியுடனுமிருந்தனர். அப்போஸ்தலர்கள் அவரிடம் வந்து, அவர்கள் உணவு கொள்ளும்படி, அவர்களை அனுப்பிவிடும்படி அவரிடம் கூறுகின்றனர். ''எத்தனை ரொட்டித்துண்டுகள் உங்களிடம் இருக்கின்றன?'' என்ற கேள்வியுடன் ஒரு சவாலை அவர்கள் முன்பு வைக்கிறார். அவரது பிரதிநிதிகளாக அந்த சீடர்கள் அங்கு வந்திருக்கும் மக்களின் தேவைகளை சந்திக்க முடியும் என்பதால், அவர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம் என இயேசு சீடர்களிடம் சொல்கிறார். நான்கு சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டதும் அனைவரும் அறிந்த இந்தக் கதை, உண்மையிலேயே இயேசுவின் ஊழிய தரிசனத்தைக் குறித்த ஒரு உவமையாகும் (14:14-36; 15:32-29).

திரள் கூட்ட மக்கள், தேவைகளுடன் கூடிய உலகத்தைப் பிரதிபலிப்பதாக நாம் காண்கிறோம். இயேசுவும் அந்த மக்கள் கூட்டத்தின் தேவைகளை சந்திக்கும்படியாக அவரது



அப்போஸ்தலர்களை அவரின் பிரதிநிதிகளாக முக்கியமான இடத்தில் வைப்பதைக் காண்கிறோம். மக்கள் கூட்டத்திற்கென்று தேவனிடமிருந்து அற்புதமான விதத்தில் வரும் உதவிகள் இயேசுவிடமிருந்து நேரிடையாக அந்த மக்களுக்குச் செல்வதில்லை. அவைகள் அப்போஸ்தலர்களின் கரங்களின் மூலமாக மக்களைச் சென்றடைகின்றன. இரட்சிப்பின் தேவையுடனிருக்கும். மக்களுக்கு அவரது சத்தியத்தையும் சுவிசேஷத்தையும் கொண்டு செல்ல கிறிஸ்து அவரது சீடர்களைப் பயன்படுத்தத் தெரிந்தெடுத்தார்.

இந்த ஆர்வமூட்டும் அற்புதத்தில் சம்பந்தப்பட்டுள்ள மக்கள், இடங்கள், மற்றும் நடைபெற்ற காரியங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு ஆழமான அர்த்தம் உண்டு. இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவின் திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. மத்தேயு சுவிசேஷத்தின் இறுதியில் உயர்ந்த பணியை சீடர்களுக்குக் கொடுத்த விதத்தை மத்தேயு பதிவு செய்ததிலிருந்து இதைக் காணமுடிகிறது (மத்தேயு 28:16-20). இயேசு, இந்த உலகத்தை விட்டு பரமேறிச் செல்ல இருந்த போது, அவரது பிரதிநிதிகளாக இந்த உலகத்தை சென்றடைய அந்த மனிதர்களை நியமித்தார்.

அவரின் பரமேறுதலுக்குப் பின்பு, சபையின் வரலாற்றில் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக, இயேசுவுக்கென்று உலகத்தை சென்றடையும் பணியை அவரது சீடர்கள் செய்கையில், அவர்கள் திறமையுடன் செயல்படும்படியாக அவர் கண்காணித்தார். அவர்கள் முயற்சி செய்து வேதனை அடைந்தபோது, அவரும் வேதனையை அனுபவித்தார். சரித்திரத்தின் முதல் முந்நூறு வருடங்களில் அவர்கள் துன்புறுத்தப்பட்ட காலங்களில் இது உண்மையாக இருந்தது. சபையின் சரித்திரத்தின் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக அவர்கள் குற்றம்சாட்டப்பட்டு, துன்புறுத்தப்பட்டது தொடர்ந்தபோது, அவர் தொடர்ந்து வேதனைப்பட்டார் என்பதை யூகிக்க முடியும். அதுமட்டுமல்ல, இது இன்று உலகின் பல பகுதிகளில் நடக்கிறது. சபையின் சரித்திரத்தின் சில அதிகாரங்களில் பயங்கரமாக எழுதப்பட்டதுபோல, அவரும் வேதனையை அனுபவித்தார்.

இன்றுள்ள திருச்சபையை புரிந்து கொள்ள இது நமக்கு உதவும். மத்தேயு சுவிசேஷத்தில் அவரது திட்டத்தை நிறைவேற்றுவதை நாம் கவனிக்கும்போது சபையின் நோக்கத்தின் தூய்மையான சாராம்சத்தை நம்மால் காணமுடியும். சபை என்பது ஒரு அருட்பணி நிறுவனமாகும். இந்த உலகத்திற்கு இயேசுவின் கிருபையையும் சத்தியத்தையும் அறிவிக்கும் ஒரு வாகனமாக இருக்க கிறிஸ்துவினால் வடிவமைக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஒன்றுதான் சபையாகும்.

சபையின் திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் அந்த முடிவை நோக்கிச் செல்லும் ஒன்றாகக் காணப்பட வேண்டும்.

இந்த சத்தியம் அப்போஸ்தலர் நடபடிகளில் தான் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. இழந்து போன உலகத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியான பணியை அவரது சபையிடம் இயேசு ஒப்படைத்ததுடன், மத்தேயு சுவிசேஷம் முடிவடைகிறது. அப்படி அவர்கள் செய்யும்போது, சீடர்களை உருவாக்கி, அந்த சீடர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து இயேசு கற்றுத் தந்த எல்லாவற்றையும் அவர்களுக்கு சொல்லித் தர வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் இதைத்தான் அவர்கள் செய்தனர். அதைச் செய்த, பெந்தெகொஸ்தே நாளில் தேவனிடமிருந்து வல்லமையைப் பெற்றுக் கொண்டனர். இந்த உயரிய பணியை அவர்கள் செயல்படுத்தினபோது, சபை பிறந்தது.

அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தில், அவர்கள் எப்படி உலகத்திற்குள் சென்று, சீடர்களை உருவாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, கர்த்தர் கற்றுத்தந்த அனைத்தையும் அவர்களுக்கு கூறினர் என்பது பதிவுச் செய்யப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகமும் சபை சரித்திரமும் இயேசுவின் திட்டம் கிரியை செய்கிறது என்பதை நமக்குச் சொல்லுகிறது. அவரது சபையை ஆரம்பித்த நாம், இன்னும் சென்று சீடர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து இயேசு கற்பித்த அனைத்தையும் கற்றுத் தரும்படி அழைக்கப்பட்டுள்ளோம்.



அதிகாரம் நான்கு

# ‘கிறிஸ்துவின் வாழ்க்கையிலுள்ள முக்கியமான சம்பவங்கள்’

வேதாகமத்தில், மிகவும் குறிப்பிடத்தக்க, ஆனால் அவருக்கென்று சிறிதளவு இடமே அளிக்கப்பட்ட,யோவான் ஸ்நானனைப் போன்ற வேறு எவருமில்லை. ஸ்திரீகளில் பிறந்தவரில் இவரைப் போன்று பெரியவனும், பெரிய தீர்க்கதரிசியும் எவருமில்லையென இயேசு சொன்னார் (மத்தேயு 11:11; லூக்கா 7:28).

யோவான் ஸ்நானனின் வாழ்க்கை இந்த நான்கு சுவிசேஷங்களிலும் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. அவனுடைய வாழ்க்கையின் முக்கியத்துவம் என்ன? முதலாவது, தீர்க்கதரிசிகளில் அவன் சிறந்தவன் மட்டுமல்ல, அவன் அவர்களில் கடைசியுமானவன். தீர்க்கதரிசிகள் மேசியா வருகிறார் என்ற நற்செய்தியை பிரசங்கித்தனர். இந்தத் தீர்க்கதரிசி கலிலேயாவில் நடந்து சென்ற ஒரு மனிதனைக் குறிப்பிட்டு அவரது சீடர்களிடம் “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29) என்றான். மேசியாவைப் பற்றி தீர்க்கத்தரிசனம் உரைத்தவர்களில் கடைசியானவன் யோவான் ஸ்நானன். அவன்தான், ஜனங்களை, அவர்களின் மேசியாவிடம் சரியானபடி அறிமுகப்படுத்தியவன்.

## இயேசுவின் ஞானஸ்நானம்

மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் தொடக்க அதிகாரங்களில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலுள்ள பல முக்கிய சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஒரு நாள் யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, அவன் தன்னைப் போன்ற ஒரு வாலிபன் வரிசையில் நிற்பதைக் கண்டான். யோவான் ஸ்நானன் இயேசுவைக் கண்டபோது, ‘நான் உம்மாலே ஞானஸ்நானம்

பெற வேண்டும்'' என்றான். ஆனால், இயேசு, ''இல்லை, எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது. யோவானே, நீ எனக்கு ஞானஸ்நானம் கொடு'' என்றார். ஆகவே, யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அப்படி அவன் செய்தபோது, தேவ ஆவி புறாவைப்போல் அவர்மேல் இறங்கியது. பிதாவாகிய தேவன் பேசினார்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்." இது யோவான் ஸ்நானனின் சாட்சி என அழைக்கப்படுகிறது (மத்தேயு 3:17).

## இயேசுவின் சோதனை

மத்தேயு நான்காம் அதிகாரத்தில், இயேசுவின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து மற்றுமொரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. ஆவியானவர் வனாந்தரத்திற்கு அவரை வழி நடத்தினார். அங்கு சாத்தானோடு ஒரு போராட்டம் இருந்தது. அவர் 40 நாட்கள் உபவாசித்த பின்பு, மூன்று முறை சோதனைக்குட்பட்டார். முதலாவது, சோதனையாளன் அவரிடம் வந்து, ''நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்'' என்றான். இயேசு பிரதியுத்தரமாக'' "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." சுருக்கமான சுவிசேஷங்களில் பதிவாகியுள்ள இயேசுவின் முதல் வார்த்தைகள் "என்று எழுதியிருக்கிறதே" என்பதாம் (மத்தேயு 4:4).

சாலொமோன் கட்டிய ஆலயத்தின் உச்சியிலிருந்து இயேசுவை கீழே குதிக்கும்படி பிசாசு சோதனைக்குட்படுத்தியபோது, இரண்டாவது சோதனை நிகழ்ந்தது. "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது'' என்றான் (6). இங்கு சாத்தான் வேத வசனங்களை மேற்கோள் காட்டி பேசுவதைப் பார்க்கிறோம். அவன் வேதாகமத்தை நன்கு அறிந்திருந்தான். மட்டுமல்ல, வேதவசனங்களை விசுவாசிகள் மனதிற்கு கொண்டுவந்து அவர்களைப் பயம் கொள்ளச் செய்வதின் மூலம், அவர்களைத் தோற்கடிக்க விரும்புகிறான்.

இயேசு தாம் மனித சரீரத்தில் உள்ள தேவன் என்பதை விரைவில் உரிமைகோரப் போகிறார். இதை எவராவது நம்பியிருப்பார்களா? அந்த உரிமையை நிரூபிக்க அவரது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அவர் பயன்படுத்த சாத்தான் ஆலோசனை சொல்லுகிறான். ஆனால் இயேசு, அவனுக்குப் பதிலாக, "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே" என்றார் (7).



இயேசுவுக்கு ஏற்பட்ட மூன்றாவது சோதனையில் சாத்தான் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து, ''நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்'' என்று சொன்னான். ஆனால் இயேசு, ''அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்று பதிலளித்தார் (8-10).

வனாந்தரத்தில் இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைக்கான முக்கியத்துவம் என்ன? முதலாவது, எந்த வகையிலாவது, இந்த எதிர்ப்பை சாத்தான் தவிர்த்திருக்கக் கூடுமானால், அவன் தவிர்த்திருப்பான். இயேசு தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் சாத்தானை எதிர்க்க தேவ ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை வழிநடத்தினார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது "பெரிய சகோதரனான இயேசு," ஏதேன் தோட்டத்தில் சாத்தானால் தோற்கடிக்கப்பட்ட ''சிறிய சகோதரன்'' ஆதாமுக்காக கணக்குத் தீர்ப்பதாகும். இயேசு சந்தித்த முதல் சோதனை ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் சந்தித்த சோதனையைப் போன்றதாகும்.

நாம் கவனித்தது போலவே, ஏதேன் தோட்டத்தில் நடந்த சோதனையின் மறுபிரதிபலிப்பான இதற்கு இயேசு பின்வரும் வேதவசனங்களை மேற்கோள் காட்டி பதிலளித்தார்: ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" (மத்தேயு 4:4). தோட்டத்தில் சாத்தான் 'தேவன் சொன்னாரா?' என்ற கேள்வியை எழுப்பினான். ஆதாமும் ஏவாளும், 'ஆம், தேவன் சொன்னார்' என பதிலளித்தனர். பிசாசு அதற்குப் பதிலளிக்கும் விதமாக, "நல்லது, தேவன் என்ன சொன்னாரோ அது உண்மையல்ல'' என்றான். பொதுவான கேள்விகளை எழுப்பிய பிறகு, தேவன் பேசிய வார்த்தை ஆராயப்பட்டு, எதிர்க்கப்பட்டு, கீழ்ப்படியாமற் போனது.

தேவ பிள்ளைகளின் நீண்டகால சரித்திரத்தில் பிசாசானவன் அதே கேள்விகளைக் கேட்பதை ஒருபோதும் நிறுத்தவில்லை. இந்த சோதனைகள் இரண்டுமே, பாவம் செய்யும்படியாக இன்று நாம் எவ்வாறு சோதிக்கப்படுகிறோம் என்பதின் விவரிப்பாகும். இது பாவத்தைக் குறித்த ஒரு விளக்கமாகும். பாவம் என்பது, தேவன் சொன்னதாக நாம் என்ன அறிந்திருக்கிறோமோ அதைக் குறித்து நாம் என்னச் செய்கிறோம் அல்லது செய்யாமலிருக்கிறோம் என்பதாகும்.

முதல் சோதனைக்கு இயேசு கொடுத்த பதில்: நாம் வாழ நினைத்தால், எப்படி வாழ்வது என்பதை தேவ வார்த்தை நமக்குக் காண்பிக்கும்.

வேதாகமத்தை எவ்வளவு அதிகமாக நாம் புரிந்து கொள்கிறோமோ, அந்த அளவிற்கு வாழ்க்கையை நாம் புரிந்து கொள்வோம். வாழ்க்கையை எந்த அளவிற்கு நாம் விளங்கிக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு வேதாகமத்தை நாம் விளங்கிக் கொண்டு அதனைப் பாராட்டுவோம். எப்படி வாழ்வது என்பதை நாம் அறிய வேண்டும் என்பதே வேதாகமத்தின் நோக்கமாகும்.

ஏதேன் தோட்டத்தில், சோதனையின் நோக்கம் என்னவென்றால், "உங்களது சரீரத் தேவைகளை முதலாவதாகவும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறாரோ அதை இரண்டாவதாகவும் வையுங்கள்'' என்ற தவறான செய்தியை மக்கள் பின்பற்ற வேண்டுமென்பதே. அவர்களின் சரீரப்பிரகாரமான தேவைகளை அவரது வார்த்தையின் வெளிச்சத்தில் விளக்கவேண்டும் என தேவன் விரும்பினார். அதாவது, சோதனை என்பது "உங்களது தேவைகள் முதலாவதும், தேவனின் வார்த்தை இரண்டாவதுமாகும்''.

கல்லுகளை அப்பங்களாக மாற்றும்படி இயேசு சோதிக்கப்பட்டபோது, சோதனை என்னவென்றால், "நீர் நாற்பது நாட்கள் உபவாசித்திருக்கிறீர். சரீரப்பிரகாரமான தேவையை முதலிலும் தேவ வார்த்தை மற்றும் தேவ சித்தத்தை இரண்டாவதாகவும் வைக்கும்படி உம்முடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை பயன்படுத்தும் என்பதே. அதற்குப் பதில் "வார்த்தை முதலில், தேவைகள் இண்டாவது" என்பதாகும்.

வேதாகமத்தின் செய்தியை இரண்டு வார்த்தைகளில் தொகுக்கக்கூடும். அந்த இரண்டு வார்த்தைகள் 'தேவன் முதலில்' என்பதாகும். இந்த மூன்று சோதனைகளுக்கும் தேவன் அளித்த பதில்களை இந்த இரண்டு வார்த்தைகளில் தொகுக்கக்கூடும். சோதனைக்குட்படுவது பாவமல்ல சோதனைக்கு நாம் எவ்வாறு இடங்கொடுக்கிறோமோ அதுதான் பாவமாகும் அல்லது ஜெயமாகும். சோதனைக்கு இன்றும் நம்முடைய பதில் 'தேவன் முதலாவது' என்ற அந்த இரண்டு வார்த்தைகளாகவே இருக்க வேண்டும்.

இரண்டாவது சோதனையில் சாத்தான் வேதவசனத்தை மேற்கோள் காட்டுகிறான். மட்டுமல்ல, சாலமோன் ஆலயத்தின் உச்சியிலிருந்து குதிப்பதின் மூலம் இயேசு தான் தேவகுமாரன் என்பதை நிரூபிக்கும்படியாகவும் ஆலோசனை கூறுகிறான். அதன் எண்ணம் என்னவென்றால் கீழே விழுவதிலிருந்து அவர் இயற்கைக்கு அப்பாற்பட்டு தப்பிவிடும்போது, அவர் தேவனுடைய குமாரன் என்று நிரூபித்து விடுவார் என்பதாகும்.



திரும்பவும் இயேசு, "தேவனை பரீட்சைப்பாராதிருப்பாயாக" என்று சாத்தானுக்குப் பதிலளிக்கிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக மாறுகிற ஒரு சவாலை ஏற்று, 'விசுவாசத்தின் பல்கலைக்கழகத்தில்' நாம் சேரும்போது, தேவனுக்கு பரீட்சைவைப்பதற்கு நமக்கு உரிமை கிடையாது. நம்மைப் பரீட்சை செய்து பார்க்கவேண்டும் என எந்த நேரம் அவர் விரும்பினாலும்அப்படிச் செய்ய அவருக்கு உரிமை உண்டு. ஆனால், தேவனைப் பரீட்சை செய்ய நமக்கு உரிமையில்லை.

மூன்றாவது முறையாக, சாத்தான் இயேசுவை சோதனைக்குட்படுத்தியபோது, அவர் அவனைப் பணிந்து கொண்டால் உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் அவருக்குக் கொடுப்பதாகக் கூறினான். முதல் சோதனைக்கு வேதவசனத்தைக் கொண்டு அவர் எப்படிப் பதிலளித்தாரோ அதற்கு இணையாக வேதவசனத்தைக் கொண்டு மறுபடியும் நமது கர்த்தர் பதிலளித்தார். "....உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே..." "தேவன் முதலாவது" என்ற இரண்டு வார்த்தைகளில்தான் சாரம்சம் அடங்கியுள்ளது. இந்த முறை இந்த இரண்டு வார்த்தைகளோடு "அவர் ஒருவருக்கே" என்ற இரண்டு வார்த்தைகளும் சேர்ந்துள்ளது (மத்தேயு 4:10).

இயேசுவுக்கு நேர்ந்த இந்த மூன்று சோதனைகளும், நீங்களும் நானும் தனிப்பட்ட விதத்தில் பயன்படுத்துவதற்காகதான் என்பது தெளிவாகிறது. முதலாவது, "தேவன் முதலில்'' என்பதாகும். முதலாவது தேவனின் வார்த்தை, பின்பு நமது தேவைகள். தேவனை, மட்டுமே ஆராதியுங்கள்.

மூன்றாவது முறையாக சாத்தானை இயேசு எதிர்த்த பின்பு, இயேசுவிடமிருந்து "சிறிது காலத்திற்கு" சாத்தான் விலகிச் சென்றதை நாம் வாசிக்கிறோம். அவரது வாழ்க்கையின் கடைசி மூன்று வருட வாழ்க்கையில், இரட்சகர் மீது ஒரு வல்லமையான, தொடர்ந்த, இரக்கமற்ற சாத்தானின் தாக்குதல் இருந்ததை இந்த வார்த்தைகள் உணர்த்துகின்றன. அவர் மரித்து, நமது இரட்சிப்புக்காக உயிரோடெழுந்த அந்தக் கடைசி வாரத்திற்குள் அவர் பிரவேசித்தபோது, அது உண்மையானது.

சாத்தானின் சோதனைகளில் ஒன்றிற்கு இயேசு இடங்கொடுத்திருப்பாரோ என சிலர் ஆச்சரியப்படுகின்றனர். வனாந்திரத்தில் இயேசு சோதனைக்குட்பட்டபோது, பரலோகத்தின் முன்பக்கத்தில் பிதாவாகிய தேவன் நின்று தம் சுவாசத்தை அடக்கிக் கொண்டு, "அவர் அதை செய்து முடிப்பாரோ?" என யோசித்திருப்பார் என நீங்கள் எண்ணுகிறீர்களா? அவரது குமாரன், ஆதாமைப் போன்று சோதனைக்கு இடங்கொடுக்கமாட்டார் என தேவன் அறிந்திருப்பார்

என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்டபோது, இயேசு விழுந்து போகும்படியான வழி ஏதுமில்லை.

அப்படியானால், அவர் ஏன் சோதிக்கப்பட்டார்? நமது இரட்சகரின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் ஆரம்பத்தில், அவர் எந்த சோதனையிலும் விழுந்து போக முடியாது என்பதை நமக்கு காண்பிக்க வேண்டியது தேவனுக்கு முக்கியமாக இருந்து. வேதாகமத்திலுள்ள கடைசி வசனங்களில் ஒன்று இயேசு கிறிஸ்துவைப் பற்றி இதைச் சொல்லுகிறது: "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்..." (யூதா. 24). சோதிக்கப்பட்டு விழுந்து போகாத கிறிஸ்து நம்மில் வாழ்ந்தால், நாம் விழுந்து போவதிலிருந்து அவர் நம்மைத் தடுக்க முடியுமா? நிச்சயமாக அவரால் முடியும். அவரை நாம் நம்பி, அவரோடு வாழ்ந்தோமானால், விழுந்து போவதிலிருந்து அவர் நம்மைத் தடுக்க முடியும்.

சோதனையை அவர் சந்தித்த விதத்தின் மூலம், தீமையான ஒன்றின் சோதனைகளுக்கு நீங்களும் நானும் எப்படி செயல்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறார். நாம் ஒவ்வொரு வருடமும், சரீரப்பிரகாரமானதை முதலிலும், ஆவிக்குரிய காரியத்தை இண்டாவதாக வைக்கவும் கூடாது. ஆனால் சாத்தான் "தேவனைத்தவிர வேறெதை வேண்டுமானாவும் உங்கள் வாழ்க்கையில் முதலாவதாக வையுங்கள்'' என இரக்கமற்ற வகையில் கூற முயற்சிக்கிறான்.

நமக்குக் கிடைக்கும் சிறந்ததை சாத்தான் பறித்துக் கொள்ள முயற்சிக்கிறான். நல்லதை நாம் செய்யும்படி அவன் நம்மை சோதித்து அதனால், நமக்காக தேவன் வைத்திருக்கும் சிறந்ததை இழந்து போக செய்கிறான். ஏனென்றால் தேவன் நம்மை நேசிக்கிறார். அவரை நாம் 'முதலாவது' வைக்கும்போது, அவரிடமுள்ள சிறந்தவற்றை அவரால் நமக்குக் கொடுக்க முடியும் என்பதை அவர் அறிவார். அவரை முதலாவது நாம் வைக்க வேண்டுமென அவர் விரும்புவதோடல்லாமல், சாத்தானின் சோதனைகளை தோற்கடிக்க வேணடுமெனவும் விரும்புகிறார்.



அதிகாரம் ஐந்து

# 'இயேசுவின் மிகச் சிறந்த பிரசங்கம்"

இயேசு அநேக சிறந்த பிரசங்கங்களைத் தந்திருக்கிறார். அவைகளில் அவர் தந்த மலைப் பிரசங்கம் மிகச் சிறந்த ஒன்றாக இருந்தது. அவரது இந்தப் பிரசங்கம் முழு வேதாகமத்தின் நீதி சம்பந்தமான சுருக்கமான தொகுப்பாகும். இந்தப் போதனை கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் கவனிக்கும்போது, இன்றுள்ள பிரசங்கத்தைப் போன்ற ஒரு பிரசங்கம் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்.

## பிரசங்கம் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம்

இயேசுவின் இந்த மிகச் சிறந்த பிரசங்கத்தின் பொருளைப் பற்றி நாம் கவனிக்கும் முன்பு, அது கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் கவனிக்க வேண்டியது முக்கியமாகும். வேதத்தைக் கற்பதற்கான விதி முறைகளில் ஒன்று, வேத பகுதியை அதன் சந்தர்ப்பத்தோடு சேர்ந்து எப்பொழுதும் நாம் காண முயற்சிப்பதாகும். நாம் வேதத்தைப் படிக்கும்போது, அதில் சொல்லப்பட்ட சூழ்நிலையும், அதற்கு முன்பு என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும், போதனை கொடுக்கபட்ட காலத்தில் என்ன நடந்தது என்பதையும், நாம் படிக்கும் வேதபகுதியில் சொல்லப்பட்ட போதனை அல்லது சம்பவத்திற்கு பிறகு என்ன நடைபெறுகிறது என்பதையும் கவனிக்கவேண்டியது முக்கியமாகும். இது நாம் படிக்கும் வேத பகுதியை விளக்கிச் சொல்ல நமக்கு உதவுகிறது.

மத்தேயு நான்காம் அதிகாரத்தின் முடிவில், இந்தப் பெரிய போதனையின் சந்தர்ப்ப சூழ்நிலையை மத்தேயு விவரிப்பதை நாம் காண்கிறோம். பல பட்டணங்களிலிருந்தும், பல நாடுகளிலிருந்தும் சுகம் பெறும்படியாக வெகுதூரத்திலிருந்து பயணம் செய்து வந்த நோயுற்ற மக்களை இயேசு குணமாக்கினதைப்பற்றி நாம் வாசிக்கிறோம். (மத்தேயு 4:23-5:1)

கலிலேயா கடலோரத்தை சுற்றி திரண்டிருந்த திரள் கூட்ட மக்களை இயேசு குணமாக்கிய வேளையில், அவருடைய சீடர்களில் சிலரை மலையின்மேல் அவரோடு ஏறிவரும்படி அழைத்தார் (மாற்கு 3:13). இயேசு செய்த இந்தக் காரியம் திரள் கூட்டத்தை இரண்டு கூட்டமாகப் பிரித்தது. மலையின் அடிவாரத்திலிருந்தவர்கள் பிரச்சினையுடனிருந்தவர்கள். இயேசுவுடன் உயர்ந்த இடத்தில் இருந்தவர்கள். பிரச்சினைகளின் தீர்வு மற்றும் பதிலின் ஒரு பகுதியாகவாவது இருக்கும்படி விரும்பியவர்களாகும். மத்தேயு சுவிசேஷத்தின் ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது அதிகாரங்கள் இந்த சந்தர்ப்பத்தில் இயேசு கொடுத்த சிறந்த பிரசங்கத்தை பதிவு செய்துள்ளன.

இந்த சிறந்த போதனை கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை "முதல் கிறிஸ்தவ கூட்டம்" என அழைக்கிறேன். இயேசு இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்த போது அவர் சீடர்களுக்குக் கொடுத்த சவால் என்னவென்றால், "நீங்கள் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கிறீர்களா? அல்லது பிரச்சினைக்குரிய தீர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களா?" இந்தக் கூட்டத்தில், இன்னும் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருப்பவர்களுக்கான அவரது தீர்வின் ஒரு பகுதியாக இருக்கும்படி சீடர்களை இயேசு தெரிந்தெடுத்தார்.

நோயுள்ள மக்கள் கூட்டத்திற்கு இயேசு ஊழியம் செய்தார். அவர் தேவ குமாரனாக மனித ரூபத்தில் இருந்தாலும், பிரச்சினைகள் அனைத்தையும், சரீரத்தில் ஒரு மனிதனாக அவரால் ஒருபோதும் தீர்வு செய்ய முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, அவர் இதைக் குறித்து ஆலோசித்து, முதல் கிறிஸ்தவ கூட்டத்தை ஒழுங்கு செய்தார். மாற்குவைப் பொருத்தவரை, உயர்ந்த இடத்தில் அந்தக் கூட்டத்திற்கு வந்தவர்கள் இயேசுவினால் அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே (மாற்கு 3:13).

ஏழாவது அதிகாரத்தில், ஒரு பெரிய அழைப்புடன் இயேசு இந்தக் கூட்டத்தை நிறைவுச் செய்ததை நாம் வாசிக்கிறோம். அவர் அழைப்புக் கொடுத்தபோது பன்னிரெண்டு சீடர்கள் மட்டுமே அதற்குப் பதில் கொடுத்தனர். மலையிலிருந்து இயேசு இறங்கி வந்த சிறிது காலத்திலேயே பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை அவர் நியமனம் செய்கிறார். இயேசு, தனது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும் முதல் கிறிஸ்தவக் கூட்டத்தில் தான் தெரிவு செய்தார் என நம்புகிறேன்.

## பிரசங்கத்தில் அடங்கியுள்ள பொருள்

மலையின் அடிவாரத்திலுள்ள மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்படி சீடர்களுக்கு அழகான சில பண்புகளை இயேசு போதிக்கத் துவங்கினார் (5:3-12). இந்த எட்டு ஆவிக்குரிய பண்புகள் இயேசுவின்



ஒரு சீடனின் மனநிலையைக் காட்டுகிறது. இயேசுவைப் பொருத்தவரை, காரியங்களைக் கையாளும் விதம், ஒளி நிறைந்த வாழ்க்கைக்கும் இருள் நிறைந்த வாழ்க்கைக்கும் இடையிலான வித்தியாசமாக இருக்கக் கூடும் (மத்தேயு 6:22, 23).

## ஆவிக்குரிய பண்புகள் : பொதுவான சில குறிப்புகள்

இந்த எட்டு ஆவிக்குரிய பண்புகள் தான் அவரது பிரசங்கமாகவும், இந்தப் போதனையின் மற்ற எல்லாம், அவர் பிரசங்கித்ததை அவர் செயல்படுத்தின விதத்தைப் பற்றியதுமாகும். இந்தப் பிரசங்கம், ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனாக மாறுவதினால் ஏற்படும் துன்பங்களைப் பற்றிக் கூறுகிறது. இந்த அழகான ஆவிக்குரிய பண்புகள் ஒரு கிறிஸ்தவனாக இருப்பவனுக்குரிய சுபாவத்தை சித்தரித்துக் காட்டுகிறது. இதனைத் தொடர்ந்து வருகின்ற நான்கு உவமானங்களான, உப்பு, ஒளி, பட்டணம் மற்றும் விளக்குத்தண்டு ஆகியவை கிறிஸ்தவ சுபாவம், உலகப் பிரகாரமான கலாச்சாரத்தை பாதிக்கும்போது அதில் சம்பந்தப்பட்டுள்ள சவால்களை விவரிக்கிறது. "நீங்கள் பிரச்சினையின் பங்காக இருக்கிறீர்களா? அல்லது இயேசுவின் தீர்வின் ஒரு பங்காக இருக்கிறீர்களா? அவரின் பதில்களில் ஒன்றாக நீங்கள் இருக்கிறீர்களா? அல்லது நீங்கள் இன்னும் கேள்விகள் கேட்பவர்களாக இருக்கிறீர்களா?" என்பதே முக்கியமான காரியமாக இருக்கிறது.

நான்காவது மற்றும் ஐந்தாவது ஆவிக்குரிய பண்புகளுக்கிடையில், ஒரு கற்பனையான 'ஆவிக்குரிய பிரகாரமாக பிரிக்கின்ற கோடு' இருக்கிறது. தேவன் தமது பணிக்கென்று சீடர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும்போது, அதற்கென்று ஒரு வழிமுறையைக் கையாண்டார். அந்தத் தலைவர்களிடம் வருகின்ற அனுபவங்கள் போகின்ற அனுபவங்கள் உண்டு. தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவர்கள் போகும் முன்பு, தேவனிடம் அவர்கள் வருவதற்குரிய ஒரு பொருள் பொதிந்த வாழ்க்கை இருந்தது.

தேவனுக்கென்று ஊழியர்களாக அவர்கள் மாறும் முன்பு அவர்கள் தேவனை ஆராதிக்கிறவர்களாக இருந்தனர். முதல் நான்கு ஆவிக்குரிய பண்புகள் தேவனிடம் வருவதினால் கற்றுக் கொண்ட இயல்புகளைத் தெரிவிக்கிறது. மற்ற நான்கு பண்புகள், தேவனுக்கென்று நாம் போகும்போது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இயல்புகளைச் சித்தரிக்கிறது.

தாலந்துகளைத் தனிமையில் வளர்ச்சியடையச் செய்யலாம். ஆனால், மனிதத்தன்மை அல்லது மனித குணநலன்கள் மக்களோடு நாம் உறவு கொள்ளும்போதே வளர்ச்சியடைகிறது. முதல் நான்கு ஆவிக்குரிய பண்புகள் மலைஉச்சியில் அல்லது தேவனோடு நமக்குள்ள நெருங்கிய

அனுபவத்தில் வளர்ச்சியடைந்தன (மத்தேயு 6:6). முதல் நான்கு பண்புகளை, தேவனோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவில் வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் மற்ற நான்கு பண்புகளை மக்களோடு நமக்குள்ள உறவுகளின் மூலமே கற்றுக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும் முடியும்.

இந்த ஆவிக்குரிய பண்புகள் இரண்டிரண்டாக நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன: துயரப்படுகிறவர்கள், ஆவியில் எளிமையுள்ளவர்கள்; நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள்; இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், இரக்கமுள்ளவர்கள் மற்றும் நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள், சமாதானம் பண்ணுகிறவர்கள். இயேசுவின் ஒரு சீடனால் கற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஆவிக்குரிய பார்வையை ஒவ்வொரு ஜோடி பண்புகளும் சித்தரிக்கின்றன.

முதல் இரண்டு பண்புகள் சீடன் இப்படியாகச் சொல்லும்படி கற்பிக்கிறது: "என்னால் என்ன செய்ய முடியும் என்பது முக்கியமல்ல, ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்" அல்லது "அவரையன்றி என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்பதே. இரண்டாவது பிரிவின் பண்புகள் ஒரு சீடனிடமிருந்து பின்வரும் அறிக்கையைக் கொண்டு வருகிறது: "எனக்கு என்ன வேண்டும் என்பது முக்கியமல்ல. ஆனால் அவர் என்ன விரும்புகிறார் என்பதுதான் முக்கியம்". மூன்றாவது பிரிவு, "நான் யார் அல்லது என்ன என்பது முக்கியமல்ல, ஆனால் அவர் யார் மற்றும் என்ன என்பதுதான் முக்கியம்". நான்காவது பிரிவு "நான் என்ன செய்தேன் என்பது முக்கியமல்ல, ஆனால் அவர் என்ன செய்தார் என்பதுதான் முக்கியமாகும்" என்று கூறுகிறது.

இறுதியாக, இந்த ஆவிக்குரிய பண்புகள், மலையின் மீது ஏறுவதைப் போன்றதாகும். முதலாவது, மலைக்கு குறுக்கு வழியில் நம்மைக் கொண்டுச் செல்கிறது. இரண்டாவது இன்னும் கொஞ்ச தூரம் எடுத்துச் செல்கிறது. சாந்த குணம் பாதையின் முக்கால் பாகத்தை சென்றடையும்படி நம்மை நடத்துகிறது. மட்டுமல்ல, நீதியின் மேலுள்ள தாகம் நம்மை மலை உச்சிக்குக் கொண்டு செல்கிறது. இப்படி மலைமீது ஏறுகிற பண்புகள் நம்மை கிறிஸ்துவிடம் கொண்டு ''வருகிற'' பண்புகளாகும்.

ஒவ்வொரு கூட்டமும் ஒரு முடிவுக்கு வருகிறது. அதில் பங்கெடுத்தவர்கள் மலைஉச்சியை விட்டுச் செல்ல வேண்டும். "போகும்" பண்புகள் நம்மை மலையிலிருந்து கீழே கொண்டு வருகின்றன. ஒரு சீடன் தேவ நீதியினால் நிரப்பப்படும்போது, அவன் அல்லது அவள் எப்படியிருப்பார்கள்? அவர்கள் சுயநீதியுள்ள பரிசேயர்களைப் போன்று



இருப்பார்களா? இல்லை, அவர்கள் சுத்த இருதயத்துடனும் இரக்கக் குணத்துடனும் இருப்பார்கள், என நாம் வாசிக்கிறோம். சுத்த இருதயத்துடன் இரக்கமுள்ளவர்களாய் இருப்பதினால், தேவையுள்ள மக்கள் கூட்டத்தின் பிரச்சினைகளுக்கு தேவனுடைய தீர்வின் பங்காக இருக்கும்படி மலையை விட்டு இறங்கி வர ஆரம்பிக்கின்றனர். சமாதானம் பண்ணுகிற சீடன் துன்பம் அனுபவிக்கும்போது அவர்கள் பிரச்சனைகள் இருக்கின்ற மலை அடிவாரத்துக்கு மறுபடியும் வந்து விட்டனர் என நாம் அறிவோம்.

## மலைப் பிரசங்கம்: சில தனிப்பட்ட குறிப்புகள்

## "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்."

ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருப்பது நம்மைக் குறித்த சரியான இயல்பாகும். நம் சுயத்தினால் தேவனின் தீர்வாக நாம் ஒருபோதும் இருக்கமாட்டோம் என்பதை உணர்வது தான் இந்த நோக்கமாகும். தீர்வு கொடுக்கும் ராஜாவுக்கு நாம் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். தமது சீடர்களின் மூலமாக தேவன் விரும்பும் மனித தேவைக்கான தீர்வின் பகுதியாக நாம் இருக்க வேண்டுமானால் நமக்கு இருக்க வேண்டிய முதல் பண்பு இதுதான். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், ''ஆவியில் எளிமை'' என்று குறிப்பிடப்பட்ட கிருபையின் நிலை "தாழ்மையாகும்"

## "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்"

இரண்டாவது அழகான ஆவிக்குரிய பண்பு, "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்'' (5:4) என்பது. இரண்டாவது பண்பின் முக்கியமான விளக்கம் மற்றும் செயல்படுத்துதல் என்பது, பாடுகளை நாம் ஒருபோதும் அனுபவிக்காவிட்டால், மலையின் அடிவாரத்தில் இருந்த திரள் கூட்டத்தினரால் சொல்லப்பட்ட பாடுகள் அனைத்திற்கும் இயேசுவின் தீர்வு மற்றும் பதிலின் பகுதியாக நாம் ஒருபோதும் இருக்கமாட்டோம். ஆவியில் எளிமையுள்ளவர்களாய் நாம் இருக்கிறோம் என்பதைக் கற்றுக் கொள்ளும்போது நாம் கிறிஸ்துவின்றி எதையும் செய்ய முடியாது என்பதை அறிந்து கொள்ளுகிறோம்.

## "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

வேதாகமத்தில், சாந்தகுணம் என்பது, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருக்கிறது. இது பலவீனம் என்று அர்த்தமல்ல, ஆனால் சாதுவான ஒரு நிலையாகும். கொடிய, வல்லமையான ஆனால் அடங்காத குதிரையை கற்பனை செய்து பாருங்கள்: வாயில் கடிவாளம் இட்டு அடக்கப்படாத அல்லது முதுகில்

சேணம் இல்லாததான ஒரு பலமுள்ள மிருகம். அந்த மிருகத்தின் எல்லா பலமும் கட்டுக்கடங்காததாகவுள்ளது. அந்த மிருகம் கடைசியாக, கடிவாளமும் சேணமும் இடப்பட்டு ஒரு ஒழுங்கை ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படியும்போது 'சாந்தம்' என்ற வார்த்தையின் அர்த்தத்திற்கு அந்த மிருகம் ஒரு உதாரணமாகிறது.

இயேசு, தாம் சாந்தகுணமுள்ளவர் எனக்கூறுகிறார் (மத்தேயு 11:28-30). அவர் தம்மைப்பற்றிய இன்னொரு காரியத்தைக் குறித்து அறிக்கை செய்யும்போதும், அதையே அவர் சொல்லுகிறார். பிதாவைப் பற்றி பேசும்போது, ''...பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்...'' (யோவான் 8:29) எனச் சொல்கிறார். இயேசு நுகத்தை அல்லது பிதாவின் சித்தத்தின் ஒழுங்கை ஏற்றுக்கொண்டார். அதுதான் அவரை சாந்த குணமுள்ளவராக்கியது. நமது வாழ்க்கை மற்றும் ஊழியங்களுக்கான அவரது சித்தத்தின் ஒழுங்கை ஏற்றுக் கொண்டு நமது விருப்பங்களை தேவனிடம் அர்ப்பணிக்கும்போது, இந்த உலகின் அவரது தீர்வின் ஒரு பங்காகவும், நம்முடைய தேவைகளை - ஆசைகளை - அவரிடம் அர்ப்பணிப்பவர்களாகவும் இருப்போம்.

"நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

நமது சந்தோஷத்திற்காக அல்ல, நீதிக்காகவே நீதியின் மேல் நாம் பசிதாகமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்த ஆவிக்குரிய பண்பாகும். அவருடைய சீடர்கள் நீதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற சத்தியத்தை இந்தப் பிரசங்கத்தில் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். இந்தப் பண்போடுகூட நீதியினிமித்தம் துன்பப்படும் சீடருக்கு ஆசீர்வாதத்தை அளிக்கிறார். ஒரு சீடன் நீதியான நடத்தைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மட்டுமல்ல, அவருடைய சீடர்களின் நீதி, வேதபாரகர் மற்றும் பரிசேயர்களை விட அதிகமாக இருக்க வேண்டும் (5:10, 20; 6:33).

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

'இரக்கம் என்ற வார்த்தையின் அர்த்தம், 'நிபந்தனையற்ற அன்பு' ஆகும். தேவனின் 'அகப்பே' அன்பினால் முழுவதும் நிரப்பப்பட்ட மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பது இந்த பண்பிற்கு ஒரு நல்ல விளக்கமாக இருக்கும். மலைஉச்சியிலிருந்து கீழே இறங்கிச் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வின் ஒரு பகுதியாக இருக்கப் போகிறீர்களென்றால், தேவனின் அன்பினால் நீங்கள் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். நீதியினால் நிறையப்பட்டிருப்பதென்பது தேவனின் அன்பினால் நிறையப்பட்டிருப்பது என்ற அர்த்தமாகிறது.



"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

இந்த ஆவிக்குரிய பண்பில், 'சுத்தம்' என்ற மூல வார்த்தை ஒரு கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதன் சாராம்சம் என்னவென்றால், தேவனின் நிபந்தனையற்ற அன்புடன், சீடன் மற்றவர்களை நேசிக்கும்போது, சுயநலமுடைய எந்த நோக்கமும் அவனது அல்லது அவளது இருதயத்திலிருந்து வெளியேற்றப்படும்.

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்"

சமாதானம் பண்ணுகிறவன் ஒப்புரவாக்குகிறவன். மலையின் அடிவாரத்திலிருக்கும் அடிப்படைப் பிரச்சினை விரோதத்தினால் ஏற்பட்டதாகும். மக்களுக்கு உள்ள பிரச்சினைகளில் பல, தேவனோடும் அவர்கள் வாழ்க்கையில் சந்திக்கும் மக்களோடும் கொண்ட அடிப்படை விரோதத்தினால்தான் ஏற்படுகிறது. அதனால் தான், இந்தக் கூட்டத்தில், அவரது சீடர்களை ஒப்புரவாக்குதலின் முகவர்களாக இருக்கும்படி இயேசு கூறுகிறார்.

பவுலைப் பொருத்தவரை, இயேசுவின் சீடர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியின் நோக்கம், ஒப்புரவாக்குதலைப் பற்றிய செய்தியும் ஊழியமுமாகும். நாம் வெளியே சென்று, மக்களிடம் "இயேசுவினால் தேவன் உங்களோடு ஒப்புரவானார். இயேசு கிறிஸ்துவின் ஊழியனாக, தேவனோடு ஒப்புரவாகுங்கள் என நான் உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்" (2 கொரிந்தியர் 5:20) என்று சொல்ல வேண்டும்.

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்"

இப்படிப்பட்ட அழகான நோக்கங்களோடு மக்கள் இன்று உலகத்தில் இருந்தால், உலகத்தாரால் அவர்கள் பாராட்டப்படுவார்கள் என நீங்கள் நினைக்கக்கூடும், எனினும் எட்டாவது பண்பு, இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் அவர்களின் அழகான நோக்கங்களுக்காக துன்புறுத்தப்பட்டனர் என நமக்குச் சொல்லுகிறது.

இந்தப் பண்புகளுடன் கூடிய சீடன், ஒரு உதாரணமாக இருந்து அவர்கள் என்னவாக இருக்க வேண்டுமென்று மக்களை எதிர்கொள்கிறான். இந்த எதிர்கொள்ளுதலை அல்லது தாக்குதலை அவர் அனுபவிக்கும்போது தங்களது சரியற்ற நோக்கங்களை அறிக்கைச் செய்து, ஆசீர்வதிக்கப்பட்ட அல்லது பண்புகளை எவ்வாறு அடையலாம் என்பதை கற்றுக்கொள்ள முடியும்.

கலகம் இருக்குமிடத்திற்கு ஒப்புரவாக்குதலின் தூதுவன் செல்கிறான். அது ஆபத்தான இடம் தான். இயேசுவின் அதிகாரம் பெற்ற சீடர்கள் ஒப்புரவாக்குதலின் ஊழியங்களுக்காக தம் வாழ்க்கையைக் அர்ப்பணிக்கின்றனர். அந்த சீடர்கள், சமாதானம் செய்யும் ஊழியத்தை அவர்களது வீட்டிலும், சபைகளிலும், அயலகத்திலும் பள்ளி வகுப்புகளிலும் வேலை செய்யும் இடங்களிலும் செய்கின்றனர்.

அதிகாரம் ஆறு

# பிரசங்கத்தை செயல்படுத்துதல்

கிறிஸ்துவின் சாயலைப் போன்ற பண்புகளை இயேசு நான்கு ஆழமான உவமானங்கள் மூலம் விளக்குகிறார். அவரது சீடர்களிடம் அவர்கள் பூமிக்கு உப்பு என்றும்.. உலகிற்கு ஒளி என்றும்... மலையின் மேல் மறைத்து வைக்க முடியாத பட்டணம், விளக்குத் தண்டின் மேலுள்ள விளக்கு என்றும், சொல்லிக் கொடுக்கிறார். (மத்தேயு 5:13-16) இந்த நான்கு உவமானங்களும் பிரசங்கித்ததைச் செயல்படுத்த ஆரம்பிக்கிறது. இந்த உவமானங்களை ஒன்றன்பின் ஒன்றாக பரிசீலிக்கலாம்.

## "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"

இந்த உவமானத்தின் வெளிப்படையான விளக்கம் உப்புதான். இதுவே இறைச்சியை பாதுக்காப்பதற்கு ஒரே வழி என்று அந்த நாட்களின் தெரிந்த உண்மை. உலகம் கெட்டுப்போன இறைச்சியைப் போன்று நாற்றமடிக்கிறது என்றும், அவருடைய சீடர்கள், உலகத்தை ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய அசுத்தத்திலிருந்து பாதுகாக்கும் உப்பாக இருக்கின்றனர் என்றும் இயேசு சொல்லுகிறார்.

இந்த உவமானத்தின் இன்னொரு சாத்தியமான விளக்கம் என்னவென்றால், உயிருள்ள எதுவும் உப்பு இல்லாமல் ஜீவிக்கமுடியாது. இந்த விளக்கத்தைப் பொருத்தவரை, இயேசு, அவருடைய சீடர்களிடம், "மலையின் அடிவாரத்திலிருக்கும் அந்த மக்களுக்கு வாழ்க்கையில்லை. ஆனால், நீங்கள் இந்த எட்டு அழகான குணாதிசயங்களுடன் வாழ்ந்தால், அந்த மக்கள் வாழ்க்கையைக் காண்பதற்கு நீங்கள் வாகனமாக இருப்பீர்கள்" என்று கூறினார்.



## "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்"

அந்தத் திரள் கூட்டமக்களை இயேசு பார்த்தபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல் இருந்தது, எல்லாவற்றையும் விட அவர்கள் மேல் அதிகமாக இரக்கம் கொள்ளும்படிச் செய்தது. அவர்கள் இடதுகைக்கும் வலதுகைக்கும் வித்தியாசம் அறியாதவர்கள். அவர்களுக்குத் தெரியாதது உங்களுக்குத் தெரிந்ததினால், நீங்களே அவர்களுக்குத் தேவைப்படும் ஒளி என்கிறார். மூலபாஷையில் இப்படியாக இருக்கிறது. "உலகத்திற்கு நீங்கள்.. நீங்கள் மட்டுமே ஒளியாக இருக்கிறீர்கள்."

## விளக்குத் தண்டின் மேலுள்ள விளக்கு

இந்த உவமானத்தில் இயேசு இப்படியாகச் சொல்லுகிறார்: "என்னுடைய தீர்வுகளில் ஒன்றாக நீங்கள் மாறும் முன்பு, நீங்கள் ஏற்றப்படாத விளக்காக இருந்தீர்கள். ஆனால், இப்பொழுது, நீங்கள் 'புதிய சிருஷ்டியாக' என்னுடைய சீடர்களில் ஒருவராக மாறுகிற அனுபவத்தை பெற்றதும் உங்கள் விளக்கு ஒளியேற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறை நான் விளக்கை ஏற்றும்போதும், அந்த விளக்கை வைக்க நான் விரும்பும் ஒரு விளக்குத் தண்டை தெரிந்தெடுத்திருக்கிறேன். "நீங்கள் விளக்குத் தண்டின் மேலிருக்கும் விளக்கு" என இயேசு சொல்கிறார்.

## மலையின் மேலிருக்கும் பட்டணம்

நான்காவது உவமானம் என்னவென்றால், மலையின் மேலிருக்கும் பட்டணம் மறைந்திருக்க முடியாது. நமது வாழ்க்கையில் இந்த எட்டு ஆவிக்குரிய குணாதிசயங்களை நாம் கொண்டிருந்தால், கிறிஸ்துவுக்கான நமது சாட்சி மறைந்திருக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் "இரகசிய சீடனாக" இருப்பதென்பது அங்கில்லை.

## வேலி கம்பத்தில் ஒரு கடல் ஆமை

ஒரு வேலி கம்பத்தின்மீது கடல் ஆமை இருப்பதை எப்பொழுதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் பார்த்தால், அந்த ஆமையைப் பற்றிய ஒரு காரியத்தை நிச்சயமாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதாவது அதை யாராவது தான் அங்கு வைத்திருக்க வேண்டும். ஏனெனில், ஆமையினால் ஒரு வேலிகம்பத்தில் ஏறமுடியாது. முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் இயேசுவின் ஒவ்வொரு சீடரும், வேலி கம்பத்தின் மீது இருக்கும் ஒரு ஆமையைப் போன்று உணரவேண்டும். நாமனைவரும் சுற்றிலும் பார்த்து, இந்த உலகில் நாம் எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை புரிந்துகொண்டு,

விளக்குத் தண்டின் மேலிருக்கும் விளக்கையும், மலையின் மேலிருக்கும் பட்டணத்தையும் நினைத்து, ''தேவையுள்ள உலகத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வின் பகுதியாக இருக்கும்படி கிறிஸ்து இங்கு என்னை வைத்திருக்கும் காரணத்தினால் நான் இருக்க வேண்டிய இடத்தில் இன்று நான் இருக்கிறேன்' என உணர வேண்டும்.

### செயல்படுத்துதல் தொடர்கிறது

இந்த சம்பாஷணையின் அதிக கடினமான பகுதியில், அவரது பிரசங்கத்தைச் செயல்படுத்துவதை இயேசு தொடருகிறார் (5:17-48). இரண்டு முக்கிய சொற்றொடர்கள்மூலம் அவரது செயல்படுத்துதலின் இந்தப் பகுதியை இயேசு துவங்குகிறார். முதலாவது அவர் பிரமாணத்தை அழிப்பதற்காக தான் வரவில்லையெனவும், தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றவே வந்ததாகவும் கூறுகிறார். இரண்டாவதாக, வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் நீதியைவிட, சீடர்களின் நீதி அதிகமாக இல்லாத வரை, அவரது போதனைகளை உண்மையாகவே அவர்கள் புரிந்துகொள்ளவில்லை எனப் பொருள்படும் என்கிறார் (17-20).

அதிகாரம் ஐந்தில் உள்ள இந்த நீளமான பகுதியில், இயேசு "...உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்தேயு 5:21-48) என ஆறு முறை சொல்வதைக் கவனிக்கவும். என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அதிகமாக இயேசு மேற்கோள் காட்டுகிறார். அவர் மோசேயை சுட்டிக்காட்டாது, பரிசேயரையும் வேதபாரகரையும் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்கள் போதித்த ஒன்றைத்தான் அவர் குறிப்பிட்டார். அது மோசேயின் போதனையோ அல்லது தேவனுடைய வார்த்தையோ அல்ல. மோசே கற்றுக்கொடுத்த ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டு பேசும்போது அவர்கள் மோசே கூறியதின் சரியான கருத்தை அறிந்து கொள்ளவில்லை என்கிறார்.

இந்தப் போதனையின் சாராம்சம்: "நான் போதிக்கும் அனைத்தும் தேவ வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது, என்னுடைய போதனை வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் போதனையோடும் பாரம்பரியத்தோடும் ஒத்துப் போவதில்லை'' என்பதே. அவரது மிகச் சிறந்த போதனையின் இந்தப் பகுதி இந்த மதத் தலைவர்களின் போதனைகளுக்கு சவாலாக இருந்தது. அவருடைய சவாலை அந்த மதத்தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை சிலுவையில் அறையும்வரையும், அவருடைய சவால் தொடர்ந்தது.

### வேதவசனங்களின் நோக்கம்.

வேதவசனங்களை, இயேசுவும், மதத்தலைவர்களும் அர்த்தப்படுத்தி கடைப்பிடித்த விதத்தில் இருந்த அடிப்படையான வித்தியாசம்



என்னவென்றால், தேவனுடைய கட்டளையை மக்களின் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் முன்பு, இயேசு தேவனுடைய கட்டளையை, தேவனின் அன்பின் வண்ணங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி (prism) வழியாகக் கொண்டுச்சென்றார். வேதபாரகரும் பரிசேயரும் தேவனுடைய பிரமாணத்தை கற்றுத் தந்தபோது, சீனாய் மலையில், தேவனுடைய ஜனங்களின் நன்மைக்காக தேவனின் பிரமாணம் மோசேக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை அதன் நோக்கத்தையும் புரிந்துகொள்ளவில்லை.

தேவனுடைய பிரமாணம், அவரது மக்களுக்காக அவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்படுத்தலாகும். வேதத்தின் நோக்கத்தை இயேசு ஒருபோதும் கைவிடவில்லை. இயேசு அவரது சீடர்களிடம், அவர்கள் கற்றுக்கொள்ளும்படியும், மலையின் அடிவாரத்தில் இருக்கும் திரள்கூட்டத்தினரிடம் அவர்கள் திரும்பும்போது மறக்காமலுமிருக்கும்படியும் கூறுகிறார். கிறிஸ்து தம் சீடர்களிடம் தேவனுடைய கட்டளையை மனிதர் வாழ்வில் நடைமுறைப்படுத்தக் கற்றுக்கொண்டால் அவர்கள் இந்த உலகுக்கு ஒளியாயிருப்பார்கள் என்றார்.

### உறவு முறையில் நீதி (21-48)

பின்பு இயேசு தமது போதனையை எப்படி பயன்படுத்துவது என்பதைக் குறித்து தமது சீடர்களுக்குக் கூறுகிறார். அவர் சுட்டிக்காட்டிய முதல் உறவு அவர்களது சகோதரன் அல்லது கூட இருக்கும் சீடனிடம் கொள்ளும் உறவு. சில வேளைகளில் உறவில் "முதலில் உன் சகோதரன், பின்பு தேவன்" என போதிப்பதைக் கேட்பது குறிப்பிடத்தக்கது. நமது உடன் விசுவாசிகளிடம் உள்ள உறவை இயேசு எவ்வளவு உயர்வாக மதிக்கிறார் என்பதை இது காட்டுகிறது. நாம் ஒருவரையொருவர் இழந்து போனோம் என்றால், உலகை நாம் ஜெயிக்க முடியாது.

பின்பு மக்கள் மனைவிகளோடு அவர்கள் கொண்டிருக்கும் உறவைப்பற்றி இயேசு பேசுகிறார் (31-32). அவர்கள் மனைவிகளோடு அவர்களுக்குள்ள உறவு நிரந்தரமாக இருக்க வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கிறார். நாம் சந்திக்கும் விவாகரத்திற்கு காரணம் நம்பிக்கைத் துரோகமாகும். விவாகரத்து பரவுகின்ற ஒரு நோயாக இருக்கிற நிலையில், குடும்பங்கள் சிதைவதும் பிள்ளைகள் வேதனைப்படுவதும் அதிகமாகின்றன. மேலேயுள்ள வசனங்களில் இயேசு கூறும் போதனையில் தோற்றுப்போகும் மனிதர்களால், 'மலையின் அடிவாரத்தில்' அதிகமான வேதனையும் பாடுகளும் இருக்கிறது.

பரிசேயர்கள் செய்தது போல், தாங்கள் பேசும்போது, அனாவசியமாக ஆணையிட்டுச் சொல்லாதிருக்கும்படி, அவர்கள்

அறிவுறுத்தப்பட்டனர். ‘ஆம்’ என்று அவர்கள் சொல்லும்போதும், ‘இல்லை’ என்று சொல்லும்போதும் உண்மையாக உணர்ந்து சொல்ல வேண்டும். வேதாகம வார்த்தையின் மனிதர்களாக மட்டுமில்லாது, தம்முடைய சொந்த வார்த்தைகளில் உண்மை காக்கும் மனிதர்களாக, நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (33:37).

### பிரதான ஒழுங்குமுறை (38-48) **The Supreme Ethic**

இயேசு, தமது நீதிபோதனைகளில் எல்லாவற்றிலும் முதன்மையானதை நமக்குத் தருவதின் மூலம், செயல்படுத்துதல் என்ற இந்த நீண்ட பகுதியை முடிவுக்குக் கொண்டுவருகிறார். இந்த முடிவான வசனங்களில் இயேசு போதிப்பது மற்றெல்லா மதத்தின் நீதிபோதனையைவிட உயர்ந்த ஒன்றை வெளிப்படுத்துகிறது. இந்தப் போதனை அப்போஸ்தலர்கள் மற்றும் திருச்சபை சரித்திரத்திலுள்ள கோடிக்கணக்கான சீடர்களின் மரணத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது. இந்த வசனங்கள் இயேசுவின் போதனைகளில் செயல்படுத்துவதற்கு மிகக் கடினமானதாகவும் கருதப்படுகிறது: நமக்கு மற்றவர்கள் தீமை செய்யும்போது நாம் பதிலுக்குத் தீமை செய்யக்கூடாது என்றும், நமது விரோதிகளையும் நேசிக்க வேண்டும் என்பதும், அவரது அதிகக் கடினமான கூற்றுகளாகும்.

இந்த ஒழுக்கத்தைப்பற்றி இயேசு மலையில் அடிவாரத்தில் பலதரப்பட்ட திரள்கூட்டத்தினருக்குப் போதிக்கவில்லையென்பதை நினைவில் கொள்ளவும். அது தம்முடைய சீடர்களுக்கு மலைக்கு மேல் கொடுக்கப்பட்டது. அவர்கள் இயேசுவைப் பின்பற்றி அவருக்காக மரிக்கும்படியாக ஒரு ஒப்படைப்பை செய்தவர்களாவர் (லூக்கா 9:23-25; 14:25-35). தமது சீடர்களாக இருக்க ஒப்புக்கொண்டவர்கள் தம்மைப் பின்பற்றுகையில், ஒரு சிலுவையை சுமந்து செல்ல வேண்டும் என்பதை அவர் தெளிவுப்படுத்தினார். ‘தீமையை எதிர்த்து நிற்க வேண்டாம்’ என்றும் “உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்” என்றும் இயேசு சொன்னபோது, எங்கே, எப்பொழுது, எப்படி, மற்றும் எதற்காக அவர்கள் மரிக்கவேண்டுமென அவர் விரும்பினார் என்பதை அவர் அவர்களிடம் கூறினார்.

1220ம் ஆண்டில் ‘பரிசுத்த யுத்தம்’ நடந்தபோது, காயப்பட்ட ஒரு துருக்கியை சேர்ந்த நபருக்கு பிரான்ஸிஸ் அசிசி பணிவிடை செய்தார். போரில் ஈடுபட்ட ஒருவர் குதிரையின் மீதிருந்து பிரான்ஸிஸைப் பார்த்து, ‘இந்த துருக்கியை சேர்ந்த மனிதன் சுகமடைந்ததும் உன்னைக் கொன்றுவிடுவான்’ என்றான். அதற்கு பிரான்ஸிஸ், “நல்லது, அதை அவன் செய்வதற்கு முன்பு, கிறிஸ்துவின் அன்பை அவன் அறிந்து கொண்டிருப்பான்” என்று பதிலளித்தார்.



இந்தப் பகுதியின் மையக்கருத்து, இயேசு கேட்ட “மற்றவர்களை விட அதிகமாக நீங்கள் என்னச் செய்கிறீர்கள்?” (47) என்ற கேள்விதான். இந்தப் பிரசங்கம் முழுவதும், “ஒரு சீடனாக, நீங்கள் வித்தியாசப்பட்டிருக்க வேண்டும்” என்பதைதான் இயேசு போதிக்கிறார். ஒரு மொழி பெயர்ப்பு இயேசுவின் அந்தக் கேள்வியை இப்படியாக விவரிக்கிறது, “உங்களை நேசிப்பவர்களையே, நீங்கள் நேசிப்பீர்களானால், நீங்கள் என்ன கிருபையை அப்பியாசிக்கிறீர்கள்? உங்களை நேசிப்பவர்களை நேசிக்க எந்தக் கிருபையும் தேவைப்படாது.”

புதிய ஏற்பாட்டு சபைக்கு கிருபை கிடைத்தது. அதை, பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பெற்றுக்கொண்டனர் (அப். 2). அந்தக் கிருபை புதிய ஏற்பாட்டு சபை மக்களுக்கு, அவர்கள் வித்தியாசமாயிருக்கக்கூடிய திறமையைக் கொடுத்தது. நமது சத்துருக்களிடம் நாம் உறவு கொள்ள இயேசுவின் இந்த பிரதான நீதியை நாமும் பயன்படுத்தும்போது, கிருபைக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

அத்தியாயம் ஏழு

# வாழ்வதற்கான மூன்று தோற்றங்கள்

அழகான பண்புகளைப் பற்றி இயேசு போதித்தபோது, சீடர்கள் தங்களது உள்ளான நிலையைப் பார்த்து, தங்களது வாழ்க்கையை நடத்தும்படியான அவர்களது மனநிலையை பரிசீலிக்கும்படி இயேசு கூறுகிறார். ஆவிக்குரிய பண்புகளைத் தொடர்ந்து அவர் போதித்த நீண்ட பிரசங்கத்தில், சீடர்கள் தங்களை சுற்றியுள்ள மிக முக்கியமான உறவுகளிடம் இந்தப் பண்புகளை கடைப்பிடிக்குமாறு கூறுகிறார். மலையின் மீது நடந்த கூட்டத்தில், சீடர்கள் கலந்து கொண்டபோது, இயேசு போதித்த ஆவிக்குரிய பண்புகளை, அவர்களின் உறவுகளிடம், முக்கியமாக அவர்களின் சத்துருக்களிடம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கேட்டபோது, இயேசு அவர்களிடம் பகிர்ந்து கொண்ட வாழ்க்கையைப் பின்பற்ற அவர்கள் தயாராயிருந்தனர்.

மத்தேயு 6ம் அதிகாரத்தை நாம் வாசிக்க ஆரம்பிக்கையில், ஒரு உண்மையான சீடனின் ஆவிக்குரிய ஒழுக்கம் மற்றும் அவனுடைய மதிப்புகளை மதிப்பிடும்படி இயேசு கூறுவதாக நாம் வாசிக்கிறோம். அவர் ஆவிக்குரிய ஒழுங்குகளை அவர்களுடன் பகிர்ந்து கொண்டதோடல்லாமல், அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் போதிக்கிறார்.

பரிசேயர்கள், மக்களின் பாராட்டுதலுக்கும், ஒப்புதலுக்காகவும் தங்களுடைய நீதியை அப்பியாசப்படுத்தினார்கள். சீடர்களின் நீதி, தேவனின் ஒப்புதலைப் பெறும்படியாக இருக்க வேண்டுமென அவர்களிடம் இயேசு கூறினார். வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் நீதியை விட அவரது சீடர்களின் நீதி அதிகமாக இருக்க வேண்டுமென அவர் போதித்தார் (5:20).



### கொடுப்பதின் ஒழுங்கு (1-4)

இயேசு முதலாவது போதிக்கும் ஆவிக்குரிய ஒழுங்கு இன்று நாம் சொல்லும் உக்கிராணக்காரரின் பொறுப்பாகும். நமது ஆவிக்குரிய ஆரோக்கியம் மற்றும் நலன்கள் இந்த ஆவிக்குரிய ஒழுங்கை நாம் உண்மையுடன் அப்பியாசப்படுத்துவதின் மூலம் பாதிக்கப்படுகிறது. நாம் கொடுப்பது தேவனுக்கு முன்பாக உண்மையாகவும் அவரைப் பிரியப்படுத்தும்படியாகவும் இருக்க வேண்டும். மக்களைப் பிரியப்படுத்தும்படியாக அல்ல. நாம் தேவனுக்கென்று கொடுத்தால், நாம் என்ன கொடுக்கிறோம் என்பதை எவரும் அறிந்து கொள்ளும்படியாகக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

### ஜெபத்தில் - தேவனோடு தொடர்பு கொள்வதின் ஒழுங்கு (5-15)

எப்படி ஜெபிப்பது என உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் சத்துருவை உங்களால் நேசிக்க முடியாது. அல்லது பிரச்சினையின் பகுதியாக இன்னும் இருக்கும் மக்களின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் தீர்வின் பகுதியாக நீங்கள் இருக்கமுடியாது. உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால், உங்களுக்கு எப்படி ஜெபிப்பது எனத் தெரியாவிட்டால், உங்களது பிரச்சினையைக்கூட உங்களால் தீர்க்க முடியாது. அதனால்தான், ஜெபத்தின் ஒழுக்கத்தை அவரது சீடர்களுக்கு இயேசுவே கூறி, அவர்களுக்கு போதிக்கவும் செய்தார்.

ஜெபத்தைப்பற்றி அவர் போதிக்கும்போது, நாம் ஜெபிக்கும்போது, தேவனோடு நாம் பேசுகிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். நாம் ஜெபிக்கும்போது, விரும்பினால், நாம் ஒரு அறைக்குள் சென்று கதவை மூடிக்கொள்ள வேண்டுமென இயேசு போதித்தார். இயேசுவைப்பொறுத்தவரை, தேவனை, தவிர பிரியப்படுத்த வேறு ஒருவரும் அங்கு இல்லாததால் வெளிப்படையான ஜெபத்தை விட, தனிமையில் செய்யும் ஜெபம் நல்லது. அந்தரங்கத்தில் பார்க்கும் நமது தேவன் அந்த ஜெபத்தைக் கனப்படுத்தி, நமது உண்மையான தனி ஜெபத்திற்குப் பதிலளிப்பதாக வாக்குக் கொடுக்கிறார்.

நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து இந்த உலகம் இதுவரை பெற்றிராத சிறந்த போதனையை இந்தப் பகுதியில் அவர் கொடுக்கிறார். இந்தப் போதனை ‘சீடர்களின் ஜெபம்’ என அழைக்கப்பட வேண்டும். இந்த ஜெபத்தில் ஏழு விண்ணப்பங்கள் உள்ளன. தேவனை, நமது பரலோக பிதாவாக அழைத்த பின்பு, அங்கு அவரை நோக்கிய மூன்று விண்ணப்பங்கள் உள்ளன. உமது நாமம், உமது, ராஜ்ஜியம் மற்றும் உமது சித்தம் அதற்குப் பின்புதான் “எங்களுக்குத் தாரும்” என நாம் ஜெபிக்க வேண்டும்.

இந்த மூன்று தெய்வீகமான விண்ணப்பங்களின் மூலம், 'தேவன் முதலில்' என நாம் ஜெபிக்கிறோம். ஜெபம் என்பது நமக்கு வேண்டிய பொருட்களின் பட்டியலுடன் தேவசமுகத்தின் முன்பு வந்து, தேவனை அதை நமக்குத் தரும்படிக் கேட்பதல்ல. நமது ஜெப அறைக்குள் திறந்த மனதோடு நாம் வந்து, அவருக்காக நம்மை செயல்பட வைக்கும்படி தேவனைக கேட்பதாகும். அதை முதன்மையாகக் கொண்டபின்பு, தனிப்பட்ட விண்ணப்பங்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். தனிப்பட்ட விண்ணப்பங்கள் என்னவென்றால்: "எங்களுக்குத் தாரும், எங்களை மன்னியும், எங்களை நடத்தும் மற்றும் எங்களை விடுவியும்" என்பதே!

முதல் தனிப்பட்ட விண்ணப்பம் என்னவென்றால், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்பதாகும் (11). அப்பம் நமது எல்லாத் தேவைகளையும் குறிக்கிறது. நாம் கேட்கும் அப்பம் 'இன்றைக்' கானதாகும். பின்பு, 'எங்களை மன்னியும்' என்று நாம் ஜெபிக்க வேண்டியுள்ளது (12). நாம் மன்னிக்கிறோம் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் நமது மன்னிப்பு என இயேசு போதிக்கவில்லை. நாம் மன்னிக்கப்பட்டதினால் நாம் மன்னிக்கிறோம். நாம் இந்த அளவுக்கு மன்னிக்கப்படும்போது, மற்றவர்களை நாம் மன்னிக்காதிருப்பது எப்படி? இயேசு கூறியபடி பிறரை மன்னிப்பதை நாம் பழக்கப்படுத்தும்போது மட்டுமே மன்னிப்பை நாம் அனுபவிக்கிறோம்.

அடுத்த தனிப்பட்ட விண்ணப்பம் என்னவென்றால், 'எங்களை சோதனைக்குட்படப் பண்ணாதிரும்' (13). இந்த விண்ணப்பம் உண்மையாகவே, "பிதாவே என் நடைகளை நீர் ஒழுங்குப்படுத்தி என்னை உம்முடைய வழியில் நடத்தினால், நான் சோதனையை சந்திக்கமாட்டேன்" என்பதாகும்.

நான்காவது விண்ணப்பம், "தீமையின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (13) என்பது. நமது ஜெபங்களை எவ்வாறு நாம் துவங்கினோமோ அதே விதமாக, ஜெபத்தை முடிக்க வேண்டுமென நமக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது 'தேவனுக்கு முதலிடம்'. "என் ஜெபத்திற்குப் பதிலளிக்கும் வல்லமை உம்மிடத்திலிருந்து தான் எப்போதும் வரும், ஆகவே அதன் பலன் (ராஜ்ஜியம்) எப்போதும் உமக்கே சொந்தம் மற்றும் மகிமை எப்போதும் உம்மிடமே இருக்கும்" என்ற ஒப்புதலோடும், உறுதிசெய்வதின் மூலமும் நாம் ஜெபத்தை முடிக்கிறோம்.

### உபவாசத்தின் ஒழுங்கு (16-18)

கொடுப்பதும் ஜெபிப்பதும்போல, ஆவிக்குரிய ஒழுங்காக உபவாசமும் இருக்கவேண்டுமென இயேசு கற்றுத் தருகிறார் (16-18). உபவாசம், சரீரப்பிரகாரமானவைகளை விட ஆவிக்குரியவைகளை நாம் அதிகம் மதிக்கிறோம் என தேவனிடமும், நமக்குள்ளும் அறிக்கைச்



செய்கிறது. இயேசுவைப் பொருத்தவரை, நமது ஜெபங்களின் உண்மைத் தன்மையை அது வெளிப்படுத்திக் காட்டுகிறது. அதிகமான ஜெபம் மற்றும் உபவாசத்தினாலன்றி சில அற்புதங்கள் நடக்காது (மத்தேயு 17:21).

### பரலோக மதிப்பின் ஒழுங்கு (19-34)

பின்பு, பரலோக மதிப்பின் ஒழுங்கைப் பற்றி இயேசு போதிக்கிறார் (19-34). இந்தப் பகுதியில், மலையின் அடிவாரத்தில் இருப்பவர்களின் பாடுகளுக்கான இன்னொரு காரணத்தை அவர் விளக்குகிறார். மக்களிடம் ஆவிக்குரிய காரியங்கள் இல்லாததினால், வேதனைப்படுகின்றனர். பிரச்சினையின் ஒரு பகுதியாக இன்னமும் இருக்கும் மக்களுக்கு அவரது தீர்வின் ஒரு பகுதியாகவும் பதில்களில் ஒன்றாகவும் சீடர்கள் இருப்பதற்கு அவர்களுக்கு கிறிஸ்துவின் பரலோக ஆவிக்குரிய மதிப்பு இருக்க வேண்டும்.

பரலோகத்திலும், பூமியின் மீதும் பொக்கிஷங்கள் உண்டு. கெட்டுப் போகிறதும், விலைமதிப்புக் குறையக்கூடியதுமான பொக்கிஷங்களை அவரது சீடர்கள் பூமியில் சேர்த்து வைக்கக் கூடாது. பரலோகத்தில்தான் பொக்கிஷத்தை சேர்த்து வைக்கவேண்டும். அவர்களின் உண்மையான மதிப்பு என்ன என்பதை எப்படி அவர்கள் அறிய வேண்டுமென்பதை அவர் வெளிப்படையாகக் கூறுகிறார். இன்று இந்தப் போதனையின் தொகுப்பு இப்படியாக இருக்கும். "உங்கள் மதிப்பு என்ன என்பதை நீங்கள் அறிய விரும்பினால் பின்னால் திரும்பி உங்களது பணத்தை நீங்கள் எங்கே செலவழித்தீர்கள் என்பதை பார்ப்பதோடல்லாமல், கடந்து போன ஐந்து வருடங்களை உங்களது பழைய காலண்டரில் பார்த்து, உங்கள் நேரத்தை எங்கே செலவழித்தீர்கள் எனப் பாருங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயம் இருக்கும். மட்டுமல்ல, உங்களது பொக்கிஷங்கள் என்ன என்பதை நீங்கள் அறிய விரும்பினால், பின்வரும் கேள்விகளை உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்: "உங்களது நேரத்தையும் பணத்தையும் எப்படிச் செலவிடுகிறீர்கள்? நாள் முழுவதும் என்ன செய்கிறீர்கள்? நாள் முழுவதும் எதைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்கள்?" உங்களது நடவடிக்கைகள், உங்களது நோக்கங்கள், உங்களது வாஞ்சைகள் ஆகியவற்றை மதிப்பிட்டுப் பார்த்தால், நீங்கள் எதன் மீது மதிப்பை வைத்திருக்கிறீர்கள் என்பதை அறிவீர்கள்.

சீடர்கள், தேவனுடைய ராஜ்ஜியத்திற்கும் அவரது நீதிக்கும் பிரதான முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற போதனையோடு இந்தச் செய்தியை இயேசு முடிக்கிறார். நீதிக்காக பசியோடும் தாகத்தோடும் இருப்பவர்கள் இதனையே அவர்களது பிரதானமான மதிப்புடையதாகக் கொள்வார்கள்.

தேவனையும் அவரது ராஜ்ஜியத்தையும் முதலாவதாக வைக்கும் போது, அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றினாலும் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார்.

### உள்ளே பாருங்கள் (7:1-5)

மத்தேயுவின் ஏழாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது, இயேசு அவரது கூட்டத்தை முடிக்கிறார் என்பதை நாம் உணர்கிறோம். உள்ளே யும், சுற்றிலும் மேலேயும் கவனிக்கும்படியாக அவர்களிடம் கூறியதோடல் லாமல், தங்களையே ஆராய்ந்து பார்க்கும்படியான ஒரு தீர்மானத்தை எடுக்கும்படியும் கூறி, அவரது போதனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார். நகைச்சுவையான ஒரு உவமானத்தை, பயன்படுத்தி, நம் கண் ணில் ஒரு உத்திரம் இருக்கும்போது நமது சகோதரன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்க்கக்கூடாது எனக் கற்பிக்கிறார். நாம் மற்றவர்களைக் காணும் முன்பு, நம்மையே ஆராய்ந்து பார்த்து, தேவன் நம்மை நியா யம் தீர்க்கும்படிக் கேட்க வேண்டும். ஆகவே, மற்றவர்களுக்கு நாம் ஊழியம் செய்யும் முன்பு, நமது கண்ணில் இருக்கும் உத்திரத்தைப் பார்த்து அதை, வெளியே எடுக்கும்படியான ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். மாயக்காரராய் இருக்க வேண்டாம் என இயேசு நமக்குச் சொல்கிறார்.

### மேலே பாருங்கள் (7:3-5)

இயேசுவின் இந்த போதனையைக் கேட்டவர்கள், மேலே பார்க் கும்படியான தீர்மானத்தை எடுக்கும்படி அழைப்பதின் மூலம் அவரது போதனையை தொடர்ந்து முடிக்கிறார். ஊக்கத்துடன் தொடர்ந்து கேட்க, தேட மற்றும் தட்டும்படி மேலே பார்க்கும்படி சீடர்களை அழைப் பதின் மூலம் ஆவிக்குரிய ஒழுங்கு மற்றும் மதிப்பினைக் குறித்து அவ ரது போதனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார். அதனைத் தொடர்ந்து மூன்றுவித வாக்குத்தத்தங்களை அவர் தருகிறார்: கேட்ப வர்கள் எவரும் பெற்றுக் கொள்வார்கள்; தேடுபவர்கள் கண்டு கொள் வார்கள், தொடர்ந்து தட்டுபவர்கள், திறந்த ஒரு வாசலின் முன்பு நிற்ப தைக் கண்டு கொள்வார்கள் (லூக்கா 11:9-13).

### சுற்றிலும் பாருங்கள் (7:12)

அவரைப் பற்றி கேள்விப்பட்டவர்கள், மலை உச்சியை விட்டுச் செல்ல இருந்தபோது, அவர்கள் சுற்றிலும்பார்த்து, ஒரு தீர்மானத்தை எடுக்கும்படி இயேசு அவர்களை அழைக்கிறார். அந்தப் போதனை "பொன்னான நிபந்தனை" என அழைக்கப்படுகிறது. இந்த ஒரு சிறிய வசனம், இயேசுவின் ஒழுக்கம் - உறவு சம்பந்தமான போதனை. இது



முழு வேதாகமத்தின் சிறிய தொகுப்பாகும். அதாவது மனுஷன் உங்க ளுக்குச் செய்யவிரும்புவதை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

இந்தப் போதனையின் முக்கியமான சவால் என்னவென்றால், "இந்த உலக மக்களுக்கு அதிகத் தேவையான உப்பாகவும் ஒளியாகவும் நீங் கள் இருக்க விரும்பினால், நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரின் இடத் திலும் உங்களை வையுங்கள். "நீங்கள் அந்த இன்னொரு நபராக இருந் தீர்களானால் இந்த மலைஉச்சியில் அதைக் கேட்ட ஒரு சீடன் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புவீர்கள்?" இந்தக் கேள்விக்கு நீங் கள் பதிலைப் பெற்றால் நீங்கள் அதைச் செய்யுங்கள். உங்களுக்காக மனிதர்கள் என்னவெல்லாம் செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புகி றீர்களோ அதை அவர்களுக்குச் செய்யுங்கள் என்பதே வேதாகமத்தின் போதனையாகும்.

அதை செயல்படுத்தும் விதமாக, உங்களது வாழ்க்கைத் துணை, பிள்ளைகள், பெற்றோர்கள், மற்றும் உடன் விசுவாசிகளின் இடத்தில் உங்களை வையுங்கள். உங்கள் வாழ்க்கையோடு யாருடைய வாழ்க்கை சம்பந்தப்பட்டிருக்கிறதோ அவர்கள் அனைவரிடமும் இந்தப் போத னையை நடைமுறைப் படுத்துங்கள். அந்த மக்கள் நீங்களாக இருந் தால், நீங்கள் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புவீர்கள்?

இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும் இரட்சிப்பையும் அல் லது இரட்சிப்பினால் வரும் எந்த ஆசீர்வாதத்தையும் அனுபவிக்காத வர்களிடம் இந்த போதனையை செயல்படுத்தும்படி உறுதிசெய்யுங்கள். பின்பு, "ஒருவேளை நான் அந்த நபராக இருந்தால், இயேசு கிறிஸ்து வின் ஒரு சீடனாக இந்த குணாதிசயங்களோடு என்ன செய்ய நான் விரும்புவேன்?" என உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். உங்களது கேள்விக்கு நீங்கள் பதிலைப் பெற்றால், அதைச் செய்யுங்கள். ஏனென் றால், அதுதான், சுவிசேஷத்தின் பொன்னான நிபந்தனையாகும்.

### அழைப்பு (7:13-27)

இந்தக் கூட்டத்தை இயேசு ஆரம்பித்தபோது, அவரது அழைப்பு என்னவென்றால், "பிரச்சினையின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கிறீர் களா அல்லது தீர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களா?" என்பதே. பிரசங்கத்தின் முடிவில், ஆரம்பத்தில் அவர் கொடுத்த அதே சவாலை இயேசு தருகிறார். இந்தக் கூட்டத்தை அவர் முடிக்கும்போது, அவரது அழைப்பு என்னவென்றால் எப்படிப் பட்ட ஒரு தீர்வாய் நீங்கள் இருக்கப் போகிறீர்கள்?

அவரது அழைப்பைத் தொகுத்துத்தர இயேசு இப்படியாகப் பேசி இந்தக் கூட்டத்தை முடிக்கிறார்: "இரண்டு விதமான சீடர்கள்

இருக்கின்றனர்". அநேகர் மற்றும் சிலர்; பொய்யானவர்கள் மற்றும் உண்மையானவர்கள், சொல்பவர்கள் மற்றும் செய்பவர்கள். ஒரு தீர்வாகவும், பதிலாகவும் இருப்பதற்கு ஒரு எளிதான வழி இருக்கிறது என அநேகர் நினைக்கின்றனர். என்னுடைய தீர்வின் ஒரு பகுதியாக அவர்கள் ஒருபோதும் மாற முடியாது. ஆனால் பூமியின் உப்பாகவும் உலகின் ஒளியாகவும் இருப்பதினால் ஒரு குறுகலான வாசலில் ஆரம்பித்து சீடத்துவத்தின் கடினமான வாழ்க்கை தொடர்கிறது என்பதை சிலர் உணர்கின்றனர். நீங்கள் அநேகரில் ஒருவராக இருக்கப் போகிறீர்களா? அல்லது சிலரில் ஒருவராக இருக்கப்போகிறீர்களா? பொய்யான சீடரில் ஒருவராக இருக்கப் போகிறீர்களா? அல்லது என் தீர்வின் பகுதியாக மாறும் உண்மையான சீடனாக நீங்கள் இருக்கப் போகிறீர்களா? சொல்வதோடு மட்டும் நிறுத்திக் கொள்பவர்களில் ஒருவராக இருக்கப்போகிறீர்களா? அல்லது இந்த மலையின்மீது நான் கற்றுத்தந்தவற்றை உண்மையாகவே செய்பவர்களில் ஒருவராக இருக்கப் போகிறீர்களா?"

இயேசு, தமது பிரசங்கத்தின் முடிவில் சொல்லும் உவமானம் அந்த மலை உச்சியின் மீதிருந்து செல்வதற்கு தயாராக இருக்கும் இரண்டு வகையான சீடர்களைப் பற்றிச் சொல்லுகிறது. இயேசு இரண்டு வகையான வீடுகளைப் (வாழ்க்கையை) பற்றிக் கூறுகிறார். ஒன்று கன்மலையின் மீது கட்டப்பட்டதும் (இயேசுவின் போதனைகளுக்குக் கீழ்ப்படியும் சீடன்) மற்றும் மணலின் மீது கட்டப்பட்ட மற்றொன்று (அவரது போதனைக்குக் கீழ்ப்படியாத ஒரு சீடன்). இரண்டு பேருமே இந்தப் போதனையைக் கேட்டனர். ஆனால் அறிவில்லாதவன் அவன் கேட்டதை செயல்படுத்தவில்லை. இன்னொருவன், கேட்டு, அவையெல்லாவற்றையும் தனது வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தினான். இந்த இரண்டு சீடர்களிடமுள்ள வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் எதை அறிந்திருந்தனரோ அதையே செய்தனர் (மத்தேயு 7:24-27).

இயேசுவின் இந்த உயர்ந்த போதனையை இப்பொழுது நீங்கள் ஆய்வு செய்திருக்கிறீர்கள். இயேசுவுக்காக என்னவிதமான சீடனாய் நீங்கள் இருக்கப் போகிறீர்கள்? நீங்கள் அறிந்து கொண்டவற்றைக்குறித்து என்னச் செய்யப் போகிறீர்கள்?



அத்தியாயம் எட்டு

# அர்ப்பணிக்கப்பட்டவர்களின் ஊழியம்

முதல் கிறிஸ்தவ கூட்டத்தில் எத்தனை சீடர்கள் கலந்து கொண்டனர் என்பதைப் பற்றி நமக்கு தெரியாது. ஏற்கெனவே குறிப்பிட்டது போல், தீவிரமான அழைப்புடன், மலையின் மீது அவர் செய்த போதனையை இயேசு முடித்த கொஞ்ச நாட்களுக்குப் பின்பு அவரது அப்போஸ்தலர்களாக பன்னிரெண்டு சீடர்களை அவர் நியமித்தார். இந்த அப்போஸ்தலர்களை இந்தக் கூட்டத்தில் இயேசு தெரிந்தெடுத்ததும் அவரது ஊழியத்தைப் பகிர்ந்து கொள்ளும்படி அவர்களை நியமித்தார். இந்த உலகிற்கு இரட்சிப்பைக் கொண்டு செல்லும்படியான அவரது நோக்கத்தின் ஒரு பங்காக இருக்கும்படியாக அவர்களை நியமித்தார்.

முன்பு நான் கேட்டது போலவே, நீங்கள் வாழவும், உங்களது பணியை நிறைவேற்றவும் மூன்று வருடங்களே உங்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்? தமக்கு மூன்று வருடங்கள்தான் இருந்தது என்பதை நிச்சயமாக இயேசு அறிந்திருந்தார். அதனால்தான், இரட்சிப்பினால் இந்த உலகை சந்திக்க வேண்டும் என்ற அவரது வாஞ்சையை இந்த அப்போஸ்தலர்கள் பொறுப்பில் கொடுத்தார். அவரது சீடர்கள் உண்மையாகவே தாங்கள் வாழ்ந்த காலத்தில், நற்செய்தியைப் பரப்பினார்கள். அவர்களை நியமித்து ஐந்து நூற்றாண்டுகள் ஆன பின்பு, அவர்கள் ஒரு கிறிஸ்தவன் என்று ஒப்புக்கொள்ளப்பட்டாலன்றி ரோம பேரரசில் ஒரு வேலையைக் கூட ஒருவராலும் பெறமுடியாது. அதேபோல, நாம் வாழும் உலகிற்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, கிறிஸ்துவுக்காக நமது உலகில் உள்ளவர்களை நாம் சென்றடைவதில் உண்மையுடனிருக்க வேண்டும்.

## பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை சந்தியுங்கள்

இந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை அவர் நியமிக்கும் முன்பு இயேசு இரவு முழுவதையும் ஜெபத்தில் செலவழித்தார் (லூக்கா 6:12,13). மத்தேயு சுவிசேஷத்தில், பட்டியலிடப்பட்ட முதல் நான்கு அப் போஸ்தலர்களில் இரண்டு பிரிவான சகோதரர்கள் இருந்தனர். அவர் கள், பேதுரு, அந்திரேயா, மற்றும் யாக்கோபு, யோவான் ஆவார்கள். இந்த நான்கு மனிதர்களும் மீன்பிடிக்கும் தொழிலை ஒன்றாகச் செய்து வந்தனர்.

பிலிப்புவும், பர்த்தொலொமேயுவும், தோமா மற்றும் மத்தேயு போல ஒன்றாக வரிசைப்படுத்தப்பட்டனர். பிலிப்பு வியாபாரம் செய்தான். அவ னது வியாபாரம் குதிரைகளை அல்லது வழிப் பிரயாணத்துக்கானவை களை ஏற்பாடு செய்வது. வெவ்வேறு சுவிசேஷங்களிலுள்ள அப்போஸ் தலர்களின் வரிசைப் பட்டியலை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பர்த் தொலொமேயு, நத்தானியேல் என்றும் அறியப்பட்டான்.

விசாரணை செய்யும் மனதைக் கொண்ட தோமா அறிவுப்பூர்வ மான ஒரு மனிதன். இன்று இப்படிப்பட்ட மனிதனை 'சந்தேகப்படும் தோமா' என அழைக்கிறோம். மத்தேயு வரிவசூல் செய்பவன். ரோம பேரரசுக்காக தன் உடன் யூதர்களிடம் வரிவசூலிப்பவன். சுவிசேஷங்க ளில் "பாவிகளும் வசூலிப்பவர்களும்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை நீங்கள் கவனிக்கலாம். யூதமக்கள் உண்மையிலேயே வரிவசூலிப்பவர் களை வெறுத்தனர். இயேசு பன்னிரெண்டு பேர்களில் ஒரு வரிவசூலிப் பவனை தெரிந்தெடுத்தது ஆர்வத்தை ஊட்டுகிறது.

பட்டியலில் உள்ள கடைசி நான்கு பெயர்களை பன்னிரெண்டு சீடர் களிலுள்ள வேறு நபர்களும் கொண்டிருந்தனர். உதாரணத்திற்கு சீமோன். கூடுதலாக இன்னொரு சீமோனும் உண்டு. இந்த இன்னொரு சீமோன் "கானானியன்" என அழைக்கப்பட்டான். இதன் அர்த்தம், மத்தேயு போன்ற மனிதனுக்கு எதிரிடையானவன் என்பதாகும். அவன் கொரில்லா செய்பவர்களோடு சேர்ந்து ரோமர்களை எதிர்த்து வந்தவன். இன்று அவர் களை நாம் புரட்சிக்காரர் என அழைக்கலாம்.

கலிலேயா, யூதேயா, எருசலேம் மற்றும் சமாரியா போன்ற இடங்க ளில் இயேசுவுடன் சேர்ந்து நடக்கும்போது, அவர்கள் பேசிக்கொண் டால், அளவுக்கு மிஞ்சின ஆர்வமுடைய சீமோனும், வரிவசூலிப்பவ னான மத்தேயும் என்ன பேசிக் கொள்வார்களென நான் அடிக்கடி ஆச் சரியப்பட்டதுண்டு. இயேசு இவர்கள் இருவரிடமும் ஒருவர் காலை ஒரு வர் கழுவி ஒருவரையொருவர் நேசிக்கும்படி சொன்னபோது அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்.



பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் பட்டியலில் இன்னொரு யாக் கோபும் உண்டு. 'அல்பேயுவின் மகனாகிய யாக்கோபு' எந்று அவன் அழைக்கப்பட்டான். இந்த யாக்கோபு 'சின்ன யாக்கோபு' எனவும் குறிப் பிடப்பட்டான் (மாற்கு 15:40). பட்டியலில் யூதாஸ் என்ற பெயரில் இரண்டு மனிதர்கள் இருந்தனர். யாக்கோபின் சகோதரனாகிய யூதாஸ் 'ததேயு' எனவும் அழைக்கப்பட்டான். இன்னொருவன் இயேசுவைக் காட்டிக் கொடுத்த 'யூதாஸ்காரியோத்' ஆகும்.

அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்து அற்புதங்கள் மற் றும் அடையாளங்கள் மூலம் தேவனுடைய ராஜ்ஜியத்தை விளக்கிக் காட்ட வேண்டியிருந்தது. நோயாளிகளைக் குணமாக்கி, குஷ்டரோகி களை சுத்தப்படுத்தி, பிசாசுகளை துரத்தி மரித்தோரை உயிருடன் எழுப்ப வேண்டியிருந்தது. அவர்களின் தேவைகளுக்காக தேவனை மட்டுமே நம்பி, எவரிடமும் எதற்காகவும் கேட்காமல் சுவிசேஷத்தை இலவச மாக பிரசங்கிக்க வேண்டியிருந்தது. விசுவாசத்தில் அவர்கள் வாழ வேண் டியிருந்தது. அவர்களைப் பெரும் விருப்பத்துடன் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என இயேசு அப்போஸ்தலர்களை எச்சரித்தார். "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ நான் உங் களை அனுப்புகிறேன்" (10:16) எனஅவர்களை எச்சரிக்கிறார். 'நீங்கள் என் பணிக்குக் கீழ்ப்படிந்து என் நோக்கத்தை நிறைவேற்றும்போது, இந்த உலகம் உங்களை வாழ்த்தப்போவதில்லை' எனவும் அவர்களை எச்சரிக்கிறார். அது இன்னும் அதிக உண்மையாக இருக்கிறது.

## கொடுக்கப்பட்ட ஒரு வேலை

மூன்று வருடங்கள் அவரது பொது வாழ்வில் இயேசு யாருடன் நேரத்தை செலவழித்தாரோ, அவரது பணியை யாரிடம் ஒப்படைத்தாரோ அந்தப் பன்னிரெண்டு மனிதர்களைப் பற்றிய இந்த ஆறு கேள்விக ளுக்கு நீங்கள் பதில் கண்டுபிடித்தால் நீங்கள் சுவிசேஷத்தை நன்கு அறிந்து கொள்வீர்கள்; ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவீர்கள்.

இயேசுவை அவன் சந்தித்தபோது அவன் என்ன செய்து கொண்டி ருந்தான்?

அவன் இயேசுவை சந்தித்தான் என்ற உண்மையின் விளைவாக அந்த மாற்றம் எப்படியிருந்தது?

அவன் மரிக்கும்போது எங்கிருந்தான்?

அவன் மரிக்கும்போது அவன் என்ன செய்துகொண்டிருந்தான்?

அவன் எப்படி மரித்தான் என்பதை அறிந்து வேதத்திலிருந்தும் மற்ற ஆதாரங்களிலிருந்தும் நீங்கள் என்ன அறிந்துக்கொள்ள முடிந் தது?

ஒரு அப்போஸ்தலனாக இருக்க இந்தக்குறிப்பிட்ட மனிதனை இயேசு ஏன் தெரிந்தெடுத்தார்?

மலையின்மீது இயேசு அழைப்பைக் கொடுத்தபோது, அதிக அர்ப் பணிப்பை அவர்களிடம் எதிர்பார்த்தார். ஏனென்றால் அவருக்காக இந்த அப்போஸ்தலர்கள் பாடுபட்டு மரிக்கப் போகிறார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்துவிடம் நீங்கள் செய்துகொண்ட அர்ப் பணிப்பின் அளவு என்ன? நீங்கள் அவரது நம்பத்தகுந்த சீடனா? அப் போஸ்தலர்களின் வாழ்க்கையில் உதாரணமாகக் காட்டப்பட்ட அர்ப்ப ணிப்பைப் போன்று ஒரு அர்ப்பணிப்பை இயேசுவிடம் செய்ய நீங்கள் முன்வருகிறீர்களா?



அதிகாரம் ஒன்பது

# மத்தேயு சுவிசேஷத்தில் இயேசுவின் உவமைகள்

மத்தேயு சுவிசேஷத்தின் பதிமூன்றாவது அதிகாரம் இந்த சுவிசே ஷத்தின் சிறந்த உவமைகள் கொண்ட அதிகாரமாகும். “பாரபுல்” (Parable) என்ற ஆங்கில வார்த்தை இரண்டு கிரேக்க பதங்களிலிருந்து ஏற்பட் டது. "Para' என்ற வார்த்தைக்கு ‘அதனுடன் கூடிய’ என்று அர்த்தமா கும். "Throwing" என்ற ஆங்கில வார்த்தைக்கான கிரேக்க பதம் 'ballo' என்பதாகும். அதனால்தான் நாம் தூக்கியெறியும் ஒரு பொருள் 'ball' என அழைக்கிறோம். உவமை (parable) என்பது ஒருவர் போதிக்க விரும்பும் சத்தியத்துடன் சேர்ந்து கொடுக்கும் ஒரு கதையாகும். இயேசு உவமைகளில் மிகத்திறமை வாய்ந்தவராக இருந்தார்.

அவரது ஊழியத்தில் ஒரு காலக்கட்டத்தில், அவர் உவமைகளினா லேயே போதித்து வந்தார். அதற்கு ஒரு காரணம் என்னவென்றால், அதி காரம் படைத்தவர்கள், புரிந்து கொள்ளாத சிறு கதைகளை சொல்வதற் காக அவரைக் கட்டுப்படுத்த முடியாது என்பதாகும். மத்தேயு சுவிசே ஷத்தின் பதிமூன்றாம் அதிகாரம் சிறந்த ஒரு நீதிக்கதையை கொண்ட தாகும். இது ஒரு ஆய்வாகவும், மத்தேயு சுவிசேஷத்திற்கு ஒரு முன்னுரையாகவும் இருப்பதினால், உவமையின் கருத்தைப் பற்றி அறி முகப்படுத்தவும், இயேசு சொன்ன உவமைகளின் சில உதாரணங்களை உங்களுக்குத் தரவும் மட்டுமே நேரமிருக்கிறது.

விதைப்பவனைப் பற்றிய ஒரு உவமையுடன் இயேசு துவங்குகிறார். ஒரு விவசாயி, அவனது நிலத்தில் விதையை விதைக்கச் செல்கிறான். அவனது பையிலிருந்து விதைகளை எடுத்துத் தூவி விடுகிறான். சில விதை மக்கள் நடத்து செல்லும். பாதையான கடினமான நிலத்தில்

விழுகிறது. அந்த விதை நிலத்தை ஊடுருவிச் செல்லாமல் மேலேயே இருந்ததினால் பறவைகள் வந்து அதனை தின்றன.

சில விதைகள் , அதிக மண்ணில்லாத இடத்தில் விழுந்து, வேர்விட ஆரம்பித்தும், அடியில் கடினமான பாறைகள் இருந்ததினால், வேர்கள் அந்தப் பாறையில் மோதியது. வெயில் வந்தபோதோ, வேரில்லாததினால் தீய்ந்துப் போய் பலனற்றுப் போனது.

சில விதைகள், முள்ளுள்ள இடங்களில் விழுந்து வளர ஆரம்பித்த போது, அதனுடன் களைகளும் வளர்ந்து அதனை நெருக்கிப் போட்டது.

விவசாயின் கடைசி விதை நல்ல நிலத்தில் விழுந்து அதற்கு நிலத்தின் அடியிலோ அல்லது மேலேயோ எந்த பிரச்சினையும் இல்லாததினால், வளர்ந்து, முப்பதும், அறுபதும் நூறுமாகப் பலன் தந்தது.

நாம் இந்த உவமையை முதலில் படித்ததும், இந்த உவமை "விதைப் பவனைப்பற்றிய உவமை" என அழைக்க வேண்டுமென ஒப்புக்கொள்வோம். ஆனால் இந்த உவமையைக் கவனமாகப் படிக்கும்போது, இந்த உவமை 'விதைகளைப் பற்றிய உவமை' என அழைக்கப்பட வேண்டுமென நாம் நினைப்போம். ஏனென்றால், 'விதை தான் வார்த்தை', தேவ வார்த்தையை பிரசங்கிக்கும்போது தேவனுடைய வார்த்தையை ...நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள் (லூக்கா 8;18) என்ற விதத்தில் லூக்கா பிரயோகிக்கிறார்.

இயேசு இந்த உவமையை சொன்னபின்பு, அவர் அப்போஸ்தலர்களுடன் தனித்திருந்தபோது அந்த உவமையைக் குறித்து அவரிடம் கேட்டனர். அவர்களுக்கு அதனை அவர் விளக்கிக் கூறினார். விவசாயி விதைத்த விதை தேவனுடைய வார்த்தையென்றும், நான்கு விதமான நிலங்கள், தேவனுடைய வார்த்தைக்கு மக்கள் செயல்படுகிற நான்கு வழிகளை குறிக்கின்றன எனவும் அவர்களுக்குச் சொன்னார்.

கர்த்தர், இந்த உவமைக்குக் கொடுத்த விளக்கத்தை நாம் படிக்கும்போது, இந்த உவமைக்கு சரியான தலைப்பு 'நிலங்களைப்பற்றிய உவமை' என நாம் புரிந்து கொள்கிறோம். இந்த உவமையின் நோக்கம், தேவ வார்த்தைக்கு மக்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்று உணரும் போது, இதற்கான சிறந்த தலைப்பு "வார்த்தையை கேட்பதற்கான நான்கு வழிகள்" என நாம் உணருகிறோம்.

வார்த்தை கொடுக்கப்பட்டபோது, முதல் நபர் அந்த வார்த்தையை புரிந்து கொள்ளவில்லை; அவர்களது மனதும் அல்லது புரிந்து கொள்ளுதலும் கடினமாக இருந்ததால், வார்த்தை ஊடுருவி செல்ல முடியவில்லை. அதனால் அவர்கள் கனி கொடுக்கவில்லை.



இரண்டாவது நபர் வார்த்தையைப் புரிந்து கொண்டான். இவர்கள் புரிந்து கொள்ளும்படி வார்த்தை ஊடுருவிச்செல்லுகிறது; ஆனால் பாறைகள் நிறைந்த நிலமாயிருப்பதால், ஆழமாக வேர் விடுவதைத்தடுக்கிறது. இது வேறொரு இடத்தில் இயேசு சொல்கிற "கடினமான இருதய"த்தைப் பிரதிபலிக்கிறது. அவர்களது சித்தம் ஆழமானதாக இல்லையெனவும், அவர்களது அர்ப்பணிப்பும் ஆழமில்லாததாகவும் இருக்கிறது எனவும் சொல்லும்படியாக இருக்கிறது. அவர்கள் வார்த்தையை நம்புகின்றனர். உபத்திரவங்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் வரும்போது, அவர்கள் விரைவிலேயே விழுந்துபோய் விடுகின்றனர்; கனி கொடுப்பதில்லை.

மூன்றாவது நபர், அவர்கள் வாழ்க்கையினுள் இருக்கும் எதினாலும் வீழ்த்தப்படுவதில்லை. அவர்களது வாழ்க்கைக்கு வெளியே இருக்கும் சக்திகளினால் தோற்க்கடிக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல, இந்த உலகத்தின் கவலைகளினால் அல்லது அவர்களுக்கிருக்கும் அல்லது இல்லாதிருக்கும் ஐசுவரியத்தைப் பற்றி கவலைப்படுவதினால் வீழ்த்தப்படுகின்றனர். இந்த உவமையில் சொல்லப்படும் இந்தத் தடைகள், அவர்களின் வாழ்க்கையில் வளர இருக்கும் வார்த்தை என்ற செடியை வளர விடாத களைகள் ஆகும். இந்த மூன்றாவது நபரும் கனி கொடுக்காதவன்.

முதல் நபர் ஒரு ஆவிக்குரிய 'கடினமான தொப்பியை' அணிந்திருக்கிறான் என நாம் சொல்லக் கூடும். இரண்டாவது நபர் 'கடின இருதயம்' கொண்டவன். மூன்றாவது நபர் 'கடினமான தெரிந்தெடுத்தல்'களினால் தடுமாறிக்கொண்டிருப்பவன்.

நான்காவது, நிலம், தேவனுடைய வார்த்தையை நாம் கேட்கும் போது, அதற்கு நாமனைவரும் செயல்பட வேண்டிய விதத்தைப் பற்றி, இயேசு கூறுவதை சித்தரித்துக் காட்டுகிறது. வளர்வதை அல்லது கனிக் கொடுப்பதை தடுக்கும்படியான எதுவும் நிலத்திற்கு மேலேயோ அல்லது கீழேயோ இல்லை. அவர்களின் புரிந்து கொள்ளுதல் அல்லது அவர்களின் பிடிவாதமான சித்தம் போன்று அவர்களின் வாழ்க்கையிலிருக்கும் எதுவும் அவர்கள் கனி கொடுப்பதலிருந்து அவர்களைத் தடுக்கப் போவதில்லை. மேலும் இந்த உலகில் அவர்களது வாழ்க்கைக்கு வெளியே அவர்களைக் கெடுக்கும் எந்த சக்திகளும் தேவனுடைய வார்த்தையின் நோக்கத்தைத் தடை செய்யாது எனவும் அவர்கள் தீர்மானித்தனர்.

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்து..." லூக்கா இந்த நபரை விவரிக்கிறான். மட்டுமல்ல; அது அவனை கனிக்கொடுக்கும்படிச் செய்கிறது (லூக்கா 8:15). இந்த ஆழமான உவமையின் சாராம்சத்தை லூக்கா பின்வரும் வார்த்தைகளினாலும் விவரிக்கிறான். "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்" (லூக்கா 8:18).

தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும் அல்லது போதிக்கும் எவருக்கும் இந்த ஆழமான உவமையின் சத்தியம் அதிகத் தெளிவாகவுள் ளது. தேவனுடைய, வார்த்தையைப் போதிக்கும்போதும் அல்லது பிர சங்கிக்கும்போதும், இந்த நான்கு வித மக்களும் அங்கிருக்கின்றனர். ஞானமுள்ள போதகர்களால் அவர்களை உங்களுக்கு அடையாளம் காட்ட முடியும்.

வேதவசனங்களைக் கேட்டு, போதிக்கும் அனைவரும் தேவனுடைய வார்த்தையை போதிக்கையில், இந்த உவமையைக் குறித்து அதிகம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமது தேவனின் விதை எப்படிப்பட்ட இருதயத்தைக் காண்கிறது? தேவனுடைய வார்த்தை கனி கொடுப்பதை நாம் அனுமதிக்கிறோமா? நாம் முழுமையாக (100%) கனி கொடுக்கி றோமா? அல்லது குறைவாக (30%) கனிகொடுக்கிறோமா? இரண்டாவ தாக, போதிக்கிறவர்கள், தாங்கள் பிரசங்கிக்கும் வார்த்தையின் அர்த் தத்தை, கேட்பவர்கள் புரிந்து கொள்ளாதவரை, கனி கொடுக்க முடி யாது என்ற கடினமான உண்மையைத் தெரிந்திருக்க வேண்டும்.

நாம் யாருக்கு போதிக்கிறோமோ, அவர்களின் சித்தத்திற்குள் ஊடு ருவிச் செல்லாதவரை, நமது போதனையும் பிரசங்கமும் கனிக்கொடுக் காது. நாம் போதிக்கும் வார்த்தைகள் அவர்கள் புரிந்துகொள்ளும்படி போதிக்கப்பட வேண்டும். நமது போதனையையும், பிரசங்கத்தையும் கேட்பவர்களின் சித்தத்திற்குள் ஊடுருவிச் செல்லும்படி பரிசுத்த ஆவி யானவர் உதவி செய்யும்படி ஜெபத்துடன் ஆரம்பிக்க வேண்டும்.

இந்தச் சிறந்த உவமையில், வேதாகமத்தை அறிந்த "வேதாகம வல்லுநர்களை" உண்டாக்கும்படி இங்கு நமக்கு சவால் கொடுக்கப்பட வில்லை. ஆனால், அவர்கள் கூறுவதைப் புரிந்து, அப்பியாசப்படுத்தும் கர்த்தரின் அர்ப்பணிக்கப்பட்ட சீடர்களை உருவாக்கும்படி சவால் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வார்த்தையை நாம் கேட்டு, போதித்து பிரசங்கிக்க வேண்டும். நம்மைக் கேட்பவர்களின் வார்த்தையை புரிந்து கொண்டு இதற்குக் கீழ்ப்படியும்படி அவர்களின் ஆவிக்குரிய கண்களை ஆவியானவர் திறக்க வேண்டும் என ஜெபிக்க வேண்டும். நமக்கும், நாம் பிரசங்கிப்பதை கேட்பவர்களுக்கும் விசுவாசத்தின் வரத்தைக் கொடுக்கவேண்டுமெனவும், வார்த்தை கனிக்கொடுக்கும்படி அவரது சித்தத்தின்படி செய்யும்படியும் நாம் ஜெபிக்க வேண்டும் (யோவான் 7:17; பிலிப்பியர் 2:13).

வார்த்தையை நாம் கேட்பது, போதிப்பது மற்றும் பிரசங்கிப்பது எல்லாம் கனிகொடாமல் போகாதபடி நாம் தேவனை சார்ந்திருக்க வேண் டும். தேவனால் மட்டுமே இந்த காரியங்களைச் செய்ய முடியும். அத னால்தான், நாம் படித்து, போதித்து அல்லது வார்த்தையை அறிவிக்கும்



போது, "ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழி யத்திலும்" என இரண்டும் ஒன்றாக இணைந்து செல்ல வேண்டும்.

### கோதுமையையும், களைகளைப்பற்றிய உவமை (மத்தேயு 13:24-30; 36-42)

விளக்கத்துடன் கூடிய இந்த ஆழமான சிறிய உவமை, இயேசு கற் றுத்தந்த மிக முக்கியமான பாடமாகும். ஏனென்றால், இறையியல் மற் றும் வேதாந்தம் இருந்த காலம் மட்டும் இறையியல் நிபுணர்கள் மற்றும் வேதாந்திகள் கேட்கும் கேள்விக்கான அவரின் பதிலாக இது இருக் கிறது. கேள்வி என்னவென்றால், "தீமை எங்கிருந்து வருகிறது?" அல்லது வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், "அன்பான சர்வவல்லமையுள்ள தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு நிலைத்திருக்கும் உல கில் தீமையைப் பற்றி நாம் எவ்வாறு கணக்குக் கொடுக்க முடியும்?"

"மனிதர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது, என்னுடைய சத்துருக் களில் சிலர் இதை செய்தனர்" என்பதே இயேசுவின் பதிலாகும். இயே சுவின் இந்த விளக்கம் பின்வருபவற்றை எழுதிய மனிதனை ஒருவேளை ஊக்கப்படுத்தியிருக்கும்: "தீமையை நன்மையினால் வெற்றிகொள்ள முக்கிய காரணம், நல்ல மனிதர்கள் எதுவுமே செயய்யாமல் இருப்பதாகும்."

இந்த உவமையில் "விதைகள்" மனிதர்களின் வாழ்க்கை என்ற நிலத் தில் விழுந்த தேவனுடைய வார்த்தைகள் அல்ல. ஆனால், ராஜ்ஜியத் தின் குமாரர்கள் இந்த உலகத்தின் நிலத்தில் வேரூன்றப்பட்டிருக்கின்ற னர். இதை நாம் புரிந்து கொள்ளாமலிருக்கலாம். ஆனால், தீமையின் உண்மையை நாம் ஒருமுறை ஏற்றுக்கொண்டால், இந்த பிரச்சினையைக் குறித்து நாம் என்னச் செய்யப் போகிறோம்? என்பது சவாலாக மாறுகி றது. இயேசுவைப் பொருந்தவரை "உலகம்தான் நிலமாகும்" இது அவர் அடிக்கடி வெளிப்படுத்திய ஒரு பாரத்தை நாம் நினைக்கும்படிச் செய் கிறது. அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சமாக இருப்பதால், அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி தேவனை வேண்டிக் கொள் ளும்படி, அவரது சீடர்களிடம் இயேசு கூறுகிறார் (மத்தேயு 9:37,38).

ஜான் வெஸ்லி புரிந்து கொண்டு, "இந்த உலகம் என்னுடைய ஆதீனத்திற்குட்பட்ட பகுதி" என அறிவிக்கும்போது இயேசுவின் இந்தத் தோற்றத்தைப் பகிர்ந்து கொண்டார். "நிலம்தான் உலகம்" என்ற உண்மையின் தோற்றத்தை நாம் ஒருபோதும் இழந்துவிடக் கூடாது. நமது உலகத்தில் நன்மையும் தீமையும் ஒன்று சேர்ந்து இருக்கிறது என்ற சவாலை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நமக்கு உலகளவிலான கண்ணோட்டம் இருக்கும்.

## கடுகு விதை மற்றும் புளித்த மாவைப் பற்றிய உவமைகள் (மத்தேயு 13:31-33)

இந்த இரண்டு சிறிய உவமைகள், திருச்சபை சரித்திரம் முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மிகச் சிறிய உவமைகள், இயேசு அடிக்கடி பேசும் ராஜ்ஜியம் சிறியதாக கடுகு விதை போல் ஆரம்பித்து, ஒரு பெரிய மரமாக மாறுகிறது எனவும், பிசைந்த மாவில் அடக்கிவைக்கும் புளித்தமாவில் அப்பம் செய்யும்போது முழுவதையும் புளிக்கச் செய்கிறது எனவும் கற்றுத் தருகிறது.

இருப்பினும், இந்த இரண்டு உவமைகளிலும், பரலோக ராஜ்யம் கடுகு விதையைப் போன்று அசாதாரண வளர்ச்சியடையும் என்றும், புளித்தமா அப்பத்தில் கிரியை செய்யும் விதத்தில் ஆச்சரியப்படும்படி கிரியை செய்யும் எனவும் இயேசு தீர்க்கதரிசனம் உரைக்கிறார். இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு, உலகின் வரலாற்றுக் காலம் இயேசு என்று அழைக்கப்படும் இந்த மனிதனின் வாழ்க்கைக்கு முன்பும் பின்பும் கொடுக்கப்படுள்ளது.

புளித்தமா மற்றும் கடுகு விதையின் கொள்கை இன்றும் கிரியைச் செய்கிறது. சபை குற்றப்படுத்தப்பட்டு உபத்திரவப்படுத்தப்பட்ட இடங்களில் கூட, சபையின் வளர்ச்சியை நாம் பார்க்கும்போது, இந்த இரண்டு சிறிய உவமைகள் நிறைவேறுவதை காண்கிறோம்.

விதைப்பவனைப் பற்றிய உவமையை போன்று, இந்த மரத்தில் வந்து தங்கும் பறவைகள், தேவராஜ்யத்தின் பங்காக இல்லாத பலதரப்பட்ட மக்கள் கூட்டத்தினரை சித்தரிக்க ஒரு எதிர்மறையான அடையாளமாகும். இந்தப் போதனையின் முக்கியத்துவம் ராஜ்ஜியத்தின் வளர்ச்சியும் அதன் முடிவான வெற்றியுமாகும், ராஜ்ஜியத்தின் குமாரர்கள் மற்றும் குமாரத்திகளின் செல்வாக்குமாகும்.

புளித்தமா வேதவசனங்களில் மற்ற இடத்தில் தீமைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டாலும் இந்த உவமையில் அது தீமைக்கு உதாரணமாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இந்த உலகில் தேவராஜ்ஜியத்தின் பிரசன்னத்தையும் அதன் செல்வாக்கையும் குறித்து சொல்லப்படுகிறது.

## பொக்கிஷத்தையும் முத்தைப் பற்றியும் உவமைகள் (மத்தேயு 13:44-46).

இணைந்த இந்த இரண்டு உவமைகளும் ராஜாவுக்கும் ராஜ்ஜியத்திற்கும் முழுமையான ஒரு அர்ப்பணிப்பின் அழகான சித்தரிப்பாகும். அவைகள் நம்மிடம் சொல்லுவது என்னவென்றால், “இயேசு கிறிஸ்து உங்களுக்கு ஏதாவதாக (முக்கியமாக) இருந்தால், பின் இயேசுகிறிஸ்து உங்களுக்கு எல்லாமுமாக இருக்கிறார். ஏனெனில், இயேசுகிறிஸ்து



உண்மையிலேயே உங்களுக்கு எல்லாமுமாக இருக்கும்வரை அவர் உங்களுக்கு எதுவுமாக இல்லை”.

பரலோக ராஜ்ஜியம், மகிழ்ச்சியான முழு அர்ப்பணிப்பை நம்மிடமிருந்து பெறத்தகுதி பெற்றது. இந்த ராஜ்ஜியத்தை நடத்திச்செல்லும் ராஜாவிடம் நமக்கிருக்கும் எல்லாவற்றையும் சந்தோஷத்துடன் கொடுத்து நம்மையே அர்ப்பணிக்கும் வரை நாம் ஒருபோதும் ராஜ்ஜியத்தைப் பற்றிபுரிந்து கொள்ளவோ, பாராட்டவோ மாட்டோம் என இந்த உவமைகள் கற்பிக்கின்றன.

## மன்னிப்பின் ஒரு உவமை (மத்தேயு 18:15-35)

இந்த ஆழமான உவமை நமது சகோதரனை மன்னிப்பதைக் குறித்த அறிவுரையாகும். பேதுரு, தனக்கு எதிராகக் குற்றம் செய்யும் ஒரு சகோதரனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என இயேசுவிடம் கேட்டான். அந்த நாளிலுள்ள பாரம்பரிய நிலை உன் சகோதரனை ஏழுமுறை நீ மன்னிக்க வேண்டும் என்பதாக இருந்தது. அதனால் தானோ என்னவோ பேதுரு ஏழு என்ற எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறான். இயேசு கற்றுத்தந்தது என்னவென்றால், உங்கள் சகோதரனை நீங்கள் மன்னிப்பது அளவற்றதாக இருக்கவேண்டும் என்பதாகும். இந்த அளவைக்குறித்து பின்வரும் உவமையில் சொல்லப்பட்டுள்ளது.

நாம் இரட்சிப்பை முதலாவதாக அனுபவித்தபோது, நமது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டதை, மன்னிக்கப்பட்டதான பெரிய கடன் பிரதிபலிக்கிறது. நமது இரட்சிப்பு, நமது கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டதை அல்லது, நாம் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டதை சம்பந்தப்படுத்துகிறது.

இயேசு, நமது கடனாளிக்கு நாம் மன்னிப்பதுபோல், நமது கடன்கள் மன்னிக்கப்பட வேண்டும் எனக் கேட்பதற்கு நமக்குக் கற்றுத் தந்தார். நமக்கு எதிராக குற்றம் செய்தவர்களை நாம் மன்னிக்காவிட்டால் நமது மீறுதல்களை பிதா மன்னிக்கமாட்டார் என்ற பயங்கரமான விமர்சனத்துடன் ஜெப அறிவுரையை அவரும் பின்பற்றினார்.

அதே விமர்சனத்துடன்தான் இந்த உவமை முடிவுடைகிறது. இரட்சிப்பின் சுவிசேஷம், “இயேசு சிலுவையில் மரித்தபோது, அவர் கொடுக்க வேண்டியிராத ஒரு கடனைச் செலுத்தினார். ஏனென்றால், நம்மால் செலுத்த முடியாத ஒரு கடன் நமக்கு இருந்ததினால் தான்.” நாம் மன்னித்ததினால், நாம் மன்னிக்கப்படவில்லை. கிறிஸ்துவின் பொருட்டு தேவன் நம்மை மன்னித்தது போல, நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் (எபிரெயர் 4:32; கொலொசெயர் 3:12,13).

## நற்சாட்சி பெறுவதை பற்றிய உவமை (மத்தேயு 21:23, 28-31).

இயேசு சொல்லிய உவமைகளில் இது மிகவும் கவரக்கூடிய ஒரு உவமையாகும். தேவன் மனிதனாகி இந்த உலகில் வந்தபோது, அது அதிக மதிப்புடையதாக இருந்தது. நற்சாட்சி பத்திரம் ஏதுமில்லாது அவரது கிரியைகளை மட்டுமே கொண்ட ஒரு மனிதராக அவர் மாறினார். இயேசுவுக்கும் பரிசேயருக்கும் இடையில் இருந்த அநேக வித்தியாசங்களில் ஒன்று, ஒருவர் செய்த தொழிலுக்குக் குறைவான மதிப்பும், செயல்களுக்கு அதிக முக்கியத்துவமும் கொடுத்திருந்ததே. ஆனால் அவர்கள் முக்கியத்துவம் எதிரிடையாக இருந்தது. இதுதான் இந்த சிறிய உவமையின் மையப் பொருளாகும்.

இந்த உவமையில் சொல்லப்பட்ட இரண்டு குமாரர்களும் ஒன்றைச் சொல்லிவிட்டு வேறொன்றை செய்தனர். ஆகவே அவர்கள் செய்த வேலை அர்த்தமற்றதானது. அவர்கள் நிறைவேற்றியவைகளே அவர்களுக்கு நற்சாட்சியாய் இருந்தது. இயேசுவும் யோவான் ஸ்நானனும் அந்தக்காலத்து மதத் தலைவர்கள் எதிர்பார்த்த நற்சாட்சிப்பத்திரம் ஒன்றையும் வைத்திருக்கவில்லை. வேலையைப் பொறுத்தவரையில், தாங்கள் தேவனுடைய குமாரர், அவரது திராட்சத் தோட்டத்தில் வேலை செய்கிறோம் எனக்காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் நடவடிக்கைகளைப் பார்த்தால் அவர்கள் தம் பிதாவின் ராஜ்ஜியத்துக்கென்று பணி செய்தார்கள்.

இன்னொரு வகையில், மதத்தலைவர்கள் கிரியைகளில் ஒன்றுமில்லாதவர்கள். அவர்களின் வெளித்தோற்றத்தினால், தேவனுடைய திராட்சை தோட்டத்தில் வேலை செய்யும், தேவகுமாரர்களென்று அவர்கள் காண்பித்துக் கொள்கின்றனர். எனினும், அவர்களது கிரியையின் அடிப்படையில், அவர்கள் பிதாவின் திராட்சைத் தோட்டத்தில் இல்லையென்பதும், பிதாவின் வேலையை அவர்கள் செய்யவில்லையென்பதும் தெளிவாகிறது.

இயேசுவின் கிரியைகளே, அவரை மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்தியது. நமது பதவியைவிட நம்முடைய கிரியைதான் நம்மைப் பற்றிய உண்மையான நற்சாட்சி பத்திரம் என்பதை நாம் உணரும்வரை, நாம் நம்மை ஏமாற்றிக் கொள்கிறோம். இன்று, உலகத்தில் இருபது லட்சம் போதகர்கள் உண்டு எனவும் அவர்களில் நூறாயிரத்திற்கும் குறைவானவர்கள்தான் செமினரி பட்டப்படிப்பு படித்தவர்கள் என்பதும் கணக்கிடப் பட்டுள்ளது. உலகில் உள்ள அதிகமான போதகர்கள் இயேசுவின் இந்த உவமையை இன்று கேட்க வேண்டியது அவசியம் என்பது இதன் அர்த்தமாகும். பின்வருபவை, இந்த ஆழமான உவமையின் மீதான விமர்சனம் போன்றதாகும்.



## தனிமையான ஒரு வாழ்க்கை

“எளிமையான ஒரு கிராமத்தில் பிறந்த அவர் ஒரு குடியான பெண் மணியின் பிள்ளை. அவருக்கு முப்பது வயதாகும்வரை தச்சுத் தொழில் செய்யும் ஒரு இடத்தில் வேலைசெய்தார். பின்பு மூன்று வருடங்கள், தேசமெங்கும் சென்று மக்களுடன் பேசி, அவர்கள் சொல்வதைக்கேட்டு, அவரால் முடிந்தபோது உதவிசெய்தார்.

“அவர் ஒருபோதும் புத்தகம் எழுதியதில்லை. பெரியதாக எதுவும் செய்யவில்லை. கல்லூரிக்குச் சென்றதில்லை. அவருக்கென்று குடும்பமோ, அல்லது சொந்தமான ஒரு வீடோ இல்லை. உலகில் சிறந்தவர் செய்யும் எந்தக் காரியங்களையும் அவர் ஒருபோதும் செய்ததில்லை. அவருக்கென்று நற்சாட்சி பத்திரம் எதுவுமில்லை.

“அவருக்கு 33 வயதாக இருக்கும்போது, பொது மக்களது கருத்துக்கள் அவருக்கெதிராக மாறியது. அவருடைய நண்பர் அனைவரும் அவரைத் தள்ளிவிட்டனர். அவர் கைது செய்யப்பட்டபோது, அவரோடு இருந்து ஏதாவது உதவி செய்ய ஒரு சிலரே விரும்பினார். அநியாயமான ஒரு விசாரணைக்குப் பின்பு, திருடர்களோடு சேர்ந்து குற்றம் சாட்டப்பட்டார். ஒரு தயாள குணமுடைய நண்பன் அவரது கல்லறையைக் கொடுத்ததினால் தான் அவரை அடக்கம் செய்ய இடமிருந்தது.

“இவையெல்லாம் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தன. இருப்பினும், மனிதப் பிறவியில் அவர்தான் இன்று முக்கியமானவராவார், இவரே அன்பின் உதாரணம். அவர் இதுவரை பவனி செல்லாத இராணுவம் அனைத்தும், கடலில் பயணம் செய்யாத கப்பற்படை அனைத்தும், ஆளுகை செய்யாத ஆள்பவர் அனைவரும், இந்த பூமியில் இதுவரை அரசாட்சி செய்யாத ராஜாக்கள் அனைவரும் இந்தத் தனித்துவம் கொண்ட ஒரு வாழ்க்கையைப் பாதிக்கவில்லையென சொல்வது மிகையாகாது” (Fred Bock).

## குருத்தோலை ஞாயிறு பற்றிய உவமை (மத்தேயு 21:33-46)

முதல் குருத்தோலை ஞாயிறன்று ஒரு சிறிய கழுதையின் மேல் இயேசு சவாரி செய்தார் என்பதை கோடிக்கணக்கான மக்கள் அறிவார்கள். அந்தக் கழுதையின் மேலிருந்து இறங்கியதும் இயேசு என்ன செய்தார் என நீங்கள் எப்பொழுதாவது படித்திருக்கிறீர்களா? கனி கொடாத ஒரு அத்தி மரத்தை சபித்து, குழப்பமாய்க்கிடந்த ஆலயத்தை சுத்தப்படுத்துவதின் மூலம், இந்த பயங்கரமான வல்லமையான உவமைக்கான ஒரு சந்தர்ப்பத்தை இயேசு ஏற்படுத்தினார். இந்த உவமை இயேசுவுக்கும் மத தலைவர்களுக்கும் இடையில் உரையாடலைக் கொண்டுவந்தது. மதத்தலைவர் கோபமடைந்தனர்.

ராஜ்ஜியத்தின் கனியைப் பெற்றுக் கொள்ள அவரது தீர்க்கதரிசிகளை (ஊழியர்களை) தேவன் அனுப்புவதின் ஒரு காட்சியாகத்தான் இந்த உவமை இருக்கிறது. இந்த ஊழியர்கள் வெட்கப்படுத்தப்படும் போது, திராட்சைத் தோட்டத்தில் சொந்தக்காரருடைய மகன், அவனது தகப்பனுடைய தோட்டத்தின் கனியைப் பெறும்படி அனுப்பப்படுகிறான். அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர், தனது மகனுக்கு அவர்கள் மரியாதை கொடுப்பார்களென நம்புகிறான். அவனுக்கு மரியாதை கொடுப்பதற்குப் பதில் அவனை கொன்று போடுகின்றனர். உண்மையிலேயே, இந்த உவமையிலுள்ள குமாரன் இயேசுவை, அதே மதத்தலைவர்கள் அந்த நொடியிலேயே கொன்று போடும்படித் திட்டம் போடுகின்றனர்.

இந்தஅதிகாரத்தின் முடிவில் யூத மதத்தலைவர்களிடம் இந்த உவமையை சொல்லும்போது இயேசு சில கடினமான வார்த்தைகளைக் கூறுவதைக் காணமுடிகிறது. மதத்தலைவர்கள் தேவ ராஜ்ஜியத்தின் கனியைக் கொடுக்காததினால், ராஜ்ஜியத்தை அவர்களிடமிருந்து எடுத்து, கனிக்கொடுக்கும் மக்களிடம் கொடுக்கிறார் என்பதை அவர்களுக்கு சரியான நேரத்தில் அறிவிக்கவே இயேசு இந்த உவமானத்தை பயன்படுத்துகிறார்.

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள், திருச்சபையாக மாறிய போது மேற்சொன்ன நிகழ்ச்சி அப்படியே நடைபெறுவதை அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் நாம் காண்கிறோம் (அப்போஸ்தலர் 10,11). தேவமக்கள் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் அர்ப்பணிப்பின் கன்மலை மீது விழத் தவறும்போது, அந்தக் கன்மலை அவர்கள் மேல் விழுந்து அவர்களை நசுக்கிப் போடுவதாகக் கூறப்படுகிறது.

வேதத்தில், அத்திமரம் இஸ்ரவேலுக்கான ஒரு அடையாளமாகும். இந்த உவமானத்தை, அத்திமரத்தை அவர் சபிக்கும் சம்பவத்தோடு, நாம் தொடர்புபடுத்தும்போது, வனாந்திரத்தில் எபிரெய மக்களிடம் தேவன் செய்த அதே காரியத்தை இப்போது தம் மூலமாக செய்கிறார் என்பதை மதத்தலைவர்களிடம் சொல்வதை நாம் உணர்கிறோம். எண்ணாகம புத்தகத்தின் பதினான்காம் அதிகாரம், இந்த உவமையோடு தொடர்பு படுத்தப்பட வேண்டும். தேவன் வனாந்தரத்தில் அற்புதங்களின் மூலம் பத்து முறை இஸ்ரவேல் மக்களுக்கு பொறுமையாக தன்னை நிரூபித்துக் காட்டினார். பின்பு அவர், கூறியபடி வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்துக்கொள்வதை விசுவாசியாமல், வனாந்தரத்தில் அலைவார்கள்.

முதல் குருத்தோலை ஞாயிறன்று, ராஜ்ஜியத்தை அவர்களிடமிருந்து எடுத்தபோது, யூத மதத்தலைவர்களை இயேசு ‘கடிந்து’ கொண்டதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. திருச்சபை சரித்திரத்தில் இந்த குருத்தோலை



ஞாயிறு உவமை அநேக முறைகளில் நிறைவேறியுள்ளது. ராஜ்ஜியத்திற்கான கனியை கொடுக்காத உலகின் சில பகுதியிலுள்ள திருச்சபையிலிருந்து, கனி கொடுக்கிற திருச்சபைக்கு தேவன் ‘தமது இருப்பிடத்தை மாற்றியிருப்ப’தாகத் தெரிகிறது.

### இயேசுவின் உவமைகளை எவ்வாறு அணுகுவது

மூன்று சிறிய சுவிசேஷங்களில் நாற்பத்தி ஏழு உவமைகள் உள்ளன. மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள இயேசுவின் போதனையின் முக்கிய பரிமாணத்திற்கு உங்களை அறிமுகப்படுத்த சில மாதிரிகளை மட்டும் நான் தெரிந்தெடுத்துள்ளேன். இயேசுவின் உவமைகளைக்குறித்து ஆழமாகப் படித்து அறியும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். நீங்கள் அப்படி செய்கையில், இந்த உவமைகளை எவ்வாறு அணுகுவது என்பதைக் குறித்து எனக்குள் இருக்கும் சில கருத்துக்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

உவமை என்பது, தாங்கள் போதிக்க விரும்பும் சத்தியத்தை விளக்கிக்கூறும்படி, ஒரு ஆசிரியர் கொடுக்கும் ஒரு கதைதான். இந்தமாதிரி போதனையில் இயேசு மிகவும் கை தேர்ந்தவர். இயேசு கற்றுக் கொடுத்த எவ்வொரு உவமையிலும் மைய சத்தியத்தை நாம் எதிர்பார்க்க வேண்டும். ஏனென்றால், அவரது உவமைகள் ஒரு முக்கிய சத்தியத்தைக் கூறுகிறது.

இயேசுவின் உவமைகளை விளக்க முயற்சிக்கும்போது, ஒவ்வொரு உவமையின் சந்தர்ப்பங்களைப் புரிந்து கொள்வது மிக முக்கியமாகும். ஆகவே, இயேசுவின் உவமைகளைப் படிக்கும்போது, பின்வரும் கேள்விகளை நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும். எந்த சந்தர்ப்பத்தில் இந்த உவமை கொடுக்கப்பட்டது? இந்த உவமை எங்கு கொடுக்கப்பட்டது? இந்த உவமை எப்பொழுது கொடுக்கப்பட்டது? எந்த சூழ்நிலைகளில் மக்களுடனான செயல்கள் இந்த உவமையின் போதனைக்கு நடத்திச் சென்றது? இந்த உவமை யாருக்குச் சொல்லப்பட்டது? இந்த உவமையை இயேசு போதிப்பதின் நோக்கம் என்ன? இயேசு கொடுத்த கதையோடு இணைந்திருக்கும் முக்கியமான சத்தியம் என்ன? இயேசுவால் ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டால் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையென்றால், உங்கள் விளக்கத்தைக் குறித்து தாழ்மையுடனிருங்கள். ஒரு உவமைக்கு ஒரு சரியான விளக்கம் இருக்கலாம். ஆனால், அநேக பயன்கள் உண்டு. ஆகவே, “இந்த உவமையை என் வாழ்க்கையில், என் குடும்பத்தில் எந்தத் திருச்சபையில் எப்படி இதை பயன்படுத்த தேவன் விரும்புகிறார்” என எப்பொழுதும் கேளுங்கள்.

அதிகாரம் பத்து

# மத்தேயுவில் இயேசுவின் மணியான போதனைகள்

## இன்னொரு உன்னத அழைப்பு

"வருத்தப்பட்டுப் பாரஞ்சு மக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது...." (மத்தேயு 11:28-30).

இயேசுவின் உயரிய பிரசங்கத்தின் முடிவில் நாம் பார்த்ததுபோல், ஒரு அழைப்பைக் கொடுப்பதின் மூலம் ஒரு முடிவுக்குக் கொண்டு வர அவர் விரும்புகிறார். அது அவரது உன்னத அழைப்புகளில் ஒன்றாகும். தங்களது சொந்த பலத்தினால் தங்களது பாரசுமையை சுமக்க முயற்சிக்கும் அனைவருக்கும் இந்த அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பாரங்கள் அதிகமாக மாறி சுமக்க முடியாத அளவு சேர்ந்து போகின்றன. அவர்களின் பாரங்களிலிருந்து விடுபப்பட்டு அவர்களின் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் அடையும்படியும், வாழ்க்கை எளிதாகவும் அவர்கள் பாரங்கள் இலகு அடையும்படியும் கிறிஸ்துவிடம் வரும்படியாக அழைப்பைக் கொடுக்கிறார்.

முதலில், நாம் அவரிடம் வந்தால், நமது பாரங்களிலிருந்து அவர் ஓய்வு கொடுப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால், இந்த அழைப்பை இன்னும் நன்றாகக் கவனித்தால், நாம் அவரிடம் வந்து கற்றுக்கொள்ளும்படியாக அவர் நம்மை அழைக்கிறார் என்பதை உணர்ந்து கொள்கிறோம். அவரது பாரத்தை, அவரது உள்ளத்தை மற்றும் அவரது



நுகத்தை கற்றுக் கொள்ளும்படியாக நாம் அழைக்கப்படுகிறோம்.

இயேசு, இந்த உலகில் சுமந்த பாரத்தைவிட அதிகமான பாரத்தை எந்த மனித பிறவியும் சுமந்ததில்லை. இருப்பினும், "என் சுமை இலகுவாயிருக்கிறது" என அவர் சொல்வதை நாம் கேட்கிறோம். நமது ஆத்துமாக்களுக்கு ஓய்வையும், நமது பாரங்களிலிருந்து விடுதலையும் நாம் பெற விரும்பினால், தாழ்மையுள்ளவர்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என நமக்குக் கற்றுத் தந்தவர், அவரது தாழ்மையுள்ள இருதயத்தைக் கற்றுக் கொள்ளும்படி அவர் நம்மை அழைக்கிறார்.

பின்பு, அவர் தமது நுகத்தை அறிந்துகொள்ள நம்மை அழைக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய ஒழுங்குகளை ஏற்றுக் கொள்ள நம்மை அழைக்கிறார். மட்டுமல்ல, அவரது சீடர்களாக கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டவர்களாக இருக்க நம்மை அழைக்கிறார். இந்த அழைப்பைப் புரிந்து கொள்வதற்கான ஒரு வழி என்னவென்றால், நமது வாழ்க்கையில் அவரது 'நுகத்தை' எடுத்துக் கொள்ளும்படி நம்மை அவர் என்ன அர்த்தத்தில் அழைக்கிறாரோ அதை அறிந்து கொள்வதுதான்.

நுகம் என்பது ஒரு பாரம் அல்ல. ஆனால், அதிகமான ஒரு பாரத்தை விலக்க உதவி செய்யும் ஒரு உபகரணமாகும். சரக்குடன் கூடிய ஒரு மாட்டுவண்டியை எண்ணிக்கொள்ளுங்கள். அந்த வண்டியை நகர்த்த ஒரு மாடு உங்களுக்குத் தேவை என்பதை கற்பனை செய்யுங்கள். பின்பு, ஒரு நுகத்தின் நோக்கத்தை நீங்கள் உணரக் கூடும். தனது தலையால் அந்த வண்டியை நகர்த்தக் கூடிய அறிவு அல்லது ஒழுங்கு அந்த மாட்டுக்குக் கிடையாது. ஆனால், அந்தப் பாரத்தை இழுக்க நுகத்தால் இணைக்கப்படக்கூடும். சாத்தியமில்லாத ஒன்றை, சாத்தியமாக்கி மாட்டுவண்டியை நகர்த்தக் கூடிய ஒரு கருவிதான் நுகம்.

அதே போன்று, இயேசுவின் போதனை மற்றும் இதர ஆவிக்குரிய ஒழுங்குகள், வாழ்க்கையின் பெரிய சுமைகளை நாம் நகர்த்தும்படி சாத்தியமாக்கும் 'நுகமா'கும். அவரது நுகத்தை ஏற்றுக்கொள்வதினால், நமது வாழ்க்கை எளிதாகவும், சுமைகள் இலகுவாயும் இருக்கும் என இயேசு வாக்குப்பண்ணினபோது இதைத்தான் அவர் அர்த்தப்படுத்தினார். ஏனென்றால், நாம் அவரோடு இணைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த உன்னத அழைப்பு கிறிஸ்துவிடம் நாம் வருவதற்கான அழைப்பாகும். நாம் திருச்சபைக்கோ, ஒரு வேதாகம ஆராய்ச்சிக்கோ, ஒரு குழுவை ஆதரிக்கவோ, அல்லது கிறிஸ்துவிடம் நம்மை அழைத்து வருவதாக இருக்கும் அநேக திருச்சபை நிகழ்ச்சிகளில் ஒன்றிற்கோ வரும்படியாக அவர் நம்மை அழைக்கவில்லை. அவரிடம் வந்து, உறவு கொள்ளும்படி, அவர் நம்மை அழைக்கிறார். அவர் வாழ்க்கையை சந்தித்த விதத்தில் நாமும் வாழ்க்கையைச் சந்திக்க வேண்டுமென அவர் அழைக்கிறார். அவரது மதிப்புகள் மற்றும் ஆவிக்குரிய ஒழுங்குகளின்

மூலம் நாம் வாழ்க்கையைப் பார்த்தோமானால், நமது ஆத்துமாவிற்கு இளைப்பாறுதலையும், நமது பாரமான சுமைகளிலிருந்து விடுதலையை யும் நாம் காண்போம் என அவர் வாக்களிக்கிறார். அவரது நுகத்தோடு நாம் இணைக்கப்பட்டிருப்பதால், நமது வாழ்க்கை எளிதாகிறது.

### ராஜ்ஜியம் ஒரு திருச்சபையாக மாறுகிறது (மத்தேயு 16:13-23)

சுவிசேஷத்தில் இது ஒரு முக்கியமான பகுதியாகும். ஏனென்றால், இப்பொழுதுதான் 'சபை' என்ற வார்த்தையை இயேசு முதல் முறையாக குறிப்பிடுகிறார். அவரும், யோவான் ஸ்நானனும் தங்களது பொது ஊழி யத்தை ஆரம்பித்து தேவ ராஜ்ஜியத்தின் நற்செய்தியை பிரசங்கித்தனர். மலை உச்சியிலும், அவரது உவமைகளிலும், பரலோக ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அவர் அறிவித்தார். இந்த சந்தர்ப்பத்தில், அவர் சபையை கட்டப்போவதாகவும், நரகத்தின் வாசல்கள் அதனை தடுத்து நிறுத்த முடியாது எனவும் இயேசு அறிவித்தார். அதுமட்டுமல்லாது தனது அப்போஸ்தலனாகிய பேதுருவின் மீது தனது சபையை அவர் கட்டப் போவதாகவும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின் சந்தர்ப்பம் என்னவென்றால், இயேசு தனது அப் போஸ்தலர்களைப் பார்த்து, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர் கள்?" எனக் கேட்டார். அதற்குப் பேதுரு, "நீர்... கிறிஸ்து" என பதில ளித்தான். பேதுருவின் இந்த அறிக்கையைப் போன்று இதற்கு இயேசு அளித்த பதில் அதைவிடக்குறிப்பிடத்தக்கதாகும். இயேசு சொன்ன பதிலை தொகுத்து அளித்தார். அது இயேசு பின்வருமாறு சொன்னது போல் இருக்கும்: "சீமோனே, நீ அந்த அளவுக்கு புத்திசாலியல்ல! இதை என் பிதா உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எனது சபையை, உன் னைப் போன்ற மனிதன் ஆச்சரியம் என்று சொல்லக்கூடிய ஒரு அற்பு தத்தின் மீது கட்டப்போகிறேன். பேதுருவே, சாதாரண மக்கள் பரிசுத்த ஆவியானவர் அவர்களினுள் இருப்பதால் அசாதாரண காரியங்களைச் செய்வார்கள். நரகத்தின் வல்லமை அந்த சபைக்கு எதிராக வெற்றிய டையாது. ஏனென்றால் பேதுருவே, என் சபையினுள்ளும் அதற்கு பின் னாலும் இருக்கும் வல்லமை பரிசுத்த ஆவியாகும்."

இயேசு ஒரு ராஜ்ஜியத்தைக்கட்டினாரா அல்லது சபையைக் கட்டி னாரா? இதுவோ, அதுவோ இல்லை. இரண்டையும் தான். ராஜ்ஜியம் என்பது பரலோகத்தில் செய்யப்படுவது போன்று பூலோகத்தில் தேவ னின் சித்தத்தின் வெளிப்படுத்தலாகும். சபை உணமையாகவே அவரு டையதாக இருக்கும்போது, பூமியிலும் அவரது சித்தத்தை நிறைவேற் றும் சபையாகவே இருக்கும்.

இந்த பகுதியும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனென்றால், எருசலேமில் அவரது மரணத்தைக் குறித்த அறிக்கையை இயேசு பகிர்ந்து



கொள்ளும்போது, பேதுரு, கர்த்தரைக் கடிந்து கொள்கிறான். இயேசு திரும்பிப் பார்த்து அவனை 'சாத்தானே' என அழைக்கிறார். அதே மனி தனிடம், தேவனுடைய சித்தத்தின் வழியில் குறுக்கீடாக நின்று, தேவ சித்தத்தை தடை செய்து தேவசித்தத்தை வெளிப்படுத்தாமல், சாத்தானின் சித்தத்தை வெளிப்படுத்துவதாக அவர் தெரிவிக்கிறார்.

இயேசுவுக்கும் பேதுருவுக்குமிடையில் பரிமாறப்பட்ட இந்தக் காரி யம், நாம் சாதாரணமான ஒரு மனிதராக இருப்பினும், பரிசுத்த ஆவியா னவரின் மூலம், அசாதாரண காரியங்கள் நம் மூலமாக நடைபெறும் என போதிக்கின்றது. எதிரிடையான காரியத்தையும் போதிக்கிறது. பூலோ கத்தில் தேவசித்தம் தடைச்செய்யப்பட்டு, சாத்தானின் சித்தம் நிறைவே றும்படியான ஒரு பாத்திரமாக நாம் இருக்கக்கூடும். இவையிரண்டுமே, ஒரு நபர் மூலமாக சில நிமிடங்களிலேயே வெளிப்படுத்தப் படலாம்.

### இயேசு யார் என்று நாம் சொல்லுகிறோம்?

இறையியல் கல்லூரியின் வாசலண்டையில் நள்ளிரவில் இயேசு திரும்பி வந்தார் என்று ஒரு கதை சொல்லுகிறது. அவர் மணி அடித்த தும், கல்லூரித் தலைவர் வெளியே வந்ததும், இயேசு அவரிடம், "நான் யாரென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?" எனக்கேட்டார். அதற்கு அந்தத் தலைவர், "எங்களின் வேராக நீர் இருக்கிறீர்" என பதிலளித்தார். அப்போஸ்தலர்களிடம் இயேசு கேட்ட "என்ன?" என்ற கேள்விக்கு சரியான பதில் தெரிய வேண்டியது முக்கியம். அவர் இயேசுகிறிஸ்து, மேசியா, இவ்வுலகிற்கு வாக்குப்பண்ணப்பட்ட மீட்பர் மற்றும் இரட்சகர் என்பதை நாம் அறிய வேண்டியது அவசியமாகும்.

## இயேசுவின் தலைமைத்துவத்துவம் பற்றிய கருத்து (மத்தேயு 23:1-2)

இந்தப் பகுதி, இயேசுவின் புரட்சிகரமான தலைமைத்துவத்தின் உட் கருத்தைச் சொல்லுகிறது. ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யும்படி அவர் சீடர்களிடம் சொன்ன அந்த ஆரம்ப போதனையைப் போன்றது தான் இந்த போதனையும் (மத்தேயு 20:20-28). மேலறையில், அவர்க ளின் கால்களை இயேசு கழுவியபோது இதே சத்தியத்தை அவர் காட் டவும் கற்றுத்தரவும் செய்தார் (யோவான் 13:1-17). பணிவிடையையும் தாழ்மையையும் அடிப்படையாகக் கொண்ட அவரது ராஜ்ஜியத்திற்கான (சபைக்காக) தலைமைத்துவத்தின் மாதிரியை அவர் வெளிப்படுத்தும் போது, அவர் இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் அதிகத் தெளிவாகக் கூறினார்.

இன்று நமது சபைகளில் தலைமைத்துவத்தின் தத்துவ சாஸ்திரத்தை நிறைவேற்றுவதைக்குறித்து நாம் தீவிரமாய் சிந்திப்போமானால்

சபையைப் போன்று இந்த உலகம் முழுவதும் வேறெதுவுமில்லையென உணருவோம். சபை ஒரு அற்புதமான ஆவிக்குரிய ஒரு சமூகம்.

தலைமைத்துவம் குறித்து, இயேசுவினால், மூன்று விசேஷித்த தடைகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

தலைமைத்துவத்தைப் பற்றிய அவரது போதனையைக் கொடுக்கும்போது, அப்போஸ்தலர்கள் இந்த மூன்று தடைகளைக் கேட்கும்படிச் செய்ய, வேதபாரகர்கள் பரிசேயர்களை அவர் பயன்படுத்தினார். தலைமைத்துவத்தைப்பற்றிய அவரது வேத சாஸ்திரத்தில் உள்ள எல்லாவற்றுக்கும் வேதபாரகர்களும் பரிசேயர்களும் எதிரிடையானவர்கள். அவர்கள் விருந்து நடக்கும் இடத்தில் தலைமை இடத்தை விரும்பியதோடல்லாமல் பொது இடங்களில் 'ரபி', "போதகரே" மற்றும் "பிதாவே" என்று அழைக்கப்பட்டு வரவேற்கப்படுவதை விரும்பினார்கள்.

இந்த மதத்தலைவர்களை பின்னணியாகப் பயன்படுத்தி அவரது சபையின் தலைமைத்துவத்தின் மாதிரியில் சில தடைகளை இயேசு சித்தரிக்கிறார். எவரும் 'ரபி' என்றோ 'போதகர்' என்றோ நம்மை அழைக்கும்படி அனுமதிக்கக்கூடாது எனக் கூறுகிறார். ஏனென்றால், நமக்கு கிறிஸ்துவாகிய ஒரு ரபி உண்டு. நாம் அனைவரும் சகோதரர்களாக ஒரே அளவில் இருக்கிறோம். அதே சந்தர்ப்பத்தில், எவரும் நம்மை 'போதகரே' அல்லது 'பிதாவே' என அழைக்கும்படி அனுமதிக்கக்கூடாது எனவும் நம்மிடம் கூறுகிறார். இந்த அறிவுரையின் அடிப்படைக் காரணம், என்னவென்றால், தேவன்தான் உங்கள் பிதா, உங்கள் போதகரும் அல்லது தலைவரும் கிறிஸ்து ஆவார். நீங்கள் அனைவரும் சகோதரர்களாக ஒரே அளவில் இருக்கிறீர்கள்.

ஒலிவ மலை பிரசங்கம் (மத்தேயு 24:25).

இந்தப் பிரசங்கம் தமது இரண்டாவது வருகை மற்றும் உலகின் முடிவைப்பற்றிய இயேசுவின் செய்தியாகும். மேலறையில் அவர் கொடுத்த செய்தியைப் போன்று அந்த பிரசங்கமும் உரையாடலாக ஆரம்பிக்கிறது. அவரும் அப்போஸ்தலர்களும் சாலொமோன் கட்டிய ஆலயத்திற்கு வருகின்றனர். அந்த ஆலயத்தின் பெருமையைக் குறித்து அப்போஸ்தலர்கள் பேசுகின்றனர். அதற்கு இயேசு, இந்த ஆலயம் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என அறிவிக்கின்றார்.

அப்போஸ்தலர்கள் மூன்று கேள்விகளைக் கேட்கின்றனர்: "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன? உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" இயேசுவின் இந்தப் பிரசங்கத்தை நீங்கள் படிக்கையில், அப்போஸ்தலர்களின் இந்த



மூன்று கேள்விகளும், அந்தக் கேள்விகளுக்கான அவரது பதில்களும் இந்த ஆழமான செய்தியை உங்களுக்கு வெளிப்படுத்தும்.

கிறிஸ்துவின் இரண்டாவது வருகை, ஒரு சம்பவம் அல்ல. அநேக சம்பவங்களின் தொடர்ச்சியாகும். வேதாகமத்தின் எல்லா தீர்க்கதரிசனங்களுடன் சமீபத்தில் நிகழ்வதாக தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட ஒரு சம்பவத்தை நீண்ட காலத்திற்கு பின் நிகழ இருக்கும் சம்பவத்திலிருந்து பிரிப்பதுதான் சவாலாகும். இந்த பிரசங்கம் இயேசுவால் கொடுக்கப்பட்டு நாற்பது வருடங்களுக்குப் பிறகு ரோமர்கள் ஆலயத்தை முழுவதுமாக அழித்தனர். அந்தப் புரட்சிகரமான சம்பவம் இந்த செய்தியில் நிச்சயமாக சொல்லப்பட்டிருக்கும்.

அப்போஸ்தலர்களின் கேள்வியில் இருந்த அந்தக் காரியங்கள், மற்றும் இயேசுவின் பதில் இந்த சம்பவத்தோடு தொடர்புகொள்கிறது. "ஒருவன் எடுத்துக் கொள்ளப்படுவான், இன்னொருவன் கைவிடப்படுவான்" என்பது அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னது போன்று சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கிறது (1 தெசலோனிக்கேயர் 4:13-17).

இந்த மூன்று சம்பவங்களுக்கான அடையாளங்களை குறித்து அப்போஸ்தலர்கள் கேட்டனர். இவைகள் எப்பொழுது சம்பவிக்கும் என ஒருவரும் அறிந்திருக்கவில்லையென இயேசு கூறுகிறார். ஆனால், யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகளும் கேட்கப்படும். ராஜ்ஜியத்திற்கு விரோதமாக ராஜ்ஜியம் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் தோன்றும். ஆகவே, நாம் இந்த மூன்று சம்பவங்களையும் ஆபத்தானவைகளாக எடுத்துக் கொள்கிறோம்.

அவருடைய வருகை, மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல இருக்கும் என்றும் நாம் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார் என்றும் இயேசு முன்னறிவிக்கிறார். அதுமட்டுமல்லாது, ஆயத்தமாயிருங்கள் எனவும், அவர் வரும்போது, உண்மையுள்ள ஊழியக்காரனாக காணப்படும்படி இருங்கள் என சவாலை முன்வைக்கிறார்.

இருபத்தைந்தாம் அதிகாரத்தில் மூன்று உவமைகளின் வடிவில் இந்த செய்திக்கான அவரது செயல்பாடு கொடுக்கப்படுகிறது. முதல் உவமை, அவரது வருகை வெறுமையான பாத்திரத்தின் மீதான நியாயத்தீர்ப்பாக இருக்குமென்ற குறிப்பை சொல்லுகிறது. எண்ணெய், வேதாகமத்தில் பரிசுத்த ஆவியின் அடையாளமாகும். தங்களது பாத்திரங்களில் எண்ணெய் வைத்திராத புத்தியில்லாத கன்னிகைகள், சபையில் இருந்தும் அவர் வரும்போது ஆவிக்குரிய மக்களாக இல்லாதவர்களை சித்தரிக்கிறது. முதல் உவமையின் சவால் மணவாளன் (இயேசு) மறுபடியும் வரும்போது அவர்களின் பாத்திரத்திற்கு எண்ணெய் பெற்றுக்கொள்ள

எண்ணெய் கொடுக்கக் கூடியவர்களிடம் (விசுவாசிகள்) போவது காலங் கடந்தது என்பதாகும்.

இரண்டாவது உவமை, வெறுமையான கையின் மீதான அவரது நியாயத்தீர்ப்பாக, அவரது வருகை இருக்கும் என்பதாகும். இது, தாலந்துகளைப்பற்றிய அறிமுகமான ஒரு உவமை. "உன் கையிலிருக்கிறது என்ன?" என்று தேவன் ஒரு முறை மோசேயை கேட்ட கேள்வி நம்மனைவரிடமும் கேட்கப்படும் (யாத்திராகமம் 4:2). கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பின்தொடர்ந்து கிறிஸ்துவின் நியாயாசனம் இருக்கும் என்று மற்ற வசனங்கள் நமக்குக்கூறுகின்றன (1 கொரிந்தியர் 3:13-15; 2 கொரிந்தியர் 5:10). தேவன் அவர்களிடம் ஒப்படைத்தவைகளுக்கு உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டுமென இந்த உவமை நமக்குப் போதிக்கிறது.

மூன்றாவது உவமை, அவரது வருகை, தாகத்தோடும், பசியோடும், உடையின்றியும், வியாதியுடனிருப்பவர்கள் அல்லது சிறையிலிருப்பவர்கள் ஆகியோரைப் பற்றி கவலைப்படாதவர்களின் வெறுமையான இருதயத்தின் மீதான அவரது நியாயத் தீர்ப்பாக இருக்கும். "என் சகோதரர்கள்" என இயேசு விவரிக்கும் அந்த மக்கள், அவருடைய சபைக்காக கிறிஸ்து ஒப்படைத்த பெரிய பணிக்காக ஊழியம் செய்கையில் இந்த தேவைகளை அனுபவித்தவர்கள் அவரது சீடர்களாக இருக்கும்.



அதிகாரம் பனிரெண்டு

# இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரிய அபாயநிலை (மத்தேயு 26:28)

இந்த மூன்று அதிகாரங்கள் இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பதிவு செய்யும்போது கூடவே இயேசுவின் அதிமுக்கியமான சில போதனைகள் மற்றும் உதாரணங்களையும் பகிர்ந்து கொள்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில், இயேசு 'பஸ்கா'வின் அடிப்படையான யூத ஆராதனை முறைமையை 'கர்த்தரின் பந்தி' அல்லது 'திருவிருந்து' என அழைக்கப்படும் சபையின் அடிப்படை ஆராதனை முறைமையாக மாற்றுகிறார். அவரது மிகப்பெரிய துன்பத்திலும் கெத்செமனே தோட்டத்தில் 'கர்த்தரின் ஜெபம்'' என அழைக்க வேண்டிய ஜெபத்தை இயேசு ஜெபிப்பதை நாம் கேட்கிறோம்.

அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் பல சீடர்களிடம் தமது உன்னத ஊழியத்தைக் கொடுக்கிறார். ஆகவே, அவரது பெரிதான பாடுகளை இந்த அதிகாரங்களில் நீங்கள் படிக்கையில், சபையின் அடிப்படை ஆராதனை முறையை, இயேசுவின் மாதிரி ஜெபத்தை, மற்றும் இயேசுவின் உன்னத ஊழியத்தை கவனமாகப் பரிசீலிக்கவும்.

### கர்த்தரின் பந்தி (மத்தேயு 26:17-35)

நீண்ட காலத்திற்கு ஒரு கணவன் மற்றும் தகப்பன் குடும்பத்தை விட்டு விலகி இருக்க வேண்டியுள்ளபோது, தனது சித்திரத்தை அவனது குடும்பத்தினரிடம் கொடுப்பான். அவர்கள் பிரிந்திருக்கும்போது அந்தப் படம் அந்த குடும்பத்திற்கு மிகவும் முக்கியமாக மாறுகிறது. அவன், தனது பயணத்திலிருந்து திரும்பும்போதும், அவனை தங்களது

அன்பின் வட்டத்திற்குள் அந்தக் குடும்பம் திரும்ப சேர்த்துக் கொள்ளும்போது, அந்த படம் இனி அவர்களுக்குத் தேவையிருப் பதில்லை.

இயேசு இந்த ஆராதனை முறைமையைக் கொண்டு வந்ததின் அர்த் தத்தில் ஒரு காரணம் இருந்தது. அவர்களை விட்டுப் பிரிய போகிறார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, அவரது சபைக்கு அவரைப் பற்றிய ஒரு 'சித்திரத்தைக்' கொடுத்தார். மட்டுமல்ல, "நான் உங்களை விட்டு பிரிந்திருக்கும்போது, இந்தப் படத்தை பார்க்கும்போது என்னை நினைத்துக்கொள்ளும்படி நான் விரும்புகிறேன்". அவர் திரும்பி மறு படியும் வரும்போது, நமக்கு அந்தப் படம் தேவைப்படுவதில்லை. ஆனால், அவர் வரும்வரை, அவரை நினைவில் வைத்துக்கொள்ள நமக் காக அவர் தெரிந்தெடுத்த வழி இதுதான்.

அவரது அப்போஸ்தலர்களை மேலறையில் இயேசு சந்தித்த போது, அந்த மனிதர்களில் சிலர், நான்கு சுவிசேஷங்களை அவர்கள் எழுதுகையில், வார்த்தை சித்திரத்தினால், அவரை நினைவுபடுத்தப் போகின்றார் என்பதை அவர் அறிந்திருந்தார். மரித்தவர்களை உயிரு டன் எழுப்பியது, வியாதியஸ்தர்களை குணப்படுத்தியது, புயலை நிறுத் தியது, பாவிகளை நேசித்தது, அப்போஸ்தலர்களுக்கு போதித்து அவர் களை ஊழியத்திற்கு அனுப்பியது போன்றவற்றை அவர்கள் அவரை நினைவுப்படுத்துவார்கள் என இயேசு அறிந்திருந்தார். எல்லா வழிக ளோடும் கூட, அவர் கர்த்தரின் பந்தியையும் அவர்களுக்கு தந்து, "என்ன நினைவுகூரும்படியாக நான் விரும்பும் வழி இதுதான்! இந்த அப்பத்தை நீங்கள் புசிக்கும்போதும், இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதும், நான் மறுபடியும் வரும்வரை என் மரணத்தை நீங்கள் நினைவுகூருவீர் கள்" என சொன்னார் (மத்தேயு 26:26-29), 1 கொரிந்தியர் 11:26). கர்த்த ரின் பந்தி, சபைக்கு, தன்னைக் குறித்து கொடுத்த 'சித்திரம்' ஆகும். மட்டுமல்ல, ஆராதனையைக் குறித்து இயேசு கொடுத்த ஒரே ஒரு அறி வுரை இதுதான்.

### கர்த்தரின் ஜெபம் (மத்தேயு 26:38,39).

அவருடைய சீடர்கள் ஜெபிக்கும்படியாக இயேசு கற்றுத் தந்த ஜெபத்தை இயேசு ஒருபோதும் ஜெபிக்காததால், கெத்செமனேயில் அவர் செய்த ஜெபம் தான் 'கர்த்தரின் ஜெபம்' என அழைக்கப்பட வேண்டும் என்பதோடல்லாமல், நம்மனைவருக்கும் ஒரு மாதிரி ஜெபமாக கருதப் பட வேண்டும். "ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித் தத்தின்படியே ஆகக்கடவது" என்பதுதான் பிரதான வார்த்தைகளாம். இந்த சத்தியம்தான் மூடர்களின் ஜெபத்தின் மத்திய பொருளாக இருக் கிறது. ஒரு விசுவாசியின் சித்தமும் தேவனின் சித்தமும் ஒன்றுக்கொன்று



இணைந்து ஒரே வரிசையில் இருக்க வேண்டும் என்பதையும் இந்த ஜெபம் நமக்குக் கற்றுத்தருகிறது. தேவ பிரசன்னத்தின் அனுபவம் அவ ருடைய சித்தத்துடன் நம்மை இணைத்து, அவரது நோக்கத்திற்கென்று நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணரச் செய்கிறது (ரோமர் 8:26-28).

இயேசுவின் இந்த ஜெபத்தின் முதல் பகுதி ஒரு அறிவுரையாகவும் உதாரணமாகவும் உள்ளது. "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" தேவனின் பிள்ளையாக நாம் இந்த வகையில் ஜெபிப்பதற்கு நமக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை உங்களுக்கோ அல்லது நீங்கள் நேசிக்கும் மக் களுக்கோ ஏற்பட்டால், இந்த வகையில் ஜெபிக்க உங்களுக்கு உரிமை யும் பொறுப்பும் இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், குண மாக்கும்படியாக கேட்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த மாதிரி ஜெபத்தின் இயேசு ஜெபிப்பது போன்று, ஒரு மொழி பெயர்ப் பில் விவரிக்கப்பட்டது போன்று, உங்களது ஜெபத்தை, "இருப்பினும் என் விருப்பத்தின்படி அல்ல, ஆனால் உம் விருப்பத்தின்படியே ஆகக் கடவது" என முடிக்க வேண்டும்.

அநேகர் சுகத்துக்காக ஜெபித்து விட்டு பின் "உம்முடைய சித்தப் படியே" என்ற வார்த்தைகளுடன் முடிப்பது விசுவாசத்தில் குறைவுபட் டுள்ளதைக் காட்டுவதாக அநேகர் நம்புகின்றனர். அவரது மிகப்பெரிய பாடுகளில், தேவகுமாரனே அவ்வாறு ஜெபித்திருக்கும்போது, மக்கள் எப்படி இதைச் சொல்லக்கூடும் என்பது எனக்கு புரியவில்லை. சிலுவை யைக்குறித்து அவர் ஜெபித்த விதத்தில் ஜெபித்திராவிட்டால், நம்மனை வருக்கும் இரட்சிப்பு கிடைத்திருக்காது. இந்த மாதிரி ஜெபத்தின் பலனா க, பிதாவாகிய தேவனுடைய சித்தமும் தேவ குமாரனின் சித்தமும் ஒருங்கிணைந்து அதன் விளைவாக நமக்கு இரட்சிப்பு கிடைத்ததற்காக, இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் நித்தியத்திற்கும் நன்றியுடனிருக்க வேண்டியவர்கள்.

### இயேசு கிறிஸ்துவின் மரணம் (மத்தேயு 27:11-34)

முதல் மூன்று சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பற்றிய பயங்கரமான விவரங்களை நமக்கு அவர்கள் கொடுக்க வில்லை. அந்தக் கொடுமையான சம்பவத்தை மூன்று வார்த்தைகளில் மட்டுமே அவர்கள் விவரிக்கின்றனர். அது, "அவர்கள், அவரை சிலுவையிலறைந்தனர்" என்பதாகும். இந்த வார்த்தைகளைத் தனிப்பட்ட முறையில் நாம் பரிசீலித்தால், இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் அர்த்தத்தை நாம் உணர்ந்து கொள்வோம்.

அவரை அவர்கள் சிலுவையிலறைந்தனர்

ரோம பேரரசில், சிலுவை மரணம் ஒரு சாதாரண காரியமாக இருந்தாலும், அது மிகவும் கொடுமையான ஒன்றாகும். சிலுவையிலறையப்பட்ட நபர் மரிப்பதற்கு ஐந்து நாட்கள் அல்லது ஒரு வாரம் ஆகும். ஒரு ரோம பிரஜை சிலுவையிலறையப்பட முடியாது. ஏனென்றால், அந்தப் பிரதான தண்டனையில் அதிகமாக சித்திரவதைகள் உண்டு. அந்தத் தண்டனை மனித தன்மையற்ற ஒன்றாகக் கருதப்பட்டது. மட்டுமல்ல, குற்றவாளி நிர்வாணமாக சிலுவையிலறையப்படுவதால், அது அவமானப்படுத்துவதாகவும், இழிவுபடுத்துவதாகவும் இருந்தது (மத்தேயு 27:35; பிலிப்பியர் 2:8).

வேதாகம பூர்வமாக பேசினால், அவர் மரணமடைந்த விதத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் தீர்க்கத்தரிசனம் நிறைவேற்றப்பட்டதாகும். ஏசாயா 53 மற்றும் சங்கீதம் 22ல் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட சில விவரங்கள் இயேசு சிலுவையிலறையப்பட்டபோது நிறைவேறின. எனினும், மேலே குறிப்பிட்டப்பட்ட பகுதிகள் மற்றும், இன்னும் சொல்லப்பட்ட காரியங்களுக்கேற்ப, கிறிஸ்துவின் ஆத்துமாவில் இருந்த ஆவிக்குரிய வேதனை, வலி ஆகியவைதான் நமது இரட்சிப்பை நிறைவேற்றித்தந்தது. நமக்காக அவர் பாவமானபோது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்" எனக் கதறினார். தீர்க்கதரிசிகள் மற்றும், அப்போஸ்தலர்களைப் பொறுத்தவரை, இரட்சகரின் ஆத்துமாவில் இந்த ஆவிக்குரிய வேதனைகள் ஏற்பட்டபோது, நமது சமாதானத்தின் தண்டனை அவர் மீது சுமத்தப்பட்டது. அப்பொழுதுதான் நமது இரட்சிப்பை அவர் நிறைவேற்றினார். அதனால் தான், "முடிந்தது" மற்றும் "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என சத்தமிட்டார். அவரது பாடுகள் முடிந்தபோது அவரது இரத்தத்தினால் நமது மன்னிப்பை முத்திரை போட்டார் (ஏசாயா 53; 2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 2:21-25; யோவான் 19:30; லூக்கா 23:46). அவரை அது, அவர்கள் <u>சிலுவையிலறைந்தனர்</u> என்ற உண்மையின் அடையாளமாகும்.

<u>அவரை,</u> அவர்கள் சிலுவையிலறைந்தனர்

இந்த மூன்று வார்த்தைகளிலுள்ள முதல் வார்த்தையை நாம் வலியுறுத்தும்போது, இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் உண்மையான அர்த்தத்தை நாம் நெருங்கி வருகிறோம். ரோம பேரரசு ஆயிரமாயிரம் மக்களை சிலுவையிலறைந்துள்ளது. அவர்கள் அவர்களின் சிலுவையில் நீண்டகாலம் தொங்குகிறவர்களாக, இயேசுவைவிட அதிகமான சரீரப்பாடுகளை அனுபவித்துள்ளனர். இருப்பினும், அந்த ஆயிரக்கணக்கான மக்களின் பாடுகள், இயேசுவுக்காகவும் அவர்மீது வைத்த விசுவாசத்திற்காகவும் மரித்தவர்களின் பாடுகள், உலகின் பாவங்களுக்கான பரிகாரமாக இருக்காது.

இயேசுவின் சரீரப்பிரகாரமான பாடுகள் மட்டும் குறிப்பிடத்தக்கதல்ல. யார் சிலுவையில் நமக்காகப் பாடுகளை அனுபவித்தவரோ அதுதான், நமது இரட்சிப்பின் அடிப்படையானது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, அவர் தேவகுமாரனாக இல்லாதிருந்தால், இரண்டாயிரம் வருடங்களுக்கு பின்பு, நமது பாவங்களுக்காக அவரது மரணம் எதையும் செய்ய சாத்தியப்பட்டிருக்காது. அதுதான் <u>அவரை,</u> அவர்கள் சிலுவையிலறைந்தனர் என்ற உண்மையைக் குறித்த முக்கியமான ஒன்றாகும் (மத்தேயு 27:22,23; 1 கொரிந்தியர் 1:23-2:2).

அவரை <u>அவர்கள்</u> சிலுவையிலறைந்தனர்

முடிவாக, இந்த, மூன்று வார்த்தைகளில் இடையில் உள்ளதை நாம் வலியுறுத்தினால், கிறிஸ்துவின் மிகப்பெரிய துன்பத்தைக் குறித்த ஒரு கேள்வியை நாம் எழுப்புகிறோம். அந்த கேள்விக்கான முதல் பதில், ரோமர்கள் இயேசு கிறிஸ்துவை கொன்றனர் என்பதாகும். எனினும் ஒரு ரோம போர்சேவகன் எழுத்துபூர்வமாக ஆணிகள் அடித்தும், ஈட்டியை இயேசுவின் விலாவில் பாய்ச்சி இருந்தாலும், பதிவு செய்யப்பட்ட விவரங்களை கவனமாக நாம் படித்தோமானால் இயேசுவை யூதர்கள்தான் சிலுவையிலறைந்தனர் என்ற முடிவுக்கு நாம் வருவோம் (மத்தேயு 27:25).

அந்தக் கேள்விக்கான வேதாகம பதில், தேவன் அவரது குமாரனை உலகின் பாவங்களுக்காக பலியாக்கினார் என்பதாகும். சில உதாரணங்களை நாம் பார்ப்போம். மேசியாவைப் பற்றிய தீர்க்கத்தரிசன அதிகாரமான ஏசாயா 53ல், நாம் இப்படியாக வாசிக்கிறோம்: <u>"கர்த்தரோ</u> அவரை நொறுக்கச் சித்தமாகி, <u>அவரைப்</u> பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசாயா 53:10). புதிய ஏற்பாட்டில் இப்படியாகச் சொல்லப் பட்டுள்ளது. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் <u>பாவமாக்கினார்"</u> (2 கொரிந்தியர் 5:21).

அவரை, அவர்கள் சிலுவையிலறைந்தனர் என்ற உண்மையை நாம் பரிசீலிக்கும்போது, இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் (மத்தேயு 28:1-15)

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் சீடர்களிடம் காணப்பட்ட மாற்றத்தின்மூலம் நிரூபிக்கப்படக்கூடும். பேதுருவிடம் நாம் அதிக கடுமையாக நடந்து கொள்ளக்

கூடாது. ஏனென்றால், இயேசு சிறைப்பிடிக்கப்பட்டபோது, "அவர்கள் எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத்தேயு 26:56) என நாம் வாசிக்கிறோம். அவரது வாழ்க்கையில் மிகப்பெரிய துன்பத்தை இயேசு சந்தித்தபோது, அவரைப் பின்பற்றினவர்கள் ஒருவர் கூட அவருடன் இல்லை. இந்த காரியத்தைப் பொருத்தவரை சபையின் அங்கத்தினர்கள் பூஜ்யமாக இருந்தனர்.

அவரது சபை 'திரும்பவும் பெரிதாக' வளர என்ன காரணம் ? அது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகும். மரணத்தினின்று உயிர்த் தெழுந்ததின் மூலம், அவரது தெய்வீகத்தன்மை மற்றும் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளை அவர் நிரூபித்தார். நாம் இப்படியாக வாசிக்கிறோம்: "அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந் தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கி யத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்" (யோவான் 2:22).

பெந்தெகொஸ்தே நாளில் - தனது பெரிய பிரசங்கத்தில், பழைய ஏற்பாட்டு வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் மர ணத்தையும் போதிக்கிறது என்பதை பேதுரு குறிப்பிட்டு சொல்கிறான் (அப்போஸ்தலர் 2:30-32; சங்கீதம் 16). பெந்தெகொஸ்தே நாளில் நடந்த எல்லா அடையாளங்களும் அற்புதங்களும் உயிர்த்தெழுந்து ஜீவிக்கிற கிறிஸ்துவின் கிரியை எனவும் பேதுரு தெரிவுபடுத்துகிறான். மேலும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான், மரணம் நமது பாவங்களுக் கான பரிகாரம் என நிரூபித்து, இன்று சபைக்கு நித்தியமான நம்பிக்கை யைக் கொடுக்கிறது (1 கொடுந்தியர் 15).

**உன்னத ஊழியம் (மத்தேயு 28:18-20)**

பலமுறை நான் குறிப்பிட்டது போல், இயேசுவின் நோக்கம், அவ ரது அப்போஸ்தலர்கள் மற்றும் சீடர்கள் மூலமாக உலகம் முழுவதை யும் சென்றடைய வேண்டும் என்பதாகும். மத்தேயு சுவிசேஷத்தின் முடி வுரையின் மூலம் இது தெளிவாகத் தெரிகிறது.

இந்த உன்னதப்பணிக்கென்று ஒரு கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது. அது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கட்டளை என்னவென்றால், 'சீடர்களாக்குங்கள்' என்பதாகும். அதில், போவது, ஞானஸ்நானம் கொடுப்பது மற்றும் பிரசங்கிப்பது என மூன்று காரியங் கள் அடங்கியுள்ளன. "நீங்கள் போகையில், நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்கையில், நீங்கள் பிரசங்கிக்கையில் சீடர்களை உருவாக்குங்கள்" என்பது இந்தப் பணியின் நோக்கமாகும். இயேசு கிறிஸ்துவுக்காக சீடர் களை உருவாக்குவதுதான் நமது ஊழியமாகும்.



டாக்டர் ராபர்ட் ந. குளோவர் எந்ற அசாதாரணமான ஒரு மிஷனரி இப்படியாக எழுதுகிறார். உன்னத ஊழியம் என்பது "சபையின் உரிமைப் பத்திரமாகும்". வேறு எந்த நிறுவனத்தையும் போன்று, சபை அதன் உரிமைப் பத்திரத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

நான்கு சுவிசேஷங்களிலும் இயேசுவின் ஐந்நூறு போதனைகள்உள் ளதாக அறிஞர்கள் நமக்குச் சொல்கின்றனர். சுவிசேஷங்களின் மூன் னுரை மற்றும் மத்தேயு சுவிசேஷத்தைப் பற்றிய சுருக்கமான ஆய்வில் அவரின் போதனைகளில் சிலவற்றை மட்டும் பகிர்ந்து கொண்டேன். உன்னத ஊழியத்தை நாம் பரிசீலனை செய்யும்போது சீடர்களை உரு வாக்கும்போது, இயேசு அவரது சீடர்களுக்கு கற்றுத்தந்த அனைத்தை யும் ஊழியர்களுக்குக் கற்றுத்தர வேண்டியுள்ளது என்பதை நாம் கண்டு கொள்கிறோம்.

நமது அடுத்த புத்தகத்தில், சுவிசேஷங்களைத் தொடர்ந்து ஆய்வு செய்வோம். இயேசு கிறிஸ்துவின் அற்புதமான சரித்திரத்தை நீங்கள் தொடர்ந்து படிப்பீர்களென நம்புகிறேன் இறுதியாக, சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். இயேசுவை கிறிஸ்துவாக, மேசியாவாக, வாக்களிக்கப்பட்ட ஒருவராக நீங்கள் அறிந்துக்கொண்டீர்களா? உங்கள் பாவத்திற்கான விலையாக இருந்த இயேசுவின் மரணத்தை நம்புகிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவின் ஒரு சீடனாக அல்லது அவரைப் பின்பற்றுகிறவராக இருக்க வேண்டும் என தீர்மானம் செய்து விட்டீர்களா? நீங்கள் கற்றுக்கொண்டதை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்?